
கல்கி

KALKI 2-3-80 90 காசு



இனிமே, உட்கார்ந்தா சறுக்கு பலகை இருக்கிற `பார்க்'கா பார்த்து உட்காரணும்!

எதிரொலிக்கும் எல்லா திசைகளிலும்



நம்புங்கள் திருப்தியோடு
உங்களுக்கு நல்லவையே
கிடைக்கும். பேரானந்தம்
பெருக அணிந்திடுவீர்
அளவிலா மகிழ்ச்சியை.

மபத்லால் இன்டஸ்ட்ரீஸ் நியூ ஷொராக் மில்ஸ்
மபத்லால் ஃபைன்

சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள், சேலைகள்
உடுப்புத் துணிகள், மற்றும் டெனிம்கள்.

79/MFI/313-tm

பார்த்தாஸ்
டெக்ஸ்டைல்ஸ்


உங்கள் ஜவுளி தேவைகளுக்கு
தென்னகத்தின் தலைசிறந்த
ஜவுளி ஸ்தாபனம்

பார்த்தாஸ்
நாகர்கோவில்

கோட்டயம், எர்ணாகுளம்,
சங்கனாச்சேரி, ஆற்றிங்கல்,
காயங்குளம் & K.L.R. பாம்பே

Mgd. by
M. Srinivasa Reddiar

இந்தியாவிலேயே அதிக புகழ்பெற்ற 5 வருடம் உத்திரவாதமுள்ள மெரி ஷுவர் ஸ்பெஷல் தங்க கவரிங் நகைகளை (15 வருட ஆராய்ச்சியின் பயனாக இந்தியாவில் முதன் முறையாக தயாரித்து) இந்தியா முழுவதும் அதிக அளவில் வி.பி.பி. மூலம் அனுப்பி வரும் ஒரு மிகச் சிறந்த ஸ்தாபனம். விவரங்களுக்கு இலவச கேடலாக் வாங்கிப் பாருங்கள்.



இதில் உள்ள நம்பர்களைக் குறிப்பிட்டு எழுதினால் வி.பி.பி. மூலம் பொருள்கள் அனுப்பப்படும் (வி.பி.பி. சார்ஜ் தனி)

(ஸ்தா. 1963)

மெரி கோல்டு கவரிங் வொர்க்ஸ்

14, அரங்கநாதன் தெரு, தி. நகர்,
சென்னை - 600017.



Our Stockists:

1. M/s D. Srinivasa Iyengar, Maligai, West Car Street, Chidambaram & Cuddalore
2. M/s K. S. Muthuswamy Iyer Son R. V. Venkatarama Iyer, Maligai, Railady, Mayuram
3. M/s R. Ganapathi Pillai, Maligai, Railady, Mayuram
4. Thanjavur Cooperative Wholesale Stores Ltd., Thanjavur
5. Mayuram Cooperative Wholesale Stores Ltd., Mayuram
6. M/s A. V. M. Muthukrishnan & Bros, Pudupalayam, Cuddalore
7. M/s P. Ramalingam, 26, Bhandarkar Road, Matunga, Bombay-19
8. M/s P. V. R. K. & Co., 321, Avenue Road, Bangalore-2
9. M/s Geetha Stores, 115, Jeweller Street, Bangalore-1

★

எங்கள் புதிய D L C பிராண்ட்
அக்மார்க் நெய் 16 kg & 4 kg
கிடைக்குமிடம்

M/s Bharathi & Co
27, Mundy Street, Vellore-4

★

Dhanalakshmi & Co
21-B, M. G. Pudur 1st Street,
Tirupur—638604

Kalki Shopping Page



எண்ணமெல்லாம் இனித்திடுதே!
இதயமெல்லாம் களித்திடுதே!

வண்ணக் கோலங்கள் அள்ளித்தெளித்து வரும் **காஞ்சி சில்க்** அழகு கண்டு! **காஞ்சி சில்க்** பட்டுச் சேலைகள் கலை நயமுடையவை! விலை நியாயமானவை! நீடித்து உழைப்பவை! நிறைவு தருபவை! இன்னும் நவீன மில் துணி வகைகள்! நயமான கைத்தறி ரகங்கள்!

காஞ்சி சில்க் பேலஸ்

6/53, பாண்டி பஜார், தி. நகர், சென்னை-600 017

எந்த சேலைக்கும் மேட்ச் ஆகும் சோளிகள் எங்களிடம் உண்டு.
எந்த சோளிக்கும் மேட்ச் ஆகும் ஸ்லீவ்ஸ் ஏராளம் உண்டு.

RAJATHI



national 746

வெஸ்டெர்லி சப்தமின்றி சுழலுவதுடன் அதிக அளவு காற்றையும் அளிக்கவல்லது. 30% வரை மின்சாரச் செலவை மிச்சப்படுத்துகிறது. நான்கு வித குளிர்ச்சி மிகு வண்ணங்களில் கிடைக்கிறது.

வாங்குங்கள்

வெஸ்டெர்லி

ஒரு அற்புதமான ஃபேன்!

THE BIOGRAPHY OF

RAJAJI

by

RAJMOHAN GANDHI

PRICE Rs. 45/-
(Postage Rs. 3/- extra)

★

BHARATHAN PUBLICATIONS PRIVATE LIMITED
Guindy, Madras-600 032



மகாமகம்

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாசி மாதத்தில் பௌர்ணமி தினத்தில் மகா மகம் கொண்டாடப்படுகிறது. அன்று குரு பகவான் சிம்ம ராசியில் நுழைகிறார். அப்போது மகா மகக் குளத்தில் லக்ஷக்கணக்கான மக்கள் புனித நீராடுவார்கள். நவ கன்னிகைகள் என்று சொல்லப்படும் யமுனை, கங்கை, ஸரஸ்வதி, நர்மதை, கோதாவரி, காவேரி, மஹாநதி, பயோஷ்ணி, சரயு என்ற ஒன்பது நதிகளும் மகா மக குளத்தில் சான்னித்தியம் செய்வதாக இந்துக்களின் திடநம்பிக்கை. இந்தியாவின் பல பாகங்களிலிருந்து யாத்திரிகர்கள் இக்குளத்தில் புண்ணிய ஸ்நானம் செய்ய விஜயம் செய்கிறார்கள். இவ்வாண்டு மார்ச் முதல் தேதி இப்புண்ணிய தினம் வருகிறது.

மகாமகக் குளத்தில் ஒன்பது கிணறுகள் உள்ளன. ஒன்பது புண்ணிய நதிகளும் இக்கிணறுகளில் புகுவதாக ஐதீகம். குளத்தின் வட கரை மேல் அமைந்திருக்கும் காசி விசுவநாதர் கோவிலில் இக்கன்னிகைகளின் மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. நவ கன்னிகைகள் இங்கு வருவதால் இக்குளத்துக்குக் ''கன்னியா தீர்த்தம்'' என்றும் பெயர். அமிர்தம் வீழ்ந்ததால் ''அமிருத நாபி'' என்ற பெயரும் உண்டு.

✖ கும்பகோணம் மகாமக குளம்; அபிமுகேசுவரர் கோவில் கீழ்க்கரையில் உள்ளது.

✖ ராமசாமி கோயில் சிற்பம்.





சேகர்: டேய் போன மாமாங்கத்துக்கும் இந்த மாமாங்கத்துக்கும் இடையே நடந்த முக்கியமான நிகழ்ச்சி உன் வாழ்க்கையிலே என்னடா?


சந்தர்: போன மாமாங்கத்திலே மெடிக்கல் காலேஜிலே முதல் வருடம் படிச்சிகிட்டு இருந்தேன். இந்த மாமாங்கத்திலே ஐந்தாவது வருடம் படிக்கிறேன்!



நடிகை: போன மாமாங்கத்தின் போது எனக்கு வயது பத்து. கூட்டத்திலே போக பயம். அதனால் நான் மகாமகம் போகலே.

நிருபர்: இப்ப போவீங்களா?

நடிகை: இப்ப எனக்கு பதினாறு வயசு தானே ஆவுது? எப்படி போகமுடியும்? பயமா இருக்காதா?



எழுத்தாளர்: எனக்கும் மாமங்கத்துக்கும் ரொம்ப நெருக்கம் உண்டு

நண்பர்: என்ன?

எழுத்தாளர்: மாமாங்கம் 12 வருஷத்துக்கு ஒரு தடவை வரும். நான் எழுதற கதையும் 12 வருஷத்துக்கு ஒரு முறைதான் பத்திரிகையிலே பிரசுரமாகும். — மு. ரவீந்திரன்

மகா மகத்தின்போது கும்பேசுவரர், சோமேசுவரர், நாகேசுவரர், கௌதமேசுவரர், பாணேசுவரர் ஆலயங்களின் விக்ரஹ மூர்த்திகள், மற்றும் பல மூர்த்திகளும் குளக் கரைக்கு வருவார்கள். அவற்றை அங்கு ஸ்நானம் செய்விப்பார்கள். அவ்வமயம் மக்களும் மூழ்கிப் பயனடைவார்கள்.

தமிழ் நாட்டில் உள்ள அழகான குளங்களில் மகாமக குளமும் ஒன்று. அதன் கரையில் அமைந்திருக்கின்றன பதினாறு மண்டபங்கள், மற்றும் கோயில்கள். ஒவ்வொரு கோவிலிலும் ஒரு சிவலிங்கம் உள்ளது. இவைகளை "ஷோடசலிங்கம்" என்று கூறுவர். இக்குளத்தின் விஸ்தீரணம் சுமார் ஆறு ஏக்கர். அழகான படிக்கட்டுக்கள் கட்டப்பட்டுள்ளன.

கும்பகோணத்தில் யாத்திரிகர்கள் கண்டு ரசிக்கவும் வழிபடவும் தக்க மிகவும் சிறப்பான பெரிய ஆலயங்கள் பல உள்ளன.

சரித்திர காலம் தொட்டு மகாமக குளம் போற்றப்பட்டு வந்துள்ளது. பல வகையான உடல் கோளாறுகள் இங்கு மூழ்குவதால் குணமடைகின்றன என்பதற்குப் பல புராணக் கதைகள் உள்ளன. இப்புனித தினத்தில் பராசக்தி தன் முழு ஆற்றலுடன் வெளிப்படுகிறாள் என்பது நம்பிக்கை.

சிருஷ்டி கர்த்தாவான பிரமன் பிரளய காலத்தில் மீண்டும் சிருஷ்டி செய்யும் வகை எவ்வாறெனத் தெரிவிக்கும்படி சிவபெருமானைக் கேட்டார். சிவன், 'பிரளயத்துக்குப் பின் பல க்ஷேத்திரங்களிலிருந்து திரட்டப்பட்ட மண்ணினால் செய்யப்பட்ட ஒரு கலசம் அமிருதம் ஏந்தி நீரோட்டத்தில் மிதந்து காட்சியளிக்கும். பின்பு ஒரு க்ஷேத்திரத்தில் நிலையாக நின்றுவிடும். அந்த அமிர்த கும்பம் தமது அம்பினால் உடைக்கப்பட்டதுமே சர்வ சிருஷ்டியும் தோன்றும்' என்று அருளினார்.

மிதந்து நகர்ந்து கொண்டிருந்த கலசம் கும்பகோணம் பக்கலில் வந்ததும் பரமசிவன், வேடம் உருவம் கொண்டு அக்குடத்தை உடைத்தார். தற்போது பாணதுறை என்று கூறப்படும் இடமே சிவன் அம்பு எய்த இடம். கலசத்தில் இருந்த அமுதம் நாற்புறமும் சிதறியது. இவ்வாறு சிதறியதன் விளைவாகத் தோன்றியவையே மகாமகக் குளமும் மற்ற தலங்களும். மகாமகக் குளத்தின் பக்கலில் உள்ள கும்பேசுவரர் தேவாலயத்தில் தரிசனமளிக்கும் சிவலிங்கம்தான் "ஆதி கும்பேசுவரர்". அந்தக் கும்பம் அம்பினால் உடைக்கப்பட்டபோது அது கோண வடிவமாகச் சாய்ந்ததாம். அது உடைந்து சாய்ந்த இடத்துக்கு "கும்பகோணம்" என்ற பெயர் உண்டாயிற்று.

கும்பகோணம் நகருக்குத் திருக் குடந்தை என்ற பெயரும் உண்டு. வைணவர்கள் இப்பெயரை வெகுவாக வழங்குகின்றனர். பண்டைய சைவ இலக்கிய நூல்களில் இதற்குக் 'குடமூக்கு' என்று பெயர் வழங்குகிறது.

கட்டுரை, புகைப்படங்கள்:
என். ராமகிருஷ்ணா

ராஜம் கிருஷ்ணனுக்கு ஹேமா ஆனந்ததீர்த்தன் பதிலளிக்கிறார்.

“சாகித்ய என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள்!”



17–2–80 இதழ் கல்கியில் சகோதரி ராஜம் கிருஷ்ணன் அவர்கள் சாகித்ய அகாதமியைத் தாக்கி, திரு ஜானகிராமனைத் தாக்கி எழுதியிருந்த குறிப்பைப் பார்த்து மனம் வருந்தி இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்.

ஸ்ரீமதி ராஜம் கிருஷ்ணன், ஸ்ரீமதி லக்ஷ்மி ஸ்ரீமதி அநுத்தமா ஆகியவர்கள் கலந்து கொண்டு பேசிய ஒரு கூட்டத்தில் எனக்கும் பேச வாய்ப்புக் கிடைத்தபோது நான் குறிப்பிட்டேன் — ''பெண்களை இழிவு படுத்துகிறார்கள் என்கிற கூக்குரலை எழுப்புவது சிலருக்கு ஒரு Phobia வாகப்போய் விட்டது'' என்று. அதையே மீண்டும் வற்புறுத்த வேண்டியவளாக இருக்கிறேன்.

''காமாலைக் கண்ணனுக்குக் காண்பதெல்லாம் மஞ்சள்'' என்பது போல இவர்களுக்குத் தங்களின் தாழ்வு மனப்பான்மை என்கிற காமாலை நோயால் மற்றவர்களின் எழுத்துக்களில் இல்லாத குறையெல்லாம் தென்படுகின்றன. உதாரணமாக ''கல்கி'யில் நான் எழுதியிருந்த ''பன்னிரண்டு பெண்களும் ஒரு ஆணும்'' என்கிற கதை நகைச்சுவை நோக்கோடு ஒரு காரியாலயத்தில் பணி புரிகிற பெண்களைப் பற்றிய கதை. காரியாலயங்களில் பணி புரிகிற பல பெண்களே பெருந்தன்மையோடு அந்தக் கதையைப் பாராட்டி என்னிடம் கூறினார்கள். ஆனால் ஒரு பிரபல பெண் எழுத்தாளருக்கு அந்தக் கதை நான் பெண் எழுத்தாளர் சங்கத்தைக் கேலி செய்து எழுதியதாகப் பட்டிருக்கிறது. அவர் அந்த எண்ணத்தில் என்னிடம் தொலைபேசி மூலம் வெகுவாகக் கோபித்துக் கொண்டார்.

ஆண்களை இழிவுபடுத்தும் கதைகள் எவ்வளவு வெளிவந்திருக்கின்றன இதுவரை! எந்த ஆணாவது அதைக் குறித்துக் கோபித்துக் கொண்டது உண்டா? பின் பெண்களுக்கு மாத்திரம் ஏன் இவ்வளவு கோபம் வருகிறது? அவர்களுடைய சக்தியில் அவர்களுக்கே நம்பிக்கை இல்லாததுதான் காரணம்.

சோரம் போன பெண்ணைப் பற்றிக் கதை எழுதக் கூடாதென்றால், ஆண்களை முரடர்களாகவும், குடிகாரர்களாகவும், சோம்பேறிகளாகவும், வஞ்சகர்களாகவும், தேசத்துரோகிகளாகவும், சூதாடிகளாகவும், மனைவியையும் பெண்ணையும் விற்றுப் பிழைப்பவர்களாகவும் இன்னும் எவ்வளவெல்லாம் கேவலப்படுத்திக் கதைகள் வந்துள்ளன? நான் மேலே குறிப்பிட்ட தீயகுணங்கள் ஆண்களுக்கு மட்டுமே உரித்தானவையல்ல. ஆண்களைத் தூக்கிக் காற்றிலே பறக்கவிடும் அளவுக்கு அவர்களை மிஞ்சக் கூடிய பெண்கள் இருக்கிறார்கள். ஆண் — பெண் என்பதல்ல முக்கியம். இழிகுணங்களுடைய யாரையுமே கதைகளில் படைக்க வேண்டாம் என்றால் (பிறகு கதையே இல்லை என்பது வேறுவிஷயம்) ஒரு மட்டும் புரிந்து கொள்ளலாம். அப்படி இல்லாமல் இழிகுணங்களையுடைய பெண்களைப் பற்றி மட்டும் எழுதாதீர்கள் என்று சொல்வது எந்த நியாயத்தில் சேர்ந்தது?


கலை கலைக்காகவே என்பது அபத்தம் என்கிறார் சகோதரி. இதைவிட அபத்தமான இன்னொரு கூற்று இருக்க முடியாது. அவருடைய கூற்றைப் பெண்களே ஒத்துக்கொள்ள மாட்டார்கள். சகோதரியின் கூற்றுப்படி பார்த்தால் பெண்கள் தங்கள் மானத்தை மறைக்க ஐந்து கஜம் புடவை ஒன்றை (எந்த வண்ணத்திலோ, எந்த ரகத் துணியிலோ) சுற்றிக் கொண்டால் போதும். ஏன் புடவைக் கடையில் ஒரு புடவையைத் தேர்ந்தெடுக்க முக்கால் மணி நேரம் செலவிடுகிறார்கள்? பஜனைகளுக்கும் ஹரி கதைகளுக்கும் மட்டும் போனால் போதும். சங்கீதக் கச்சேரிகளுக்குப் போய் ஆலாபனையையும் ஸ்வரப் பிரஸ்தாரங்களையும் தாளலயங்களையும் ரசிப்பானேன்? ஓவியங்களையும் சிற்பங்களையும் ரசிப்பானேன்?


''சாகித்ய'' என்ற வார்த்தையின் பொருளே இலக்கியம். அந்த அகாதமி இலக்கியப் படைப்புக்களுக்குப் பரிசளிக்காமல், மனிதனின் பண்பாட்டை உயர்த்தும் படைப்புக்களுக்கே பரிசளிக்க வேண்டுமென்றால், வாரியார் பிரசங்கங்களுக்கும் திருக்குறள் புது உரைகளுக்கும், வள்ளலார் வாழ்க்கைச் சரிதம் போன்ற நூல்களுக்கும் தான் பரிசளிக்க வேண்டும்.

சில பெண் எழுத்தாளர்களின் இந்த அர்த்தமற்ற போக்குக்கு ஆதரவு அளிப்பது போல் தாங்களும், பிற பத்திரிகைகளும் பெண்களுக்காகச் சிறப்பிதழும், பெண்களுக்காகப் போட்டிகளும் ஏற்படுத்தி அவர்களை ஆண்களிடமிருந்து பிரித்து வைக்கப் பார்ப்பது வருத்தத்துக்குரியது. முற்போக்கு எண்ணம் கொண்ட பெண்களே இதை விரும்ப மாட்டார்கள்.

உண்மையிலேயே பெண்கள் முன்னேற வேண்டுமானால் கூடுமானவரையில் அவர்களை இவ்வாறு தனிமைப்படுத்துவது, பிரித்து வைப்பது இவை குறைய வேண்டும். எழுத்தாளர் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் எழுத்து சம்பந்தப்பட்டவரையில் அவர்கள் பிரச்னை ஒன்றுதான். அப்படி இருக்கப் பெண் எழுத்தாளர்களுக்கு எதற்காகத் தனிச் சங்கம்? தனிச் சலுகைகள்?

பொறியைத் தட்டியதுமே...





உங்கள் பூஜை அறைக்கு,
உன்னதமானதொரு விளக்கு!

வீட்டினுள்ளே காம்ப்டாலக்ஸ்
ஒளிரட்டும்...ஓ ...அழகைத்
தனித்தொளிரச் செய்யும்
அதன் பாங்கே சிறப்புத் தான்!

PE-J-4087



காம்ப்டாலக்ஸ், எடுத்துப்பொருத்திடக் கூடிய, எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட். ஷேடுகளோ, விசேஷ இணைப்புகளோ தேவையில்லை. பொறியைத் தட்டுங்கள். வேண்டிய வெளிச்சம் உடனே பரவட்டும்.

PHILIPS

PHILIPS 50


காம்ப்டாலக்ஸ்

எடுத்துப் பொருத்திடலாம், எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட்

பிலிப்ஸ்

மகளிர் சிறப்பிதழின் முதல் சிறப்பு!

வட்ட மேஜை



● மகளிர் சிறப்பிதழின் முதல் சிறப்பு இதனை ஒரு பெண்மணியே தயாரித்து அளித்திருப்பது. குயிலி ராஜேஸ்வரி மிக்க ஆர்வத்துடன் கடின உழைப்புடன் அநேக பெண்மணிகளைக் கண்டு பேசி, நறுமணம் வீசும் மலர்கள் கொண்ட மாலையைப் போல் இதனை வெளிக் கொணர்ந்துள்ளார். அவருக்கு எனது பாராட்டுக்கள். இதழைப் படித்ததும் 'பெண்மை வாழ்க' என்று கூத்திடுவோமடா' என்ற மகாகவி பாரதியின் வாக்கியங்களே நினைவுக்கு வருகின்றன.

சென்னை-34 தங்கம் ஜெயராமன்

● சங்க காலம் முதல் இக்காலம் வரை புகழ் பெற்ற மாதரசிகளைப் பற்றிய கட்டுரைகள், துணுக்குகள் எதுவுமே இல்லையே?

நெல்லை-7 எஸ். தாயம்மாள்

● தலையங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறமாதிரியாகப் பெண்ணினத்துக்கு இழைக்கப்படும் கேடுகள் ஒழியும்வரை இந்தச் சமுதாயம் முன்னேறியதாகக் கருத முடியாது. ராஜம் கிருஷ்ணனின் கருத்துக்கள் பற்றிப் பலரது நோக்கு பலவிதமாக இருப்பினும் ''சாகித்ய அகாதமி ஒரு தனிப்பட்ட அமைப்பல்ல. தேசிய நிறுவனம். அது நமது நாட்டின் ஒழுக்க மேம்பாட்டையும், பண்பையும் கலா சாரத்தையும் பிரதிபலிக்கும் உயர்ந்த எழுத்துக்களையே கௌரவிக்க வேண்டும்'' என்ற கருத்தை சாகித்ய அகாதமியார் என்றும் நினைவில் கொண்டு செயலாற்றினால்தான், அதனுடைய நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

செங்கவல்லி முருகவேள்

● பெண்ணினம் இழிவுபடுத்தப்படுவதாக தலையங்கத்தில் எழுதியிருந்தீர்கள் — வரவேற்கிறேன். அதே சமயத்தில் ''மங்கையராகப் பிறப்பதற்கே மண்ணில் மாதவம் செய்திட வேண்டுமம்மா'' என்ற பாரதி கூறும் பெண் இனத்தை இப்போது நம்மால் காணமுடியவில்லையே? நமது பண்பாடுகளைப் பேணும் எந்தப் 'பெண்மை'யையும் நாம் ஆராதிப்போம்; நமது பண்பாடுகளைத் தூக்கி எறியும் பெண்(புன்)மையை நாம் புறக்கணிப்போம்!

வீரபாண்டி வதிலை அன்புச்செல்வன்

● மடமையைக் கொளுத்துவோம்' என்ற தலையங்கத்தைப் படித்தேன். மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் இந்தத் தலையங்கம் எல்லாம்எழுதுவதற்குரியதார்மீக உரிமையை நீங்கள் இழந்து பல நாட்கள் ஆகிவிட்டன.

சீழ்த்தரமான கதைகளை எழுதுவதிலேயே புகழ் பெற்றுள்ள தமிழ் எழுத்தாளர்கள் எல்லாரும் கல்கியில் கதைகள் எழுத ஆரம்பித்து கல்கி இப்போது தான் 'களை' கட்டி இருக்கிறது. இன்னும் இருவர் வந்து சேர்ந்தால் பூரண 'களை' கட்டி விடும். இந்த அழகில் பிராயச்சித்தமாகத் தலையங்கம் வேறு.

சென்னை-30 வி. ரங்கராஜன்

● 'வேண்டாம் கருச்சிதைவு' பற்றிய கட்டுரை நன்றாக இருந்தது. ஆனால் அப்பகுதியில் அந்த ஓவியம் வேண்டுமா? கல்கி யிலும் இத்தகைய மாற்றமா?

ஸ்ரீரங்கம் ரங்கநாயகி சம்பத்குமார்

● ராஜம் கிருஷ்ணன் தமது ராஜினாமாவுக்குக் கூறும் காரணம் விசித்திரமானது.

இந்த அறிக்கையை அவர் தவிர்த்திருக்கலாம் என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். நான் இருவரின் எழுத்திலும் மயங்கியிருப்பவன். இருவரில் யாருக்கு மாசு ஏற்பட்டாலும் எனக்கு ஒவ்வாது.

மைசூர் கி. நாச்சிமுத்து

● சாகித்ய அகாதமி ஆலோசனைக் குழு உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்த சகோதரி ராஜம் கிருஷ்ணன், சரியான — முறையான — நியாயமான காரணங்களை முன்னிறுத்தி விலகியிருப்பது பாராட்டுக்குரியது.

பெரியவர் ஜானகிராமனின் 'எழுத்து' பற்றிய அவரது மதிப்பீடு — எனக்கும் உடன்பாடு. 'ஓகோ' என ஆங்கில இதழிலும் மொழி பெயர்க்கப்பட்டு வெளியான — தமிழில் மீண்டும் மீண்டும் அச்சேறும் அவரது 'பிரபல' நெடுங்கதை கூட வேறு என்னவாம்? பொதுவாக 'அது' இல்லாத அவரது எழுத்தோவியம் ரொம்ப, ரொம்ப அபூர்வமே!

இராஜ பாளையம் குன்றக்குடி பெரிய பெருமாள்

● மகளிர் சிறப்பிதழுக்கேற்றபடி, சிவசங்கரியின் புதிய தொடர்கதை சிறப்பாக அமைந்துள்ளது. சிறப்பிதழில் உள்ள அம்சங்கள் அனைத்தும் அவர் கதைக்கு இட்டுள்ள 'அம்மா' என்ற தலைப்பில் சங்கமம்.

பெங்களூர் பரணி

● மகளிர் சிறப்பிதழைப் பற்றி நான் எதுவும் வாயைத் திறக்கப் போவதில்லை; நமக்கு ஏன் சார் வம்பு! அதுவும் இப்போ இந்திரா காந்தி ஆட்சி. என்ன சொல்கிறீர்? எங்களுக்கு எப்பொழுது கல்கி—ஜீயாஜீ சூட்டிங், சர்ட்டிங் பரிசுத் திட்டம்?

சென்னை—5 எஸ். வி. ராஜசேகர்

● மகளிர் சிறப்பிதழில், கதை, பேட்டி, துணுக்கு, போட்டி — என்று எல்லா இடத்திலும் பெண்கள் மயமாயிருக்க, ஓவியர்களுக்கு நீங்கள் கோபுலு, ஜெயராஜ், மாருதி,மூர்த்தி உமாபதி, வினு, கல்பனு — என்று ஆண் ஓவியர்களை நம்ப வேண்டியிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது எங்களுக்கு ஒரு ஆறுதலான மகிழ்ச்சி!

திருச்செந்தூர் ஆ. சீனிவாசன்

நீச்சலும் எதிர் நீச்சலும் — சுமித்ரா



இந்த பிரெஞ்சுத்திரைப்படத்தின் புகைப்பட ஸ்டில்லைப் பார்த்தவுடன் எனக்கு முதலில் ஞாபகம் வருவது நான் நீச்சல் உடை உடுத்தி நடித்த காட்சிதான். 'ஸ்விம்மிங் பூல்' என்பது அந்த மலையாளப் படத்தின் பெயர். அப்படத்தின் இயக்குனர் சசிகுமார். நான் நீச்சல் உடை அணிந்து தோன்ற வேண்டும் என்று கூறினார். உடனே ஆக்ரோஷமாக மறுத்தேன். ஆனால் கதைப் பிரகாரம் நான் நடித்தே ஆக வேண்டும் என்பது புரிந்தது. காரணம் அந்தப் படத்தில் நான் ஒரு நீச்சல் சாம்பியன்! நீச்சல் சாம்பியனின் ஆரம்ப நாட்களில் நீச்சலே அவள் எப்படிக் கற்றிருள் என்பதைக் காட்டுகிறார்கள்.

எனக்கு நீச்சல் கற்றுத் தருபவராக மறைந்த ராணி சந்திரா நடித்தார். வேறு வழியில்லாமல் நானும் ஒப்புக்கொண்டேன். ஆனால் ஆரம்பத்தில் நான் செய்த ஆர்ப்பாட்டங்கள்! நீச்சல் உடை அணிந்து நடிக்க வேண்டியிருக்கிறதே என்பதற்காகக் கிட்டத்தட்ட மூன்று நாட்கள் அழுதிருக்கிறேன்! இதே படத்தின் ஒரு காட்சியைச் சென்னைக் கடற்கரையில் அலைகளின் நடுவே எடுத்தார்கள். நடித்துக் கொண்டிருந்த நான் திரும்பிப் பார்த்தேன். தூக்கி வாரிப் போட்டது. டைரக்டர் எஸ். பி. முத்துராமனும் அவரது குழுவினரும் எங்களது படப்பிடிப்பு நடந்த இடத்திலிருந்து சிறிது தூரத்தில் வேறு ஒரு படப் பிடிப்பு நடத்திக் கொண்டிருந்தார்கள். நான் பார்த்த அதே சமயத்தில் அவரும் என்னைப் பார்த்துக் கை அசைத்தார். அன்றிரவு மறுபடியும் என் அழுகை தொடர்ந்தது, டைரக்டர் எஸ். பி. எம். வேறு என்னை நீச்சல் உடையில் பார்த்து விட்டாரே என்று! அவர் பலபேரிடம் கூறிவிடுவாரோ என்ற பயம் வேறு.

நான் இப்படிப் பயந்ததற்குக் காரணம் உண்டு. மலையாளத்தில் ஒவ்வொரு படத்திலும் வெவ்வேறு விதமான பாத்திரங்கள் கிடைக்கும். முதல் படத்தில் என்ன வேடம் ஏற்ருரோ அதேபோல்தான் காலாகாலத்துக்கும் ஒருவர் நடிக்க வேண்டும் என்பதல்ல. ஆனல் தமிழில் இதற்கு நேர் மாருக உள்ளது! ஒரு படத்தில் நடித்துவிட்டால் திரும்பத் திரும்ப மற்ற எல்லாப் படங்களிலுமே அதே மாதிரி வேடத்தைத்தான் நடிகர் எதிர்பார்க்கலாம். இதன் காரணமாகவே நான் தமிழில் நீச்சல் உடையில் நடிக்கவில்லை. ''நீச்சல் குளம்'' என்ற மேற்சொன்ன மலையாளப் படத்தில் சில நீச்சல் வீரர்களும் வீராங்கனைகளும் பல்வேறு சாகஸங்களைச் செய்து காண்பித்தார்கள். உண்மையிலேயே நான் அதிசயித்தேன்.

எல்லோருக்கும் நீச்சல் தெரிந்திருப்பது நல்லது. தினம் தினம் கடலையோ ஆற்றையோ ஏரியையோ சந்தித்துக் கொண்டிருக்கப் போகிறோம் என்பதற்காக அல்ல. ஒரு சமயத்துக்கு நிச்சயம் உதவும். நல்ல தேகப் பயிற்சியும் கூட. மேலும் எதிர் நீச்சல் போடத் தெரிந்திருக்க வேண்டும் அல்லவா? — வாழ்க்கையில்தான்!

என்ன... என்ன கேட்கிறீர்கள்? நான் நீச்சல் உடையில் இருக்கும் புகைப்படமா! மூச்!

பேட்டி: **சலன்**

அடுத்த இதழில் நடிகர் **விஜயன்** சொல்கிறார்.

சினி ஸ்டில்லும் சிந்தனையும்






வளைஞ்சதை நிமித்தி, ஒடிஞ்சதை ஒட்டி தட்டி சரி பண்ணி, இந்த ஆளையும் நிமிர வெச்சுடலாம்! ...நம்ம கிட்ட டாக்டரும் இருக்கார்!
ஜனதா அலுவலகம்
கழுத்தைப் புடிச்சு வெளியே தள்ளினா-லும் போகமாட்டேன்!
ஓஹோன்னாலும்! இலங்க வெத்தில பாக்கு வெச்சு அழைச்சாலும் உள்ளே வரமாட்டேன்!...ஆம்மா..
இ.காங்கிரஸ் காரியாலயம்
சுமுகமா, கௌரவமா, சமரசமா, பேச்சு வார்த்தை-கள் நடந்து கொண்டிருக்-கின்றன!

1980 மார்ச் 2
சித்தார்த்தி மாசி 19
மலர்: 38 இதழ்: 31



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

உயர்ந்த முழக்கங்கள்; தாழ்ந்த செயல்கள்!

புதிய பொலிவுடன் அரியாசனம் ஏறியுள்ள பழைய பிரதமரிடம் தர்க்கம், நியாயம், தர்மம், நேர்மை என்றெல்லாம் எதிர்பார்ப்பது முட்டாள் தனம். என்றாலும், தமிழ்நாட்டில் தேர்தலில் நின்று, ஆட்சியைப் பிடித்து, இன்று வரை சட்டமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ள ஆட்சியைக் கலைப்பது அநீதியின் உச்சமாகும். இந்த அநீதிக்குப் பகிரங்கமாகத் துணை நின்ற, தூபமிட்ட தி.மு.க. தலைவர் தமது வரலாற்றில் துடைக்க முடியாத களங்கத்தைச் சேர்த்துக் கொண்டுள்ளார்.

ஒரு காலத்தில் காங்கிரஸ்காரர்களை டில்லிக்குக் காவடி எடுப்பதாக தி. மு. க. கேலி செய்தது உண்டு. இப்போது திரு. கருணாநிதி செய்வது வேறென்னவாம்? சட்டமன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர்களை இழுப்பதில் தோல்வி கண்டவர், டெல்லியின் உதவியை நாடி, அன்னையின் தயவைத் தேடி, 'கப்பம்' கட்ட ஒப்பந்தம் செய்துகொண்டு மீனம்பாக்கம் திரும்பி மாலை போட்டுக் கொள்வது தமக்குத்தாமே தேடிக் கொண்ட மகத்தான இழிவாகும்.

''உயர்ந்த கோபுரங்கள், தாழ்ந்த உள்ளங்கள்'' என்று 'பராசக்தி' படத்தில் ஒரு வசனம். அதே பாணியில் இன்று தி.மு.க. வைப் பார்த்துச் சொல்லத் தோன்றுகிறது: ''உயர்ந்த முழக்கங்கள், தாழ்ந்த செயல்கள்!''

சென்னை-5 எஸ். வாணிசங்கர்

கல்கி நேயர் வாணி சங்கர் பிரத்யட்ச நிலைமையை வன்மையான வார்த்தைகளைக் கையாண்டு வாய்மையோடு சித்திரித்திருக்கிறார். தலையங்கத்தின் தொடக்கமாகவே அவர் கடிதத்தைப் பிரசுரிப்பதில் பெருமையடைகிறோம்.

முன்பு ஜனதா அரசு மாநில சட்டசபைகளைக் கலைத்ததற்கும் இப்போது இந்திரா கலைத்துள்ளதற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. முன்பு இருந்த மாநில அரசுகளில் பெரும்பாலானவை அவற்றின் நியாயமான கால அளவு முடிந்த பின் நெருக்கடி நிலை காலத்தில் ராஷ்டிரபதி உத்தரவினால் வாழ்வு நீடிக்கப்பட்டவை. இதனை வாஜ்பாய் மட்டுமின்றி அன்றைய சுப்ரீம் கோர்ட் தீர்ப்பும் சுட்டிக் காட்டியுள்ளது. இன்றுள்ள சட்டசபைகளின் கால வரம்பு இன்னும் முடியவில்லை.

ஒரு வாதத்துக்காக அன்று ஜனதா அரசு செய்தது தவறு என்றே கொள்வோமாயினும் ''ஜனதா செய்த தவற்றை நான் செய்ய மாட்டேன்'' என்று கூறுவதுதான் பிரதமருக்குப் பெருமையே தவிர, ''அதே தவற்றை நானும் பண்ணுவேன்'' என்று வீம்பாக நடந்து கொள்வதில் என்ன பெருமை?

ஒன்று நிச்சயம். இந்திரா காந்திக்கு எதிர்க்கட்சிகளைச் சகித்துக் கொள்ளும் சக்தி இல்லை. இந்தச் சகிப்புத் தன்மை காட்டாத ஒருவரை சர்வாதிகாரி என்று தானே வர்ணித்தாக வேண்டும்?

எதிர்க் கட்சியினருடன் வாதாடி, நல்ல காரியங்களுக்கு அவர்கள் ஆதரவைப் பெற்று, அவர்கள் கூறுகிறவற்றில் உள்ள நியாயங்களை ஏற்றுச் செயல்படுவது சிரமமான காரியம். ஆனால் சிரமமான காரியத்தைச் செய்து காட்டுவது தான் சாதனை. ஜனநாயகம் என்பதும் இதுதான். இந்திராவுக்கு இந்தப் பொறுமை இல்லை. லோக சபையில் மிகப் பெரும்பான்மை பெற்று விட்டவர், ராஜ்யசபையிலும் பெரும்பான்மை பெறத் துடிக்கிறார்.

இந்தச் சட்டசபை கலைப்பினால் ஏற்பட்டுள்ள ஒரே நன்மை, தமிழகத்தில் மீண்டும் மதுவிலக்கை ஆளுனர் அமல் படுத்தியிருப்பதுதான். அதிகாரம் பெற்றதும் முதல் வேலையாக இதைச் செய்த ஆளுனரை வாழ்த்துகிறோம்.

திரு எம். ஜி. ஆர். ஆற்றலுடன் செயலாற்றினாரா இல்லையா என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் அவருக்கும் அவர் கட்சிக்கும் இன்று மாபெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. புரட்சித் தலைவர் தம்மீது மக்களுக்கு என்றுமுள்ள அபிமானத்துடன் இப்போது உருவாகியுள்ள அனுதாபத்தையும் திறம்படப் பயன்படுத்திக் கொள்வார் என நம்புகிறோம்.

ஒற்றன் 4X-1 சித்திரக்கதை: புஜ்ஜாய் 8



பல்லவனும் பல்வலியும்!

"என் ஒய்ஃப் நான் பேசறதைக் காது கொடுத்தே கேட்க மாட்டேங்கறா ஸார்!"

"என் ஒய்ஃப்பும் அப்படித்தான். அதனாலே நான் அவளுக்கு ஏதாவது சொல்லணும்னா ராத்திரி தூக்கத்திலே பேசற மாதிரி நடிப்பேன். எவ்வளவு ஆர்வமா எழுந்து உட்கார்ந்து கேட்கிறா தெரியுமா?" —கோ. தீபா

⌘

"இன்னிக்கு டெலிவிஷனிலே நியூஸ் வாசிக்கிற பெண் ரொம்ப வெட்கப் படறதே ஏன்?"

"அவளைப் பெண் பார்க்கறவங்க வீட்டிலே டெலிவிஷனிலேயே பார்த்துடறதாச் சொல்லிட்டாங்களாம்!"

⌘

"இன்று 'பல்லவனி'லே பதினைந்து ரூபாய் லாபம்!"

"எப்படி?"

"ஆடிக் கொண்டிருந்த பல்லை டாக்டரிடம் எடுக்கப் பல்லவனில் போகும் போது பஸ் ஆடிய ஆட்டத்தில் பல் தானாக விழுந்து விட்டது!"



சாவி கொடுத்தார்!

"கல்யாணம் பண்ணிக் கிட்டதிலேர்ந்து இவரோட கடிகாரம் ஓடலே!"

"ஏன்?"

"எல்லாச் சாவிகளையும் மனைவி கிட்டே ஒப்படைக்கும் போது தவறிப்போய்க் கடிகாரச் சாவியையும் குடுத்திட்டாராம்!"

—அ. இராமதாஸ்

✖

அவன் : என்னைக் கேட்காமல் என் பேன்டைப் போட்டு எவர்சில்வர் பாத்திரம் வாங்கின என் மனைவியைச் சரியானபடி பழி வாங்கிட்டேன்!

இவன் : என்ன செய்தே அப்படி...?

அவன் : அந்தப் பேன்ட் பாக்கெட்டில் ஐந்நூறு ரூபாய் வைத்திருந்ததா புளுகித் தள்ளிட்டேன்... இன்றுவரை புலம்பிக்கிட்டுக் கிடக்கா 'போச்சே ஐந்நூறு ரூபாய்'என்று!

உ. ராஜாஜி

இப்போது ஏராளமாக
விற்பனையாகிறது

சரவணா

மாவரைக்கும் இயந்திரம்



- நீடித்த உழைப்பு
- நிசப்தமான ஓட்டம்
- கவர்ச்சியான தோற்றம்
- முழு பாதுகாப்பான கவரிங்

சரவணா
இன்ஜினியரிங் டிரேடர்ஸ்
(சிந்தாமணி சூப்பர் மார்க்கெட் சமீபம்)
12/15-A கிருஷ்ணசாமி முதலியார் ரோடு
கோயமுத்தூர் 641002
PHONE : 34250 • 32321
GRAMS 'WETGRINDER'
-OSR

திருமண நன்றி அறிவிப்பு



கோத்தகிரி கல்கி ஏஜெண்ட் திரு J. ராஜூக்கும் பேத்தளா என்ற ஊரை சேர்ந்த திரு A. ரங்கசாமி B.A. B.T (தலைமை ஆசிரியர் மில்லிகல்லை ஸ்கூல்) அவர்களின் மகள் சரஸ்வதிக்கும் மணமகன் இல்லமான அளியூரில் 27-1-1980ல் நடந்த திருமணத்திற்கு நேரில் வருகை தந்து வாழ்த்துக்கள், பரிசுகள் அளித்த நண்பர்கள், சுற்றத்தார் மற்றும் பல முக்கியஸ்தர்கள் அனைவருக்கும் நன்றியதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்மார்க்கர் நாவில் நவிற்றிய பாட்டே
சன்மார்க்க சங்கம் தழுவிய பாட்டே
நம்புறும் ஆகமம் நவிற்றிய பாட்டே
எம்பலம் ஆகிய அம்பலப் பாட்டே

— திருஅருட்பா

விளம்பர உதவி :

THE INDO-SWISS SYNTHETIC GEM MANUFACTURING CO. LTD.
13/239, Main Road, METTUPALAYAM-641 301
Manufacturers of : ROUGH SYNTHETIC GEM STONES
(Spinel and Corundum) in various colours and finished roundels in different sizes (Used in Jewellery and for the manufacture of jewels, cup jewels etc.)

Sole Distributors for Indian Union

G. S. & COMPANY

No. 6, Jaffersha Street,
Tiruchirapalli-620 008

Rastha Gopalji
Jaipur-302 001

அம்மா படுத்திருந்த அறையை எட்டிப் பார்த்தான். கட்டிலின் கீழே பாய் விரித்து, தலையணை கூட இல்லாமல் படுத்திருந்தாள் தீபா. தூங்கி விட்டாளா?... இப்படி நிச்சிந்தையாகத் தூக்கம் கூட வருமோ?

"தீபா!" மெல்ல அழைத்தான். தன் அழைப்பு பூங்கணையாக அவளை வருடும் என்று எதிர்பார்த்தான்.

"என்னடா ராஜா வேண்டும்?" — அம்மா தான் குரல் கொடுத்தாள்.

"தண்ணீர் வேண்டும்!" — மென்று விழுங்கினான் ராஜா.

"அதோ! சுவரோரத்தில் வாட்டர் ஜக் இருக்கிறது; எடுத்துக் குடியேன்."

விரக்தியோடு தண்ணீரை எடுத்துக் குடித்துவிட்டு மேலே வந்தான் அவன்.

இவ்வளவு நடந்தும் தீபா மூச்சு விடவில்லை. சரியான கும்பகர்ணி போலிருக்கிறது! படுக்கையில் படுத்தான். தூக்கம் வரவில்லை. தலைமாட்டு விளக்கைப் போட்டுக்கொண்டு ஒரு பத்திரிகையைப் புரட்ட ஆரம்பித்தான்.

குபீரென்று நறுமணம் சூழ்ந்தாற்போல் உணரவே புத்தகத்தைத் தாழ்த்தினான். அவன் கண்களை நம்ப முடியவில்லை. கட்டிலோரம் நின்றிருந்தாள் தீபா. அவள் முகத்தில் தயக்கமும் வெட்கமும் போட்டியிட்டன.

"நீயா? வரவேணும் மகாராணி! இவ்வளவு தூரம் இங்கிதம் தெரிந்து வந்திருக்கிறீர்களே. தன்யனானேன்...!"

அவன் கேலியில் அவள் தலை குனிந்தாள்.

அவளைப் பற்றித் தன்னருகே அமர்த்திக் கொண்டான். "இப்போதாவது மனசு வந்ததா உனக்கு இங்கே வர?" மெல்லக்கிசுகிசுப்பாகக் கூறினான்.

அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டாள் அவள்.

"இப்போது சொல்; என்னருகில் வந்த பின்னும் கூட நீ தூரவே நிற்கிறாயே ஏன்? கீழே வந்து தண்ணீர் கேட்கிறேன் நீ எடுத்துத் தரவில்லையே ஏன்? அப்படி ஒரு தூக்கமா?"

"நான் தூங்கலையே..."

"ஏன் பின்னே எழுந்திருக்கவில்லை?"

அவளிடம் பதில் இல்லாமல் போகவே முகத்தை நிமிர்த்தினான். அவள் விழிகள் பனித்திருந்தன.

"ஏன் தீபா?" அவன் குரலில் பதற்றம்.

அவள் சமாளித்துக் கொண்டாள். "இந்த வீட்டுக்குப் புதியவள் நான்... எனக்கு ஏதோ ஒரு பயம்...."

"ப்பூ! இதுதானே?" அவளை ஆறுதல் படுத்தினான்.

அவள் பூக்குவியலாக அவன் மீது சாய்ந்து கொண்டாள்.

ஏங்கிக் காத்திருந்த மனங்கள் வண்ணக் கனவுகளில் மூழ்கின. இரு மனங்களின் இயல்பான சங்கமம் இனிய ஈடுபாட்டுடன் தழுவி நின்றன.

கண் விழித்தபோது புதிய அனுபவத்தில் அவன் மனம் மலர்ந்து கிடந்தது. அதற்குரியவளை அருகில் காணாமல் எழுந்து கீழே பார்த்தான்.

குளித்து முழுகிப் பூச்சூடிக் கொண்டு, புத்தம் புது பறவையாகத் தன் பணிகளில் மூழ்கிக் கிடந்தாள் தீபா.

மெல்லப் பூனை போல் கீழே வந்தான் அவன்.

அவளை அடுக்களையில் காணோம்.


அம்மா படுத்திருக்கும் அறையில் குரல் கேட்கவே மெல்ல நகர்ந்து சென்றான்.

"எப்போது எனக்கு உடம்பு சுகவீனம் வரும்னு காத்திருந்தாற்போல் ஓடி வந்தாய்! என்னைப் பார்த்துட்டாய் இல்லையா? உடனே கிளம்ப வேண்டியதுதானே? எதற்கு இந்த டேரா?" ஆத்திரப்படும் அம்மாவின் குரல் கேட்டது.

தீபா பதில் கூறாமல் நிற்பது தெரிந்தது.

திருப்பம் ஏற்பட்டால்

கோமகள்



''வந்தது வந்தாயே, வைரத் தோடு போட்டுக் கொண்டு வந்தாயா? என்ன ஒரு அலட்சியம் உங்கப்பாவுக்கு? எப்படியும் பெண்ணைப் புருஷன் வீட்டில் தள்ளிவிடலாம்னு கனவா?''

''இல்லே அத்தை! என் அப்பாவால் வைரத் தோடு வாங்க முடியவில்லே. என்னை வேலைக்கு அனுப்பவும் மறுக்கிறார் அவர். இப்போதும் என் அப்பா என்னைக் கொண்டு வந்து விடவில்லே. மாமாதான் வந்து அழைத்து வந்தார்.''

''ஓகோ! நீங்கள் ரொம்ப மானஸ்தர்கள். நீங்களாக வர மாட்டீர்கள். 'நீங்க தான் வெட்கம் கெட்டு என்னை அழைத்து வந்திருக்கிறீர்கள்' என்கிறாய். அதுதானே?''

''அப்படி இல்லே அத்தை. அப்பாவால் நீங்கள் சொல்றபடி எதையுமே செய்ய முடியவில்லே. கருணையோடு என்னைப் பற்றிச் சிந்தித்து....''

''ஓகோ, நான் கருணையற்றவள், கொடுமைக்காரி என்கிறாய்... உம்! பார்ப்பதற்குச் சாது மாதிரி இருந்து கொண்டு சரியாக வாயடிக்கிறாயே.... அப்படி என்னைக் கண்டு பயப்படுகிறவள், நேற்று இரவு என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் ஏன் திருட்டுத் தனமாக ராஜாவின் அறைக்குப் போனாய்? உம்!... மூட்டையைக் கட்டு, உன்னை விட்டு விட்டு வரச்சொல்கிறேன்... அவன் மனசை மாற்றி மயக்கிடலாம்னுதானே போனாய்?''

தீபாவின் மெய்யெல்லாம் நடுங்கிக் கூசியது. உடம்பில் அக்கினிக் கொப்புளங்கள் தீய்ப்பது போல் அந்த வார்த்தைகள் கட்டுப் பொசுக்கின. கணவனோடான முதல் சந்திப்பில், ஏந்தி மாந்தி இன்பம் கண்ட நளினமான உணர்ச்சிகள் அவமானத்தால் பொசுங்கிச் சாம்பலாயின. பொங்கும் கண்ணீரை அடக்க முடியாமல் கேவினான் அவள்.

''அழுகை என்னடி அழுகை? என்னைத் தனியே படுக்க வைத்துவிட்டு, நீ எங்கேடி புறப்பட்டாய்? பூனை மாதிரி இளம்பிப் புருஷன் கிட்டே போறதுக்குத்தான் இங்கே வந்தியா?''

தீபா அவமானத்தால் முகம் சிவக்கத் துடித்தாள்.

''அம்மா!'' ராஜா உள்ளே வந்தான். ''எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன்.'' அவன் குரலில் கட்டுப்படுத்தப்பட்ட கடுமை இருந்தது.

''நான் சொன்னதில் என்னடா தப்பு?'' மகனுடனான வாதத்தில் தான் தோற்றுவிடக் கூடாது என்ற தீவிரத்தில் அவள் முன் ஜாக்கிரதை அடைந்தாள்.

''முழுக்க முழுக்கத் தப்பும்மா. ஒரு வைரத் தோட்டை அவள் காதில் போட்டுக் கொண்டால்தான் அழகாக இருப்பாளா? அப்படி நான் நினைக்கவில்லே. அதில்லாமலேயே அவள் நன்றாக இருக்கிறாள். ஒரு வைரத் தோடு அவள் பெட்டியில் தூங்கினால் தான் அவளுக்கு அந்தஸ்துன்னு, அந்த அந்தஸ்து எனக்கு வேண்டாம். உனக்குப் பிடித்த மாதிரி நகைகளை உன் மருமகள் போட்டுக் கொண்டு வரணுமின்னு, நீயே பண்ணிப் போடு. இல்லாதவர்களைக் கேட்டால் எப்படி? கேவலம் ஒரு வைரத் தோட்டுக்காக அவள் வாழ்க்கையையே பணயம் வைக்கிறாயா? அதிலே என் வாழ்க்கையும் அடங்கி இருப்பதை மறந்து விட்டாயே! அம்மா! மூன்று மாதங்களாக அவளை ஒதுக்கித் தள்ளியது போதும். அவள் இனிமேல் இங்கேயே இருக்கட்டும்.''

''இத்தனை நாள் ஏண்டா சும்மா இருந்தே? அவள் ராத்திரி வந்து தலையணை மந்திரம் ஓதிவிட்டாளா?'' கோபத்தில் உயர்ந்தது அம்மாவின் குரல்.

''போதும் நிறுத்தும்மா! பாவம் அவள்! அவள் அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கிறாள். நான்தான் அவளை மாடிக்கு அழைத்தேன். வராமல் மறுக்க முடியுமா அவளால்? கணவனோடு ஒரு மனைவி கொஞ்சிக் குலாவுவது ஒன்றும் தப்பான காரியமில்லே. அதற்குத் தான் ஏற்பட்டவள் அவள்!'' ஆவேசமாகப் பதிலுக்குப் படபடத்தான் ராஜா.

''டேய், டேய்! என்னடா ஒரு ராத்திரியிலே இப்படி மாத்திட்டாளே உன்னை...?'' புலம்பினாள் பெற்றவள்.


''அம்மா! திரும்பத் திரும்ப அப்படியே பேசி அவளை அவமானப்படுத்தாதே. காரணமானவன் நான்! எனக்கு வைரத்தோடு வேண்டாம். ஆனால் அவள் இங்கு இருக்க வேண்டும். என் முடிவை இந்த விஷயத்தில் நான் மாற்றிக் கொள்வதாய் இல்லே. நீ உன் முடிவை மாற்றிக்கொள்.''


''என்ன இங்கே?'' என்றவாறே வந்தார் அப்பா.

''எல்லாம் உங்களால்தான்.'' வெடுவெடுத்தாள் அம்மா.

''மருமகள் வீட்டுக்கு வந்தால் மாமியாருக்கு ஓய்வு. மேலும் நீ மூப்பால் ஓய்ஞ்சுட்டே. வைரத்தோட்டை விட, உன் மருமகளைப் பிரிஞ்சிருக்கிற போதுதான் பெரிய நஷ்டமடையறேன்னு உனக்குப் புரியலையா? வைரத் தோட்டை அவங்கப்பா வாங்கிப் போடலேன்னு என்ன, நாமே வாங்கிப் போடறது. பேரன், பேத்திகளைப் பார்க்கிற வயசிலே மருமகளைத் தள்ளி வச்சுட்டா எப்படி? இப்போ இன்னொரு ரகசியம் சொல்றேன் கேள்.... நேத்திரவு தீபாவை நான் தான் மேலே போய்ப் படுன்னு அனுப்பி வச்சேன். உனக்கு வேண்டியதைச் செய்ய தான் இங்கே படுத்திருந்தேன், புரிகிறதா?''

எல். கே. ஜி. படிக்கும் பையனிடம் கேட்டேன்:
''உன் டீச்சர் பெயர் என்னப்பா?''
பையன் சொன்னான்: ''குட்மார்னிங் டீச்சர்!''
—ராமு





என்ற அப்பா, ''தீபா! நீ போய் ராஜாவுக்குக் காப்பி கொடு'' என்று இருவரையும் அனுப்பி வைத்தார்.

''அபிராமி! நீயும் பழசை நினைச்சுப் பார்க்கணும். உனக்கொரு முத்து நெக்லேஸ் போடவேண்டும் என்று கூறி என் அம்மா என்னையும் உன்னையும் எட்டு வருஷங்கள் பிரித்து வைத்தாள். இளமையின் துடிப்புகளை யெல்லாம் பிரிவின் துயரில் போக்கிக் கொண்டு வாழ்ந்தபோது, நீ ஒரு முத்து நெக்லேஸோடு என்னிடம் வந்தாய். ஆனால் உன் முல்லைச் சிரிப்பும், இளமைச் சிலிர்ப்புக்களும் காலத்துக்கு இரையாகி விட்டன. நம் குழந்தை ராஜா திருமணம் செய்து கொண்டிருக்கும் இந்த வேளையில் நாம் மூப்பெய்தி விட்டதற்கு அந்தப் பிரிவும், அம்மாவின் பிடிவாதமும்தானே காரணமாக இருந்தன? அதையே நீயும் தொடர்ந்து அமுல் படுத்தினால் என்ன அர்த்தம்? என்னைப் போல் அடங்கிக் கிடக்காமல் இளமை உணர்ச்சிகளைத் துய்க்கும் பேராவலோடு ராஜா உன்னிடம் வாதிட்டதை நான் மிகவும் ரசித்தேன், அபிராமி! அந்தத் துணிச்சல் என்னிடம் இல்லை அல்லவா?'' ஆழ்ந்த உணர்ச்சி பாவத்தோடு அவர் கூறி முடித்த போது அபிராமி எதுவும் பேசவில்லை.

● ● ●

''என்ன இருந்தாலும் அம்மாவை நீங்கள் அப்படித் தூக்கி எறிஞ்சாப்போல் பேசி இருக்கக் கூடாது.'' அவன் அணைப்பில் மிதந்தவாறே கூறினாள் தீபா.

''போச்சுடா! உனக்காக நான் சண்டை போட்டு வெற்றி யடைந்திருக்கிறேன், நீயே என் 'அப்ரோச்' தப்புங்கறியே?''

''அம்மா என்னைக் கண்டித்தால் நான் மௌனமாகப் போய் விடுகிறேன். நீங்கள் தலையிடாதீர்கள். நான் ஏதோ சொல்லித் தான் நீங்கள் பேசுகிறீர்கள் என்று ஒவ்வொரு தாயும் நினைப்பாள். அவங்க இட்டதெல்லாத் தையும் நான் வாங்கிக்கத் தயார். அப்பத் தான் அவங்க ஆசீர்வாதம் எனக்குக் கிடைக்கும்!''

''தீபா!'' இக்பிரமையோடு அழைத்தான் அவன். ''நீ எத்தனை நல்லவள்...! எத்தனை நல்லவள்....! அம்மா உன்னைச் சீக்கிரமே புரிந்து கொள்வாள்.''

● ● ●

அடுத்த நாள் அபிராமி சந்தோஷமாக இருந்தாள். தீபாவிடம் கனிவாகப் பேசினாள்.

பளிச்சென்று நெற்றியிலும் வகிட்டிலும் குங்குமம் மினுங்கப் பாதி மலர்ந்தும் மலராத மல்லிகைச் சரம் தலையில் தவழ, லட்சுமிகரமாக அதிராமல் நடந்து குத்து விளக்கை ஏற்றிவிட்டு வணங்கினாள் தீபா.

''தீபா! இங்கே வாம்மா!''

தீபா அபிராமியின் அருகில் வந்தாள். அவளிடம் நகைப் பெட்டியைத் தந்தாள் அபிராமி. ''என்னுடைய வைரத்தோடுகள்! நீ போட்டுக்கொள்!''

இக்பிரமையோடு சற்று நேரம்நின்ற தீபா, ''அத்தை! உங்களுடையது. நீங்கள் போட்டுக் கொள்ளுங்கள். எனக்கு உங்கள் அன்பு ஒன்று போதும்'' என்று உணர்ச்சி வசப் பட்டுக் கூறினாள். அவள் காலில் விழுந்து வணங்கினாள்.

''அதுதான் கிடைச்சுட்டதே. வைரத் தோட்டைப் போட்டுக் கொண்டு உன் மாமாவுக்கும் கணவருக்கும் நமஸ்காரம் பண்ணும்மா!'' என்று வாத்சல்யத்துடன் கூறினாள் அபிராமி.

''எடுத்துச் சொல்கிற விதமாக எடுத்துக் காட்டினால் திருந்தாத பெண்களே கிடையாது!'' என்று தனக்குள் அப்பா முணு முணுப்பதை ராஜாவால் கேட்க முடிந்தது.

தீபா அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள். வைரத் தோடுகள் மட்டுமா? அவள் கண்களும் தாம் எப்படி மின்னின!



''டோரா''—

கண்களிலிருந்து ஆம்புலன்ஸ் மறைந்த பின் அவள் திரும்பினுள்.

''எஸ்?''—

''ஆர் யூ ஆல் ரைட்?''

''எஸ்''—

''உனக்கு ஹாஸ்பிடலுக்குப் போகவேண் டாம்?''—

''ம்... போகணும். வீட்டுக்குப் போய் மார்க்கிடம் விஷயத்தைச் சொல்லிவிட்டுக் கிளம்பணும்.''

இதற்குள் ஆம்புலன்ஸின் கூப்பாட்டைக் கேட்டுவிட்டு அந்தத் தெருக்காரர்கள் ஒரிரு வர் அங்கு வந்துவிட்டிருந்தனர்.

''என்ன ஆயிற்று? ஆம்புலன்ஸ் சப்தம் கேட்டதே, என்ன விஷயம்?''—

விபத்துக்குச் சாட்சியாக நின்றிருந்த பையன்கள் அவர்களிடம் விவரத்தைச் சொல்லும்போது டோரா திரும்பி வீட்டை நோக்கி நடந்தாள்.

அவளை ஒட்டி நடந்த வித்யாவால் டோரா மனசில் என்ன நினைக்கிருள் என்று தெளி வாய்ப் புரிந்து கொள்ள இயலவில்லை.

எதுவும் பேசாமல் வீட்டை அடைந்து உள்ளே நுழையு முன் டோரா ஒரு க்ஷணம் நிதானித்தாள். வித்யாவை ஏறிட்டுப் பார்த் தவள் திககிகப்பாய்ப் பேசினுள்.

''எனக்குக் கொஞ்சம் படபடப்பாய் இருக் கிறது, வித்யா, உனக்குச் சம்மத மென்றால் என் வண்டியை உன்னுல் ஓட்டிக் கொண்டு வர இயலுமா?''—

''இது என்ன கேள்வி டோரா? உன் வண்டி வேண்டாம். என் டேட்ஸனையே எடுத்து வருகிறேன். இரண்டு நிமிஷம் அவ காசம் கொடு''—

வித்யா கால்களை அகல அகலமாய்வைத்துத் தன் வீட்டுக்குப் போனுள்.

ராஜுவோடு போனில் தொடர்புகொண்டு நீட்டி முழக்கிப் பேசாமல் 'ஜென்னிக்கு ஆக்ஸிடெண்ட், நான் டோராவைக் கூட் டிண்டு ஹாஸ்பிடலுக்குப் போறேன். நீங்க மார்க்கிட்ட விஷயத்தைச் சொல்லிடுங்கோ' என்று சொன்னுள்.

கார் சாவியை எடுத்துக் கொண்டு பக்க வாட்டுக் கதவை இழுத்து சாத்தின பின் ஷெட்டுக்குச் செல்லும் கதவைத் திறந்து கொண்டு காரில் ஏறினுள்.

காரை ஸ்டார்ட் செய்து ரிவர்ஸ் செய்த உடன் ஷெட் கதவு தானுகத் திறந்து வண்டி வெளியேறியதும் மூடிக் கொண்டது.

வீட்டு வாசலில் தயாராய் நின்ற டோர்ராவை ஏற்றிக் கொண்டு ஹாஸ் பிடலை நோக்கி வண்டியை விரட்டினுள்.

தெரு முனையில் நின்ற டொயோடோ வைக் காணும்.

போலீஸ் இழுத்துக் கொண்டு போய் விட்டதா? யார் வண்டி அது?

டோராவைக் கேட்கலாம் என்று எண்ணி அவள் பக்கம் திரும்பிய வித்யா நினைப்பை மாற்றிக் கொண்டாள்.

சிகரெட்டைப் பிடித்த வண்ணம் இருக்கையில் சாய்ந்திருந்தவளைக் கலைக்க மனம் இல்லாமல் அவன் பார்வையைப் பாதையில் செலுத்தினன்.

டோரா அடிக்கடி சிகரெட் பிடிப்பவள் இல்லை. ''மனசு சரி இல்லாத போது பிடிப்பேன்'' என்று சொல்லுவாள்.

போகிறது — பெண் அடிபட்டு விட்டதில் துக்கம் பீரிட்டுக் கொண்டு எழா விட்டாலும் சிகரெட் பிடிக்கும் அளவுக்காவது மனசு வேதனைப் படுகிறதே, சந்தோஷம்.

பத்து நிமிஷங்களில் வண்டி ஹாஸ்பிடலுக்குள் நுழைந்தது.—

நேராக ஓ.பி.க்குப் போனர்கள்.

''சில நிமிஷங்களுக்கு முன்னல் வந்த ஆக்ஸிடெண்ட் கேஸ்...''

''சின்னப் பெண்தானே?''

''ம்....''

''எமர்ஜென்ஸி அறைக்குக் கொண்டு போயிருக்கிறர்கள். அங்கே போங்கள்.''

போனர்கள்.

கண்ணாடிக் கதவு வழியாக உள்ளே எட்டிப் பார்த்தபோது ஜென்னியைச் சுற்றி நாலைந்து டாக்டர்களும் நர்ஸ்களும் நிற்பது புரிந்தது.

ஒரு நர்ஸ் ஜென்னியின் உடைகளைக் கத்தரித்து எடுத்தாள். இன்னொருத்தி அவள் கையிலிருந்து ரத்தப் பரிசோதனைக்காக ரத்தம் எடுத்தாள். மானிட்டருடனும், ஆக்ஸிஜன் குழாயுடனும் ஜென்னி அதற்குள் இணைக்கப்பட்டிருந்தாள்.

முழுசாய் ஒரு நிமிடம் பார்க்கக் கூட நர்ஸ் விடவில்லை.

''இங்கு யாரும் நிற்க அனுமதி கிடையாது. தயவு செய்து ரிஸப்ஷனில் காத்திருங்கள்.''

''ப்ளீஸ் ஜென்னி எப்படி இருக்கிறள், சொல்ல முடியுமா? உயிர் இருக்கிறதா, இல்லையா?''

மெல்லிய குரலில் டோரா கேட்ட கேள்வி வித்யாவைச் சங்கடத்தில் ஆழ்த்தியது.

இப்படி மண்டையில் அடிக்கிற தினுசில் கேள்வி கேட்க டோராவுக்கு நா கூசவில்லை?

''இப்போது எதுவும் சொல்ல முடியாது. நியூரோ ஸர்ஜனும் மற்றவர்களும் சோதித்து முடித்த பிறகுதான் தெரியும். ப்ளீஸ் கான் யூ கோ அவுட் ஸைட்?''

மேற்கொண்டு ஒரு வார்த்தையும் பேசாமல் டோரா வெளியே வர வித்யா பின் தொடர்ந்தாள்.

வரவேற்பு அறைக்குச் சென்று உட்கார்ந்தார்கள். நாற்காலியில் சாய்ந்த டோரா கண்களை மூடிக் கொண்டாள்.

அது ஒரு பெரிய ஹாஸ்பிடல். சென்ட்ரல் ஏர்கண்டிஷன்ட். வெள்ளைக் கட்டிடம். அழுக்கு இல்லாத சுவர்கள், தரைகள். மூலைகளில் சிரித்த மலர்க் கொத்துக்கள். பச்சை, செடிகள், பெரிய பெரிய கண்ணாடிக் கதவுகள்.

ஊரிலிருந்து வந்த ஒரு சில நாட்களுக்கெல்லாம் இன்ஷூரன்ஸின் தேவைக்காக எக்ஸ்ரே, மற்ற டெஸ்டுகள் செய்ய வேண்டி அந்த ஹாஸ்பிடலுக்கு வித்யா வந்திருந்தாள்.

இதுவா? ஹாஸ்பிடலா? ஒரு ஹாஸ்பிடல் இத்தனை அழகாய், சுத்தமாய் இருப்பது கூட சாத்தியமா? என்று தான் அன்று வியந்ததும், இந்த ஹாஸ்பிடலின் நேர்த்தியைப் பற்றி மட்டுமே நீளமாய் ஒரு முழு லெட்டர் அம்மாவுக்கு எழுதினதும் அவளுக்கு ஞாபகம் வந்தது.

அம்மாவை நினைத்ததும் கூடவே தனக்கு டான்ஸில்ஸ் ஆபரேஷன் பண்ணிய நாளும் மனசுக்குள் ஏறி உட்கார்ந்து கொண்டது.

வீடு இரண்டு பட்டுத்தான் போயிற்று, இல்லை?

பத்து நாட்களுக்கு முன்பிருந்தே 'வித்யாவுக்கு ஆபரேஷன் செய்யப் போகிறேம்; நல்லபடியா நடந்து குழந்தை சாதாரணமாகச் சுருக்க நடமாடணும்' என்று வருவோர் போவோரிடமெல்லாம் அம்மா புலம்பத் தொடங்கி விட்டாள்.


தாங்க மாட்டாமல் அப்பா அம்மாவை ஒரு நாள் கேலி பண்ணினர்.

''உன் புலம்பலைக் கேக்கறவா வித்யாவுக்கு என்னவோ கான்ஸர் ஆபரேஷன்தான் பண்ணப் போறேம்னு பயந்துடப்.....''

அப்பாவை அம்மா முடிக்க விடவில்லை.

''போதும் நிறுத்துங்கோ — அபசகுனம் மாதிரி என்ன பேச்சு இது! கான்ஸர் அது இதுனு ஏன் அச்சான்யமாப் பேசறேள்?''—

அம்மாவுக்குக் கண் ஓரங்களில் ஜலம் பூத்து விட்டது.




கல்கி - சாரதா'ஸ்


பட்டுப்புடவைகள் பரிசுத்திட்டம்

இந்த வாரத்திய கேள்வியும் விடைகளும்:

கேள்வி : கணவரை நன்றாகச் சாப்பிட வைப்பது எது?

விடைகள் : பசி - ருசி - சுத்தம்







''அட அசடே!... சாதாரண டான்ஸில் ஆபரேஷனுக்குப் போய் இப்படி யாராவது பயப்படுவாளா... என்னம்மா நீ?''

அம்மாவின் கண்ணீரைக் கண்டதும் அப்பாவின் கேலி மறைந்து விட்டது. மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு சமாதானம் செய்தார்.

குறித்த நாளில் டான்ஸிலெக்டமி நடந்தது. மயக்கம் தெளிந்த வித்யா கண் விழிப்பதற்குள் அம்மா தவித்துப் போய்விட்டாளாம். சொன்னார்கள். அப்புறம் 'வலிக்கிறது' என்று நர்ஸ் கொடுத்த லெமனேட், ஐஸ் கிரீமைக் கூட விழுங்க முடியாமல் அவஸ்தைப்பட்டது பொறுக்க மாட்டாமல் 'என் செல்லமே உனக்கு வலிக்கிறதாடிம்மா....நா என்ன பண்ணுவேன்' என்று அம்மா கண்கள் கலங்க அரற்றியதை இப்போது வித்யா நினைத்துப் பார்த்தாள்.

அந்த அம்மாவின் அவஸ்தை இந்த டோராவுக்கு ஏன் இல்லை?

இவளும் ஒரு தாய்தானே?

தான் ஆடாவிட்டாலும் தன் சதை யாவது ஆடும் என்பார்களே, அது இந்த நாட்டுக்குப் பொருந்தாதா?

வித்யாவுக்கு உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை. எழுந்து வராந்தாவில் உலாத்தினாள். திரைச் சீலைகளைத் தள்ளிக் கொண்டு பார்த்த போது ஹாஸ்பிடலின் தோட்டம் ரம்மியமாய்த் தெரிந்தது. மாலை நேரமாதலால் நோயாளிகள் சக்கர வண்டியில் அமர்ந்து தோட்டத்தில் சுற்றிக்கொண்டிருந்தார்கள்.

நீல வானமும், பச்சைப் புல் வெளியும் அதில் பாத்தி பாத்தியாய்ப் பூத்திருந்த பூக்களும் மனசுக்கு இதத்தைத் தந்தன.

இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்த பிறகு வெளியூருக்குச் செல்ல நேர்ந்தபோது மைல் கணக்கில் பரவியிருந்த பச்சைப் புல் வெளியைப் பார்த்து தான் 'ஆஹா...என்ன அருமையான பச்சை' என்று வாய் ஓயாமல் முணு முணுத்ததும், 'நீ மாடாய்ப் பிறந்திருக்க வேண்டும் டார்லிங்! தப்பிப்போய் மனுஷியாய் ஜனித்து விட்டாய்' என்று ராஜு சீண்டியதும் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் மனசில் மின்ன வித்யாவுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

புன்னகையால் விரிந்த உதடுகளுடன் அவள் ரிஸப்ஷனுக்குத் திரும்பியபோது மார்க் வந்திருந்தான். கூடவே ஒரு போலீஸ் ஸார்ஜெண்ட். விபத்து சம்பந்தப்பட்ட கேள்விகளை டோராவிடமும், வித்யாவிடமும் கேட்டார். தான் தோட்டத்தில் நின்றிருந்ததையும், ராபின் சொன்னதையும் டோராவும் தானும் ஸ்தலத்துக்கு ஓடியதையும், ஆம்புலன்ஸ் வந்ததையும் சொன்னதைக் குறித்துக் கொண்டு ஸார்ஜெண்ட் போய்விட்டார்.

''உனக்குச் சிரமமாயிருந்தால் வீட்டுக்குப் போயேன் வித்யா—''

''சிரமமா எனக்கா? இல்லை... ஜென்னிக்கு எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்ளாமல் நான் போக விரும்பவில்லை.''

கிட்டத் தட்ட அரை மணி ஆன பிறகு நியூரோ ஸர்ஜன் வந்தார்.

ஜென்னியின் மண்டையில் பல இடங்களில் எலும்புகள் முறிந்திருக்கின்றனவாம்; ரத்தக் கட்டிகள் இருக்கலாமோ என்றும் அவர் பயப்படுகிறாராம். வயிற்றில் டயர் ஏறினதால் கிட்னி பாதிக்கப்பட்டிருக்கலாமாம். அந்தச் சோதனை இன்னும் முடியவில்லையாம்.

''நியூரோ ஸர்ஜன் என்ற முறையில் உடனடியாக மண்டையில் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று நான் நினைக்கிறேன். வெளிப்படையாகச் சொல்கிறேனே — ஆபரேஷன் பண்ணாவிட்டால் ஜென்னி கண்டிப்பாய்ப் பிழைக்க மாட்டாள். செய்தாலும் அவள் பிழைப்பது ஆயிரத்தில் ஒரு சாத்தியம்தான். அந்த ஒரு சாத்தியத்தையும் முயற்சி பண்ணிப் பார்க்க நான் நினைக்கிறேன். உங்கள் உத்தரவு கிடைத்தால் உடனே ஆபரேஷனைத் தொடங்கி விடுவேன்...''

மார்க் கொஞ்சம் யோசித்தான். மனைவியைப் பார்த்தான். அவள் லேசாய்த் தலையை ஆட்டவும் சின்னக் குரலில் பேசினான்.

''கோ அஹெட் டாக்டர். தேர் ஈஸ் நோ அதர் ஆல்டர்நேடிவ்... ஈஸ் தேர்?''

டாக்டர் உள்ளே போய் விட்டார்.

மார்க் எழுந்தான்.

''போகலாமா?''

பதில் ஏதும் பேசாமல் டோரா கிளம்பினாள்.

''வீட்டுக்கா மார்க்?'' — வித்யா கேட்டதற்கு மார்க் ஆம் என்று தலை ஆட்டினான்.

வித்யாவுக்கு ரொம்ப அதிர்ச்சியாக இருந்தது.

வீட்டுக்கா? மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டுக்கா கிளம்புகிறான்?

இங்கே மகள் உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருக்கையில், இவர்கள் வீட்டுக்கா கிளம்புகிறார்கள்?

''இ....இங்கே இருக்க வேண்டாமா?''—

''நாட் நெஸஸரி.... ஆபரேஷன் முடியப் பல மணி நேரங்கள் ஆகும். அதுவரை, இங்கே உட்கார்ந்து கொண்டு என்ன பண்ணப் போகிறோம்? நல்லதோ, கெட்டதோ, சேதி எதுவானாலும் வீட்டுக்கு டாக்டர் போன் பண்ணி விடுவார்....''

டோரா பேசிக் கொண்டே நடந்தாள்.

மார்க் காரில் டோரா ஏறிக்கொள்ள தன் டேட்ஸனில் தனியாய் வீடு வந்து சேர்ந்தாள் வித்யா.

ஷெட்டில் பிளிமத் நின்றிருந்தது.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தவள் சோபாவில் உட்கார்ந்தபோது அடக்க மாட்டாமல் துக்கம் பொங்கியது.

''ஹேய்.... என்ன விஷயம்?''—

ராஜுவின் கேள்விக்கு வித்யா பதில் சொல்லவில்லை.

தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் பெருகியது. கூடவே யாரோ பெத்த பெண்ணுக்காக நான் ஏன் இத்தனை அவஸ்தைப்படுகிறேன்? சொந்த அப்பா அம்மாவே அவளைப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கும் போது நான் ஏன் வேதனைப் படுகிறேன்? என்று தன் மேலேயே கோபமும் எழுந்தது.

ராஜு சூடாய்க் காப்பி கலந்து வந்து அவளிடம் நீட்டினான்.

கொஞ்சம் ஆஸ்வாசமான பிறகு வித்யா பேசினாள்.

''பெண் இப்பவோ, அப்பவோனு கிடக்கா, கூட இருக்காம இரண்டு பேரும் வீட்டுக்கு வந்துட்டாள் ராஜு! இது என்ன அநியாயம்.... மனசு எனக்குப் பதைக்கிறது.... அவாளுக்கு ஒண்ணுமே இல்லையே!''


ராஜு வித்யாவை நிமிர்ந்து 'இதற்கா நீ இப்படி அடிபட்டுப் போயிருக்கிறாய்?' என்ற ரீதியில் பார்த்தான். என்னமோ யோசனை பண்ணுகிற தினுசில் புருவம் முடிச்சு முடிச்சாய்ச் சுருங்கியது.

''ஹாஸ்பிடலில் இருந்து இவா என்ன பண்ணப் போறா டார்லிங்? உள்ளே போக இவாளுக்கு அனுமதி கிடையாது... ரிஸப்ஷன்லேயே உட்கார்ந்திருக்கறத்துக்கு வீட்டுலே மத்த குழந்தைகளோட இருக்கலாமேனு வந்திருப்பா. இந்த விஷயத்துக்கு நீ ஏன் இவ்வளவு அப்செட் ஆகணும்? எனக்குப் புரியலையே!''

சடாரென்று வித்யா கண்களை விரித்தாள். கோபத்தில் மூக்குச் சிவந்து போயிற்று.

''காட்! இப்படி பந்த பாசம் இல்லாம நடந்துக்கறவாளோட நடத்தையை ஜஸ்டிபை பண்ண உங்களால எப்படி முடியறது! இந்த மண்ணுலே ஆறு வருஷம் வாழ்ந்துட்டதாலே நீங்களும் இவாளைப் போல ஜடமாயிட்டேளா?... இல்லேன்னு 'இதுக்கா இப்படி அப்செட் ஆறே'னு இத்தனை சாதாரணமா உங்களால எப்படிக் கேக்க முடியும்?''—


குரல் கம்மிப் போக வித்யா திரும்ப அழத் தொடங்கினாள். (தொடரும்)



மௌனச் சிரிப்பு



கிரகணமும் விட்டதும் விடாததும்!



செம்பியன்

கிரகணத்தன்று நானும் என் சகதர்மிணியும் கிராமத்தில் இருந்தோம். அங்கிருந்து டவுனுக்கு பஸ்ஸில் வந்து இரவு ரயிலைப் பிடிக்க வேண்டும். ''மத்தியானம் பஸ் போகாது; டவுனுக்குப் போகணும்னு இப்பவே கிளம்புங்க'' என்று கிராமத்தில் பலர் எங்களை விரட்டி அடிக்காத குறையாகக் காலையிலேயே பஸ் ஏற்றி அனுப்பினர். நிகர பலன், டவுன் ஸ்டேஷன் வெய்ட்டிங் ரூமில் எட்டு மணி நேரம் ரயில் வரக் காத்திருந்தோம்! ''இப்போது வகையாக அகப்பட்டுக் கொண்டீர்களா?'' என்று என் மனைவி குதூகலத்துடன் கேட்டு எட்டுமணி நேரமும் வளவளவென்று பேசித் தீர்த்துவிட்டாள்!

இது என்னைப் பொறுத்தமட்டில் கிரகணத்தினால் ஏற்பட்ட கெட்ட பலனாக இருக்கலாம். ஆனால் என் மனைவிக்கு என்னை அந்தண்டை, இந்தண்டை நகர விடாமல் சிக்க வைத்துவிட்டதில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது தெரியுமா? கிரகணத்தினால் ஏற்பட்ட நற்பலனாக எண்ணி இன்னமும் ஆனந்தப்பட்டுக் கொண்டிருக்கிறாள்!

கிரகணத்தினால் ஏதேதோ ஆபத்துக்கள் நேரப் போவதாகச் சொன்னார்கள். முன்பு ஸ்கைலாப் உண்டாக்கிய பீதி 'எக்ஸார்விஸ்ட்' என்றால் கிரகணம் 'வாம்பயர்'!

> ✠ கிரகணத்தின் அதிகப்பட்ச முழு மறைப்புக் கால அளவு 7½ நிமிடங்கள். இந்தியாவில் 2½ நிமிடங்கள் தெரிந்தது.
>
> ✠ நூறு ஆண்டுகளில், உலகம் முழுவதும் சராசரியாக 66 முழுச் சூரிய கிரகணங்கள் ஏற்படுகின்றன.
>
> ✠ இனிமேல் இந்த நூற்றாண்டில் இந்தியாவில் தெரியக் கூடிய முழு சூரிய கிரகணங்கள் இரண்டு மட்டுமே, அதுவும் வட மாநிலங்களில். 1995 அக்டோபர் 24 (தீபாவளி). அடுத்தது 1999 ஆகஸ்ட் 11. இதை விட்டால், அடுத்த முழு கிரகணம் இந்தியாவில் கி. பி. 2081 இல் தான்!
>
> —ஆதாரம் : 'சயன்ஸ் டுடே'
>
> —தகவல் : வெல்பால்


'கடல் பொங்கும், நிலம் நடுங்கும்' என்றெல்லாம் கூறினார்கள். உண்மையில் இவற்றுக்கு ஒப்பான பெரு விளைவுகள், மாற்றங்கள் ஏற்படத்தான் செய்தன. இவை பலருக்குத் தீமையாகவும் முடிந்தன. ஆனால் அதே நேரத்தில் பல நன்மைகளும் விளைந்துள்ளன என்பதை மறுக்க முடியாது!

உதாரணமாக, இந்திரா காந்தி மாநில சட்ட சபைகளைக் கலைத்து உத்தரவிட்டு ராஷ்டிரபதி ஆட்சியைக் கொணர்ந்ததைக் கிரகணத்தின் தீய விளைவு என்று பலர் கருதலாம். நில நடுக்கத்தை விட பெரிய விபரீதம்தானே இது! ஆனால் இந்திராவுக்கும் சஞ்சய்க்கும், இந்திரா காங்கிரஸ்காரர்களுக்கும், தி.மு.க.வினருக்கும் இதே உத்தரவு எவ்வளவு மகிழ்ச்சியை அளித்திருக்கிறது பாருங்கள்! அவர்கள் பூரண சூரிய கிரகணத்தினால் நன்மையே ஏற்பட்டிருப்பதாகக் கருதலாமில்லையா?

கிரகணத்துக்கு மறுதினம் டில்லியிலிருந்து திரும்பி வந்த ஒரு நண்பரைச் சந்தித்தேன். அவர் சொன்னார்: கிரகணத்துக்காகப் பாதி நாள் லீவு விட்டிருந்தார்களாம். ''கிரகணம் பிடிக்கும் சமயம் பார்த்து ஆபீஸை மூடினால் என்ன அர்த்தம்? நாங்கள் வீடு திரும்பும் போது எங்களுக்கு ஏதும் ஆபத்து நேர்ந்தால் எங்கள் பெண்டாட்டி பிள்ளைகளை யார் காப்பாற்றுவார்கள்?'' என்று அரசு ஊழியரும் மற்றவரும் கேட்டனராம். உடனே முழு நாளும் லீவு விட்டு விட்டார்கள். புது தில்லி கானாட் சர்க்கஸில் 'ஈ காக்காய் கிடையாது' என்பதை விட 'ஈ காக்காய் மட்டுமே இருந்தன' என்று கூறுவது பொருந்தும்! ஹிந்துஸ்தான் டைம்ஸ் காக்கைகள் மட்டுமே சாலையில் இருப்பதைப் புகைப்படம் எடுத்துப் போட்டிருந்தது. நமது மவுண்ட் ரோடு மட்டும் சோடை போகுமா என்ன? 'ஜன சந்தடியே இல்லை' என்று டீவி உணர்த்தியது. வீட்டுக்குள் புகுந்து கொண்டு ஜன்னல் கதவுகளைக் கூட மூடிக் கொள்ளும் இந்த மூட நம்பிக்கையை

எண்ணிப் பகுத்தறிவுவாதிகள் விசனப் படலாம். 'நம்மைப் பிடித்துள்ள இந்த மூட நம்பிக்கை எனும் கிரகணம் எப்போது தான் விடுமோ' என்று ஏங்கலாம். ஆனால் பத்திரிகைப் புகைப்படக்காரர்களுக்கும் மவி காமிராக்காரர்களுக்கும் இதுவே எவ்வளவு நன்மையாக முடிந்து சந்தோஷத்தை அளித்திருக்கும், எண்ணிப் பாருங்கள். வெற்றுச் சாலைகளையே பரபரப்பான படங்களாக்கித் தர முடிந்ததல்லவா?

தமிழகத்தில் கவர்னர் ஆட்சி ஏற்பட்டதும் முதல் காரியமாக திரு பட்வாரி மிகவும் மகிழ்ச்சியோடு மதுவிலக்கை மீண்டும் அமல்படுத்தி விட்டார். தமிழக மக்களைப் பொறுத்த மட்டில் ஒரு கிரகணம் விலகிவிட்டதாக அவர் கருதி மகிழக் கூடும். ஆனால், 'இனி ஜாம் ஜாம் என்று குடித்துக் கும்மாளம் போடலாம்' என்று ஆசையோடு எதிர்பார்த்து வந்த பலர் இப்போதுதான்



தங்களைக் கிரகணம் பிடித்திருப்பதாக அல்லவா எண்ணி வருத்தப்படுவார்கள்!

'' 'கிரகணத்தை நேருக்கு நேர் பார்க்காதீர்கள்; அது ஆபத்து' என்று மட்டும் தானே விஞ்ஞானிகள் எச்சரித்தார்கள்? ஆனால் கிரகணத்தைச் சாக்கிட்டுக்கொண்டு அன்று யாருமே எந்த வேலையுமே செய்யவில்லையே; பள்ளிகள், கல்லூரிகள், அலுவலகங்கள், தொழிலகங்கள் எல்லாம் மூடப்பட்டனவே, இதனால் தேசத்துக்கு எவ்வளவு நஷ்டம்!'' என்று அறிவாளிகள் வருத்தப்படலாம். ஆனால், ''அப்பாடா, ஒரு நாளேனும் அக்கடாவென்று ஒரு வேலையும் செய்யாமல் நிம்மதியாய் இருக்கலாம்'' என்று எத்தனை பேர் சந்தோஷப்பட்டிருப்பார்கள்! அவர்களுக்கு கிரகணத்தினால் நன்மை தானே ஏற்பட்டிருக்கிறது!

விஞ்ஞானிகளின் எச்சரிக்கையை அலட்சியம் செய்து பலபேர் கண்ணைக் கெடுத்துக் கொண்டார்கள். இவர்கள் ரொம்ப வருத்தப்பட்டாலும், இதற்கு மறுபுறமாக, விஞ்ஞானிகள், ''பார்த்தீர்களா! எங்கள் எச்சரிக்கை எவ்வளவு அத்தியாவசியமானதாக இருந்திருக்கிறது! நாங்கள் உஷார்ப் படுத்தியிருக்கவில்லையானால், இவர்களைப் போல் இன்னும் எத்தனை பேர் பார்வை இழந்திருப்பார்கள்!'' என்று பெருமையாகக் கூறி ஆனந்திக்கலாம்!

ஒரு ஜவானுக்குச் சித்தமே தடுமாறிப் போக, ''சூரியனைக் காக்கச் சந்திரனை நோக்கிச் சுடுகிறேன்'' என்று கூறி விண்ணில் வேட்டுக்களைத் தீர்த்திருக்கிறார்! இது வருத்தம் அளித்தாலும் வேறு எத்தனையோ பல ஜவான்கள், ''நல்லவேளை நாம் அசட்டுப் பிசட்டென்று நடந்து கொள்ளாமல் தப்பினோம்'' என்று மகிழலாம்!

ஏன், இந்தக் கட்டுரையையே எடுத்துக் கொள்ளுங்களேன். நான் இதை ரொம்ப சுவாரஸ்யமாக எழுதிவிட்டதாக எண்ணி ஆனந்தப்பட்டுக்கொண்டிருக்கலாம். ஆனால் நீங்களோ, ''இதென்னடா அறுவை? ஒருவேளை கிரகணம் இவனையும் பாதித்திருக்கிறதோ?'' என்று எண்ணிச் சூள் கொட்டிக் கொண்டிருக்கலாம்!

ஆக, கிரகணத்தின் பயனான விளைவுகளும் எதிர் விளைவுகளும் ஒன்றையொன்று சரிக்கட்டிக் கொண்டுபோவது போல மகிழ்ச்சியையும் துயரத்தையும் அளிக்கிறது என்ற அளவுக்கு நமக்குத் தெளிவாகிறது. ஆனால் இந்தக் கணக்குக்குள் அடங்காத இரு விஷயங்கள் மட்டும் புதிராக விளங்கி என்னைக் குழப்புகின்றன:

முதல் விஷயம், கிரகணத்தன்றே சஞ்சய் காந்தியை இந்திரா காங்கிரஸ் தலைவராக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்து அதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இது இந்திரா காங்கிரஸ், இந்திரா யுவர் காங்கிரஸ்காரர்களுக்கு மகிழ்ச்சி தரும். ஆனால் அதே சமயத்தில் எதிர்க் கட்சியினருக்கு விசனத்தைத் தரப் போவதில்லை! மாறாக இரட்டிப்பு மகிழ்ச்சியையே அளிக்கும்! இந்திரா காங்கிரஸை இனி கிரகணம் பற்றப் போவதாக எண்ணி அவர்கள் பரமானந்தம் அடைவார்கள்!

மற்றொன்று: மாநில சட்ட சபைகள் கலைக்கப்பட்டதும் கருணாநிதி ரொம்ப ரொம்ப மகிழ்ந்திருப்பார் என்பதில் நமக்கு ஐயமில்லை. இதற்கு மறுபுறமாக எம்.ஜி.ஆர். துயரப்பட்டுத்தானே இருக்க வேண்டும்? ஆனால் மனுஷன் என்னவோ தமக்கு ரொம்ப ரொம்பச் சந்தோஷம் என்கிறார்!

புரியலேடா சாமி!





Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் ! **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'அரிய வைத்திய மேதை'

'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

❋ **குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்**
❋ **கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்**

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 25 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

விரைவில் பலன் காண விசேஷ 1 மாத சிகிச்சை ★ குறைந்த ஸ்பெஷல் 1 மாத சிகிச்சை

A-வகுப்பு	B-வகுப்பு	C-வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல்	1-ம் நெம்பர்	நேரில் பெறலாம்
ரூ. 350-00	250-00	175-00	115-00	90-00	75-00	V.P.P.யிலும் பெறலாம்

மாதாந்திர சுற்றுப் பயண விவரம்: ஒவ்வொரு ஆங்கில தேதிகளிலும்

பிரதம வைத்தியர் தங்குமிடங்கள் :

சென்னை-600002, 1 முதல் 8ந் தேதி வரை: ராமச்சந்திரா லாட்ஜ், போன்: 846526. 6 அத்திப்பட்டன் தெரு, அண்ணாசாலை சமீபம். P ORR. & Sons — பெட்ரோல் பங்க் மேற்புறம் ரோடு. காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை.

சேலம் தலைமை அலுவலகம்: , 11, 16, 17 18, 19, 20, 27, 28, 29, 30 தேதிகள்.

திருச்சி: 9, 10 தேதி: அசோக் பவன், ஜங்ஷன் ரோடு. போன்: 25763, காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கோவை: 12, 13ந் தேதி. ஸ்ரீ லக்ஷ்மி லாட்ஜ், ராஜ வீதி, போன்: 33330.

பொள்ளாச்சி 14ந் தேதி: மாடர்ன் லாட்ஜ், தாலுகா ஆபீஸ் எதிர் சந்து, காலை 8 மணி முதல் 12 மணி வரை.

திருப்பூர் 14ந் தேதி: ராமகிருஷ்ணா லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. மாலை 3 மணி முதல் 5 மணிவரை.

ஈரோடு 15ந் தேதி: ஆனந்த் லாட்ஜ், ஈஸ்வரன் கோவில் வீதி. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

மதுரை 21, 22 தேதி: மணீஸ் கேப், (டவுன் ஹால் ரோடு) போன்: 22019. காலை மணி முதல் இரவு 7 மணி வரை.

தூத்துக்குடி 23ந் தேதி: ராஜா லாட்ஜ், ஜி. சி. ரோடு, காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை.

திருநெல்வேலி: 23, 24ந் தேதி: நெல்லை லாட்ஜ். காலை 7 மணி முதல் இரவு 8 வரை.

மதுரை 26ந் தேதி: மணீஸ் கேப், டவுன் ஹால் ரோடு, போன்: 22019. காலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை.

திண்டுக்கல் 26ந் தேதி: ஆரியபவன் லாட்ஜ் பழனி ரோடு. மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை.

உதவி வைத்தியர் தங்குமிடங்கள் :

விழுப்புரம் 3ந் தேதி: வாசவி விஹார் ஹோட்டல், எம். ஜி. ரோடு. காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கடலூர் என்.டி. 3ந் தேதி: ஹோட்டல் பிருந்தாவன். மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை.

சிதம்பரம் 4ந் தேதி: ஜெயராம் லாட்ஜ், (மேல வீதி) காலை 7 மணி முதல் பகல் 3 மணி வரை.

கும்பகோணம் 5ந் தேதி: தாஜ்மஹால் லாட்ஜ் பொற்றாமரைக் குளம் (போன்: 1423) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

தஞ்சாவூர் 6ந் தேதி: அசோகா லாட்ஜ், (ராஜா கலை அரங்கம்) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கம்பம் 21ந் தேதி: யூனிவர்சல் லாட்ஜ், காலை 8 மணி முதல் பகல் 12 மணி வரை.

தேனி 21ந் தேதி: பாண்டியன் லாட்ஜ், மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

விருதுநகர் 23ந் தேதி: ஹோட்டல் ஆஞ்சநேயா. காலை 7 மணி முதல் 12 மணி வரை.

இராஜபாளையம் 23ந் தேதி: அசோகா லாட்ஜ். மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

நாகர்கோவில் 24ந் தேதி: உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பவன், போஸ்டாபீஸ் ஜங்ஷன் ரோடு, காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

தென்காசி 25ந் தேதி: பார்வதி லாட்ஜ். காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கோவில்பட்டி: 25ந் தேதி சரஸ்வதி லாட்ஜ். மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

தலைமை அலுவலகம் :

சிவராஜ் சித்த வைத்தியசாலை

C-56, தமிழ்ச் சங்கம் ரோட் பின்புறம்
(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)
காந்தி ஸ்டேடியம் — சேலம்-636007

ஜ்வரம் ஒரு தவம்!

அருள் வாக்கு



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசாரிய சுவாமிகள்

பிருஹதாரண்யக உபநிஷத்தின் கடைசி பாகத்தில் வருகிற ஒரு மந்திரம் எனக்கு ரொம்பவும் ரஸமாக, ஆறுதலாகத் தோன்றுவதுண்டு. இந்த மந்திரம் என்ன சொல்கிறது?

''வியாதிக்காரன் ஒருத்தன் ஜ்வர தாபத்தில் கஷ்டப்படுகிறான் என்றால் அது பெரிய தபஸ். இப்படி நோய் நொடியைத் தபஸ் என்று ஒருத்தன் தெரிந்து கொண்டு விட்டானானால் அவனுக்கு உயர்ந்த பரலோகம் (மோக்ஷம்) கிடைத்து விடுகிறது'' என்று இந்த மந்திரத்தில் சொல்லி யிருக்கிறது. (ப்ரு. உப: 5-11-1)

இப்படிச் சொன்னால் ஒன்றும் புரியவில்லையே! இதில் என்ன ரஸம், என்ன ஆறுதல் இருக்கிறது? — என்று கேட்கலாம். சொல்கிறேன்:

விரதம், தபஸ் முதலியவற்றால் உடம்பை வருத்திக் கொள்வதால் சரீராபிமானம் விலகுவதோடுகூட, நம்முடைய பூர்வ பாபங்களும் தேய்கின்றன. முன்னே உடம்பால் நாம் பாவம் பண்ணினதால் அதே உடம்பால் சிரமப்பட்டுத் தபஸ் செய்தால் பாபம் போகிறது.

ஸாக்ஷாத் ஜகன்மாதாவான அம்பிகையே பரமேச்வரன் வார்த்தையை மீறி தக்ஷனின் யக்ஞத்துக்கு வந்து அவமானப்பட்டு அப்போதே பிராணத் தியாகம் செய்த பின், மறுஜன்மாவில் ஹிமவானுக்குப் புத்திரியாக அவதாரம் செய்தபோது, பூர்வத்தில் பதியின் உத்தரவை உல்லங்கனம் பண்ணினதற்குப் பிராயச்சித்தமாகத் தபஸ் பண்ணினால்தான் மறுபடி இந்த ஜன்மாவில் அவரை அடைய முடியும் என்பதால், ரொம்பவும் உக்ரமான தபஸ்களைப் பண்ணியிருக்கிறாள். (காளிதாஸனின்) 'குமார ஸம்பவ'த்தில் ரொம்ப அழகாக, மனத்தை உருக்கும்படியாக இதை வர்ணித்திருக்கும். குளிர் காலத்தில் ஹிமய மலையில் எத்தனை குளிராக இருக்கும்? அந்தச் சமயத்தில் பனிப் பாறைகளின் மேல் உட்கார்ந்துகொண்டோ, பனியாக உறைந்திருக்கும் தடாகங்களுக்குள் நின்று கொண்டோ தபஸ் பண்ணுவாள். நல்ல கோடை வெயில் கொளுத்துகிறபோது, தன்னைச் சுற்றி நாலு பக்கமும் நெருப்பை மூட்டிக்கொண்டு, மேலே ஐந்தாவது நெருப்பாக ஸூரியனும் தகிக்க, 'பஞ்சாக்னி தபஸ்' பண்ணுவாள்.

இம்மாதிரியான கடுமையான தபஸ்களை அநேக மகான்கள் பண்ணியிருக்கிறார்கள்.

நம் விஷயம் என்ன? அவர்கள் ஏதோ ஒரு தப்பு இரண்டு தப்பு பண்ணினார்களென்றால், நாம் பண்ணுகிற தப்புகளுக்கோ கணக்கு வழக்கே இல்லை. ஆனால் அவர்கள் செய்த தபஸில் கோடியில் ஒரு பங்குகூடப் பண்ண நமக்கு மனஸும் இல்லை, சக்தியும் இல்லை. இப்படியிருந்தால் நம் பாபம் போகிறது எப்படி?

இம்மாதிரி நினைத்துக் கஷ்டப்படுகிற போதுதான் உபநிஷத் மந்திரம் ஆறுதலாக வருகிறது. நமக்கு disciplined life (நெறியான வாழ்க்கை) இல்லாததால், எப்போது பார்த்தாலும் வியாதி, வக்கை, ஜ்வரம் முதலியன வருகின்றனவல்லவா? நம்மைப் பார்த்துத்தான் உபநிஷத், ''இந்த நோவு நொடி காயலா எல்லாமே பெரிய தபஸ்தான். இப்படிப் பார்ப்பதற்குப் பழகிக்கொண்டு விட்டாயானால், தபஸினால் கிடைக்கிற பாப நிவிர்த்தி உனக்கும் உண்டாகி, மோக்ஷ லோகத்துக்குப் போய்விடுவாய்'' என்று சொல்கிறது. இவ்வளவு Plain -ஆகச் சொல்லாவிட்டாலும் மந்திரத்தின் அர்த்தம் இதுதான்.

ஜ்வரதாபம், தாப ஜ்வரம் என்கிறோமல்லவா? 'தாபம்' என்றால் கொதிப்பது. 'தபஸ்', 'தாபம்' இரண்டுக்கும் root. ஆன 'தப' என்னும் வார்த்தைக்கு 'கொளுத்துவது' என்று அர்த்தம். ஆகையால், சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிற தபஸை நாம் பண்ணாவிட்டாலும், தானாக வந்த ஜ்வர தாபத்தையே நம் பாபம் போக ஈச்வரன் தந்திருக்கும் தபஸ்தான் என்று வைத்துக்

கொண்டுவிட வேண்டும்; மலேரியா வந்து, எத்தனை கம்பளி போர்த்தினாலும் போதாமல் குளிர் நடுக்கி எடுக்கிறதா? 'ரொம்ப நல்லது! நாம் குளிர் காலத்தில் ஜலத்துக்குள்ளிருந்து கொண்டு தபஸ் பண்ண மாட்டோமோல்லியோ? அதனால்தான் பரம கருணையோடு பகவானே நமக்கு இந்தக் குளிர் ஜ்வரத்தை அனுப்பியிருக்கிறார்' என்று வைத்துக்கொண்டு விடவேண்டும். டைஃபாயிட், நிமோனியா வந்து 105, 106 (டிகிரி) என்று வறுத்து எடுக்கிறதா? 'அப்பாடா! நாம் பஞ்சாக்னி தபஸ் பண்ணாததற்குப் பதிலாகத்தான், ஸ்வாமி இந்த தாப ஜ்வரத்தைத் தந்திருக்கிறார்' என்று நினைத்து நிம்மதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்படி எந்த உடம்பு (நோய்) வந்தாலும், அடிபட்டாலும், காயம் பட்டாலும் ஒவ்வொன்றையும் ஒரு தபஸாக— நாமாகப் பண்ணாத போதிலும் பகவானே அனுப்பி வைத்திருக்கிற தபஸாக—எடுத்துக் கொண்டுவிட வேண்டும்.

பழகப் பழக இந்த மனோபாவம் உறுதிப்பட்டு, நோய் நொடியைத்தாங்கிக்கொள்கிற சக்தி உண்டாகும். டாக்டர், மருந்து என்று ஓடாமல், ''ஆகிறபடி ஆகட்டும்; கர்மாவைத் தீர்க்கிற நல்ல உபாயம்தான் நம்மைத் தேடி வந்திருக்கிற தேக சிரமம்'' என்று இருந்து விடுவோம். டாக்டர் ஃபீஸ், மருந்துச் செலவு எல்லாமும் லாபம்; எல்லாவற்றிலும் பெரிய லாபம், சிரமத்தைச் சிரமமாக நினைக்காத 'திதிக்ஷை' என்ற உயர்ந்த பண்பைப் பெற்று விடுவோம்.

இதவ்வளவையும் உபநிஷத் சுருக்கமாகச் சொல்லி விடுகிறது.

"மாமாங்கம் ஆனாலும் மறக்கவில்லை"

சென்ற மகாமகத்தின் போது ஏற்பட்ட அனுபவங்களை திரு எஸ். கண்ணன் கூறுகிறார்.

ரயிலில் நான் பயணம் செய்த போது வண்டியில் முக்கால்வாசிப் பேர் மகாமகத்துக்குத் தான் செல்வதாக அறிந்தேன். மனம் முழுதும் பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்து, பிரயாணம் ஜிலுஜிலுவென்று இனிமையாகச் சென்றது.

எங்கும் தலைகள். ரயில் நிலையத்திலிருந்தே அனுமார் வால் போல் க்யூ நீண்டுகொண்டே சென்றது. ஆண், பெண் இருவருக்கும் தனியாகத் தான் க்யூ வரிசை. க்யூ வரிசையில் நான் மகாமக குளத்தை அடைய மூன்று மணி நேரம் ஆயிற்று. தண்ணீர் பழுப்பு நிறத்தில் கலங்கலாகக் காட்சியளித்தது. க்யூ பாம்பு போல் நெளிந்து நகர்ந்தது. போலீசார் எல்லோருக்கும் தண்ணீரை எடுத்துக் கொடுத்தார்கள். என்னோடு வந்த வயதானவர்களுக்குப் போலீசாரே தலையில் நீர் ஊற்றி உதவியதை மறக்க முடியாது.

மகாமக நாளில் வைணவர், சைவர், இருபாலரும் தங்கள் மடங்களிலே இலவசமாகச் சாப்பாடு போட்டனர். மனத் திருப்தியோடு உணவு அருந்தினேன்.

அங்குள்ள ஹோட்டல் காரர்களுக்குக் கொண்டாட்டம்தான்! தெரியாத்தனமாக மாலை இட்லி, காப்பி சாப்பிட்டேன். மாவில் செய்யப்பட்டது என்று சத்தியம் செய்வது போல இட்லி மாவாகவும், காபி, சூடாக இருப்பதை உறுதி செய்யச் சுடு தண்ணீராகவும் இருந்த பெருமையை என்னவென்று சொல்வது.



ஒரு பெண்மணி (ஆந்திராவைச் சேர்ந்தவர்)யின் மூன்று வயது ஆண் குழந்தை காணாமல் போனது, என் மனத்தை அரித்துத் தள்ளியது. இன்று அந்தக் குழந்தை இருந்தால் பதினைந்து வயது வாலிபனாய்த் தாய்க்குப் பக்கபலமாய் இருப்பான். கிடைத்தானோ இல்லையோ — பாவம்!

கும்பகோணத்தில் குடியிருக்கும் பலர், யாத்திரிகர்களைத் தங்கள் வீட்டில் இலவசமாகத் தங்க அனுமதித்தாலும், இப்படி அனுமதிப்போரும் சரி, தங்குவோரும் சரி முன்பின் அறியாததால் எச்சரிக்கையாக இருப்பதே நல்லது!

அங்கு நான் கேள்விப்பட்ட ஒரு சம்பவம்:

முன்பொரு முறை மகாமகத்தில் நீராட வந்த ஒரு பெண்ணின் தங்கச் சங்கிலியை ஒரு போலீஸ்காரரே அறுத்து, தம் குல்லாயில் மறைவாக வைத்துக் கொண்டாராம். நல்ல வேளை அதை ஒரு பெண் பார்த்து விட்டாள். பறி கொடுத்தவள் அலற, அந்தச் சமயத்தில் அருகே இருந்த ஒரு வைணவர் மீது அந்தப் போலீஸ்காரர் குற்றம் சுமத்தி, காவல் நிலையத்துக்கு இழுத்துக் கொண்டு போனாராம். அவருக்கே தெரியாமல், நிகழ்ச்சியைப் பார்த்த பெண் தொடர்ந்து சென்று தக்க சமயத்தில் சாட்சி கூறிக் காப்பாற்றினாராம்.

இதனால் போலீஸ்காரர்கள் மீதே அவநம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதல்ல அர்த்தம். நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதற்காகச் சொன்னேன்.

இந்தச் சம்பவங்கள் எல்லாம் விட மனத்தில் பசுமையாக நிற்பது அந்த க்ஷேத்திரத்தில் நிலவிய பக்தி பரவசம்தான்.

பேட்டி: **சுசி**

மீசை அடியோடு முத்துராமனை மாற்றி விட்டது. அடேயப்பா! என்ன அதட்டல், என்ன மிரட்டல்! ஆனால் ஒரே மகளான பாலாவைக் கண்டதும் என்ன பாசம்! என்ன குழைவு!

முத்துராமன் தாம் ஏற்ற பாத்திரத்துக்கு ஏற்ப நன்றாய் நடித்திருக்கிறார். ஒவ்வொரு பெரிய புள்ளியையும் அவர்களுடைய பலவீனங்களைக் கண்டறிந்து, தம் வழியில் வசப்படுத்துவது பிரமாதம்!

படத்திலேயே சரிதாவுக்குத்தான் முதல் இடம். பெரிய பணக்காரரின் ஏக புத்திரியாகப் பிறந்து, செல்வத்தில் வளர்ந்த பாலா தன் தந்தையால் வறுமை நிலைக்கு ஆளான குடும்பங்களுக்கு உதவி செய்து, ஊழியம் செய்து, தன் தந்தையைக் கொண்டே அவர்களைக் கைதூக்கி விடுகிறாள். இதுதான் திரைக் கதை.

சரிதா, ரசிகர்களின் பாராட்டுதல்களைப் பெறும் வண்ணம் நன்றாய் நடித்திருக்கிறார். அப்பாவை நேரில் வந்து பார்க்காமல், தன் இருப்பிடத்தையும் சொல்லாமல், டெலிபோனிலேயே தொடர்பு கொள்வது நன்றாயிருக்கிறது. தந்தையும் மகளும் கண்ணீருக்கிடையில் உரையாடுவது படத்தின் சிறப்புப் பகுதி.

மனநிலை சரியில்லாத தாயாக வரும்போது வடிவுக்கரசி மனத்தில் நிறைவு பெறுகிறார்.

நம்பியார் வில்லன். அவருக்குப் பழகிப் போன பாகம்தான். விரோதியின் மகளானாலும், 'அவளைக் கற்பழித்துத்தானாக வேண்டும்' என்று தன் பெற்ற மகனிடமே ஒரு தந்தை சொல்வது அருவருப்பாயில்லையா?

கருணிராஜன், உசிலை மணி, வனிதா, சத்தியா ஆகியவர்கள் செய்யும் கலாட்டாக்களைக் கண்டு ரசிக்க முடிந்தவர்கள் அவைகளைக் காமெடியாக ஏற்றுக் கொள்ளலாம்.

பாலாவை ஓர் ஏழைப் பெண்ணாக நினைத்து விஜயன் காதலிக்கிறார். பிறகு விஜயன் ஒரு கதையைக் கொண்டு வருகிறார். சிங்கப்பூர்க் கதை. இரு கதைகளையும் இணைக்க முயன்றிருக்கிறார்கள். நல்ல கோந்து அகப்படவில்லை!

வண்ண ஒளிப் பதிவு பிரமாதம்!

''பணம், பெண், பாசம்'' — மோசமில்லை!

—காந்தன்





'அபாயம் கப்பல் வருகிறது' என்ற எச்சரிக்கை இருட்டு வேளை களில், கப்பல்கள் நடமாடும் இடங் களில், இரவது அந்நாளைய வழக்கம்.

பால்மர்ஸன் எதையோ கண்டு சந்தேகித்து அப்படி எச்சரிக்கை கொடுக்கக் கூறி இருந்தார்.

ஆனால் மாலுமியின் புத்தி பேதலித்துப்போக, அவன் அந்த எச்சரிக்கைகளைக் கூவிக்கொண்டே இருந்தான்.

நிறுத்தச் சொல்லியும் நிறுத்தவில்லை.

அவன் தொண்டை கரைந்து பாறையாகி சப்தத்தை இழந்த பிறகும் நிறுத்தவில்லை.

இருட்டி விட்டது. கடலும் கப்பலும் வித்தியாசம் தெரியவில்லை.

கப்பலின் தலைப்பில் இருந்தால் பின் பக்கம் தெரிய வில்லை.

பால்மர்ஸனுக்குச் சந்தேகம்.

ஒரு வேளை மெட்ராஸை நெருங்கி விட்டோமா?-நகரி மூக்குத் தீ தெரிகிறதா, பார், என்றார் எஸ்டனிடம்.

அந்தநாளில் நகரி மூக்கில் தினம் தீ எரித்து ஒரு தீபஸ்தம்பமாகக் கப்பல்களுக்கு வழி காட்டுவார்கள்.

(பழைய ஹைகோர்ட் தீபஸ்தம்பத்திலிருந்து பார்த் தால் நகரி மூக்கு தெரியும்)


9

பம்பு அழுத்து நம் மாலுமிகள் களைத்தார்கள்! பலன் உண்டோ, சொல்லுங்கள்! கடலும் புயலும் கொந்தளிக்க, மீண்டும் கப்பல் உள்ளே அலைநீர்! மாலுமிகளின் செவிகள் மரத்துவிட்டன. அவை உயிர்த்திருந்தாலும் பயனில்லை. ஏனெனில் தகுந்த தைப் பேச அங்கே யாருமில்லை,

—ஜான் டான் எழுதிய 'புயல்' என்ற கவிதை

கிருஷ்ணன் அந்த ஆசைகளைக் கூறியதும் மல்லிக்குக்கு எவ்வளவு வெறுப்பு வந்தது?

அதுவும் சம்பகாவை எப்படியாவது.... என்று சொன்னபோது!



குள் ஜூலி

கிருஷ்ணனை உதறிவிட்டு அவன் போயிருப்பான். ஆனால் அவரால் காரியம் ஆக வேண்டும்.

அவருடன் நடந்தான். வரப்பில் போன போது அந்த பங்களா விஸ்தரித்து வந்தது.

முகப்பை அடைந்தார்கள்.

பழைய காலத்து வெள்ளைக்காரன் பங்களா!

வாசல் மேலே பெரிய காட்டெருமைத் தலை. பாடம் பண்ணியதா, பொம்மையா தெரியவில்லை.

சுவரின் இடது புஜத்தில் சம்பந்தசாமி என்று ஒரு பித்தளை ஸைன்.

உள்ளே போனால் —வாங்க! என்று குரல்!

முதலில் அசரீரியாக இருந்தது. பிறகு மேஜை நாற்காலி சோபா குவிபாடுகளுக்கு இடையே பார்த்தால்,

ஒரு பாட்டனார் — ஈஸி சேரில் சம்பந்தசாமி சயனம்.

கால்களைப் பரத்தி காம்பஸ்போல் விரித்திருக்க,

எழுபது இருக்கும். வெள்ளி முடிகள் பழுத்த பழுப்பு. வெள்ளி ஃப்பிரேம் கண்ணாடி. மல் வேட்டி, மல் ஜிப்பா, தங்கச் செயின் கடிகாரம்.

பதினெட்டாம் நூற்றாண்டு பாதிரிமார் டிக்ஷனரியைக் கையில் வைத்திருந்தார்.

இருவரும் உட்கார்ந்தார்கள். அறிமுகத்திற்குப் பிறகு மல்லிக்கைக் காட்டி —நம்ப ஸார் ஒரு ஆராய்ச்சியாளர். உங்க கிட்டே பேசணும்னு இஷ்டப்படறார் என்றார் கிருஷ்ணன்.

புத்தகத்தை மூடினார்.

—பேசட்டுமே.

மல்லிக் தம் வம்சாவளி ஆராய்ச்சியைச் சொல்லி, பால்மர்ஸனைப் பற்றி ஏதாவது தடயம் கிடைக்குமா என்று கேட்டான்.

—என்ன மாதிரித் தடயம்?

—கடற்கரைத் தடயம் ஏதாவது...

—வா இப்படி.

அடுத்த ஹாலுக்குள் போனார்கள்.

உள்ளே பற்றாக்குறை வெளிச்சம்.

பார்த்தால் மூச்சை நிறுத்தும்படி காட்சி! ஒரு மியூஸியம் போல் பழங் காலப் பொருள்கள் டிரில் வரிசையில் நின்றன. சிலைகள் முதல் சிப்பிகள் வரை....

—இப்படி வா!

சிக்கிடங்களில் நுழைந்து போனான்.

—இதப் பார்த்தியா?

கையில் எடுத்தார். வெறும் மரத் துண்டு.

—Drift wood

—ட்ரிஃப்ட் வுட்? என்றான் மல்லிக்.

—ஆமாம்! கடல்லே மிதந்து வருமே அது! கரையிலே அதுவா ஒதுங்கும். என்னை மாதிரி பயித்தியங்கள் அதை எடுத்து வச்சுப்பாங்க!

—இதிலே என்ன விசேஷம்?

—விசேஷமா! இதப் பாரு! இது என்ன கட்டை தெரியுமா?

—தெரியாது.

—செவ் அகில் மரம்! ஜாவா அகில்! இது எப்படியோ கடலில் மிதந்து இங்கே வந்திருக்கு.

—ஜாவாவிலிருந்தா?

—ஆமாம்.

சம்பந்தசாமி மேலும் போனார் — இது ஒரு செதுக்கப்பட்ட கட்டை! கருவாலி மரக் கட்டை. ஏதாவது கப்பல்லேர்ந்து வந்திருக்கும்.

—கப்பல்லேர்ந்தா?

—ஆமாம்! போன நூற்றாண்டிலே கப்பல்லாம் இந்த மரத்திலேதான் செஞ்சாங்க. ஓக் மரம்!

மல்லிக் பல்லைக் கடித்தான். கடவுளே, இது ஜானி காலண்டின் கட்டையாக இருக்குமா?

—இதப் பாரு. இதென்ன தெரியுமா? அல்பட்ராஸ்.

ஒரு மர உருவம். பறவை வடிவத்தில்! அல்பட்ராஸ் பறவை! இது போன்ற உருவங்களைக் கப்பல் தலைப்பில் செதுக்கியிருப்பார்கள். படங்களில் பார்த்திருக்கிறான்.

மல்லிக்கிற்குப் பரபரவென்று உடம்பு பற்றியது.

—இன்னும் இங்கே இருக்கிறதெல்லாம் கப்பல் மரங்கள்தான் பார்த்துக்க.

பார்த்தான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். சிலவற்றில் பூவேலை. சிலவற்றில் பொம்மை வேலை. சிலவற்றில் புராண உருவங்கள்.

ட்ரிஃப்ட் வுட்டை அடுத்து சீசாக்கள்! விநோதங்களாவைவை! ப்ரஷ்ஷியன், மாலட், க்ளப்வகைகளில் எத்தனை வித சின்னச்சின்ன மாறுதல்களுடன் சீசாக்கள்! —இதெல்லாம் கடல்லேர்ந்து கிடைச்சதுதான். சிலது மிதக்கும். சிலது ஒதுங்கும்.

இன்னும் கயிறு வகைகள், ராட்டினங்கள், பர்ட்ஸ் நெஸ்டின் கைப்பிடிகள், எல்லாம் அங்கே அணிகளாக இருக்க,

தலை சுற்றியது.

எதைப் பார்ப்பது, எதை விடுவது?

—வாங்க, என்று சீக்கிரமாக அழைத்து உள்ளே போனார். —அம்மா, ரீடா! காப்பி கொண்டுவா! என்றார்.

அவ்வளவு சீக்கிரமாக அழைத்துப்போனது அவனுக்குப் பிடிக்கவில்லை.

சந்தேகம் தட்டியது.

ரீடா வந்தாள். ஆச்சரியம் இந்தப் பெண் அந்த பஸ்ஸில் வந்தவள் அல்லவா!

கறுப்புப் பெண். கூந்தலில் நிறைய நெளி. உடம்பின் அபாரங்கள் இதுவரை அவன் பார்த்ததில் ரிகார்ட்.

ட்ரேயை நாலுக்காக வைக்க நான்கு பிரெஞ்சுக் கிண்ணங்களில் காப்பி சின்னதாக நலுங்கியது.

—கம் ஆன்! ஹெல்ப் யுவர்ஸெல்ஃப்.

...ஆன் ரொம்ப அவசரப்படுத்துகிறாரே! காரணம் இருக்கும்...

—நீங்க சாப்பிடும் கோப்பையில் மரி அந்த்வானத் டீ குடித்தாள். பிரஞ்சு பெண் மணி! அட்டகாசி. போன நூற்றாண்டில் வாழ்ந்தவள். எனக்கு சரித்திரம் உயிர். நான் இறந்த காலத்தில் வாழ்கிறவன். குடியுங்கள். ரீடா கையால் போட்ட காப்பி!

சம்பந்தசாமி அவசரப்படுத்தினார்.

ரீடா காப்பியில் , மணந்தாள். அவன் பருகும்போது இரண்டு முறை பார்த்தாள். அவனுக்குப் பிடிக்கவில்லை. ஒரு பெண் சீக்கிரமாக முன்னேறினால் அவனுக்கு வெறுப்பாக இருந்தது.

—சாப்பிட்டுட்டீங்களா?


...அவசரப்படுத்துகிறாரே! உள்ளே அந்த ஹாலிலிருந்து அவசரமாகக் கொணர்ந்தாரே. அதற்கும் அந்தச் சீசா வரிசையில் கடைசியாக அவன் பார்த்த சீசாவுக்கும் தொடர்பு இருக்குமோ...

சுருக்கென்று முடித்தான்.

அந்த்வானத் கோப்பையை மிக ஜாக்கிரதையாக வைத்தான்.

ரீடா எழுந்து நளினங்கள் செய்து, ஒவ்வொரு கோப்பையையும் சடங்குகளோடு தூக்கி, அவனை நோக்கி கடைசிப் பார்வையைத் தூக்கிப் போட்டாள்.

—போயிட்டு வரீங்களா! அடிக்கடி வாங்க.



கைத்தறியின் புனிதப் பயணம்

மகத்தான மகாமகம்

திருவிழாவின்போது துவங்கும்

தேசிய கைத்தறிப் பொருட்காட்சி '80

கும்பகோணம்

நகர உயர்நிலைப் பள்ளித் திடலில்
23-2-'80 முதல் 16-3-'80 வரையில்
நடைபெறும்.

பல்வேறு மாநிலங்களின் கைத்தறி அரங்குகள் பங்குபெறுகின்றன. நெய்தல் காட்சியும், நெசவுக் கலையின் நுணுக்கமும் விளக்கப்பெறும். இந்த அரிய வாய்ப்பினைப் பயன் படுத்துவீர்!

சிறப்புத் தள்ளுபடி **20%**

தமிழக அரசின் ஒத்துழைப்போடு புதுடில்லி தொழில் அமைச்சகம், தொழில் வளர்ச்சித் துறை, கைத்தறி வளர்ச்சி ஆணையரால் அமைக்கப்பெற்றது.

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி



....நிச்சயம் அந்த டிகேன்டர் சீசாவில் ஏதோ இருக்க வேண்டும். நான் பார்த்த போதே அது புது மண்ணோடு எடுத்து வந்த சாயல் தெரிந்தது. மண் பொடிகள் ஒட்டி, தெரிந்தது. அந்த அல்லுவியல் மண்; அதை என்னால் கண்டுபிடிக்க முடியும்...

வெளியே வந்தார்கள்.

விடை பெற்றுர்கள்.

அவனும் கிருஷ்ணனும் புறப்பட, சம்பந்த சாமி அவசரமாக உள்ளே போனுர்.

—திருப்திதானே! எல்லாம் பார்த்தீங்களா என்றுர் கிருஷ்ணன்.

—ம்; பார்த்தேன்.

...அந்த டிகேன்டர் சீசாவை இன்னும் பார்த்திருக்க வேண்டும். கரும் பச்சைக்கலர். மேலே மண் ஒட்டியிருந்தது....

—நான் பழம் பொருள்களை மட்டும் சொல் லல்லே. எல்லாத்தையும்னு ரீடாவையும்.

மல்லிக் மௌனமாக அவரைப்பார்த்தான்.

—ஆமாம் மல்லிக், ரீடா கிட்டே பார்க் கறதுக்கு நிறைய இருக்கு.

மல்லிக் அவர் சொன்னதைக் கேட்டதாகத் தெரியவில்லை. எட்டத்தில் டங்களாவை நோக்கிப் போய்க் கொண்டிருந்த மற்றொரு பாதையில் பார்வை விழுந்தது.

அங்கே போவது யார்?

திடுக்கிட்டான் அவன்.

டார்வினிடம் வொய்ட் பேசிக் கொண் டிருந்தார். நெப்டியூன் மோட்டார் படகு நாகப்பட்டினக் கடலில் தாலாட்டியது.

—என்னுடைய ஆராய்ச்சி என்னன்னு, 1841 அக்டோபர்லே நாகப்பட்டினத்திலே புயல் வீசியிருக்கு. தஞ்சாவூர் மான்யுவல்லே இந்தச் செய்தி இருக்கு. அதனலே இலங்கை யைத் தாண்டி ஜூலி வந்திருந்தா இந்தப் புயல்லே சிக்கி இங்கே சமீபங்களில்தான் மூழ்கியிருக்க வேண்டும்.

டார்வின் தம் மூக்குக் கண்ணாடிக் காம்பால் மூக்கைச் சொறிந்தார்.

—வொய்ட்! புயல் எத்தனை மைல் வேகம் தெரியுமா?

—அறுபது மைல்!

—அப்படிப் புயல் வீசினு ஜூலியோட பாய் மரமெல்லாம் கிழிஞ்சு போயிருக்கும்.

—ஒத்துக்கறேன்.

—கப்பல்லே ஸ்டியரிங் வேலை செய்யாது. ஸ்டீரிங் பிடிச்சவனை ஸ்டியரிங்கின் அசுர மான இயக்கம் தூக்கிப் போட்டுடும்.

''என்ன சார் கல்யாணம் எப்படி...?''

''என்ன கல்யாணம் போங்கோ வாசல்லே ஒரு செருப்பு கூட புதுசா இல்லே...!'' —கண்ணன்



—ஒத்துக்கறேன்.

—அப்படிப்பட்டபட்சத்திலே, கப்பல் புயல் வசம் சிக்கியிருக்கும்.

—சரி.

—புயல் நீங்க சொன்னபடி வந்தா கப் பலைத் தரையிலே கொண்டு போய் இடிச் சிருக்கும். அது மூழ்கி இருக்காது.

—இடிச்சதா தெரியலே. புயல்லே கப்பல் இரண்டா உடைஞ்சு மூழ்கியிருக்காதா?

—அதுக்கும் சந்தர்ப்பம் உண்டு. ஆறு ஜூலி பதிஞறு ட்ரிப் இந்தியா போய் வந் திருக்கு. பலமாத்தான் இருக்கும். அந் நாளைய கப்பல் 50, 60 ட்ரிப் கூட இந்தி யாவுக்கு அடிக்கும்.

வொய்ட் யோசித்தார்.

—ஒருவேளை, உடைஞ்சு போச்சு வச்சுக் குங்க, என்றுர் வொய்ட்.

—உடைஞ்சா நீங்க சொல்றபடி மூழ்கி இருக்கணும். முதல்லே இந்த டைவர்ஸ் வரட்டும். கீழே கடலுக்கு அடியிலே நிலைமை எப்படி இருக்குன்னு கேட்கலாம்.

இருவரும் பிரிந்தார்கள்.

வொய்ட் தமது காபின் நம்பர் ஒன்றுக்கு வந்தார்.

கதவை அடைத்ததும் ஜிலுஜிலு என்று ஏர் கண்டிஷன் குளிர் அவரை அணைத்தது. மிருது வெளிச்சம். உயர்ந்த நேர்த்தியில் ஜோடிப்புச் செய்திருந்த அந்த அறையின் வலது ஓரம் அந்த நவீனக் கட்டிலில் கேட ரீனு ஆவலோடு காத்திருந்தாள்.

—கம் ஆன் ஹனி! என்றுர் வொய்ட்.

—எவ்வளவு லேட்?

என்று சிணுங்கல் கொடுத்து எழுந்தாள்.

ஒரு மார்ட்டினியை ஊற்றி அவளும் அவரும் எடுத்துக் கொண்டார்கள்.

—உங்கள் ஆராய்ச்சி எவ்வளவு தூரம்? (கேடரீனு).

—எனக்கு நம்பிக்கை எப்போதும் உண்டு.

—எவ்வளவு தங்கம் என்றீர்கள்?

—டௌனின் தெருவை விலைக்கு வாங் கிடுவேன்.

—ரொம்பப் பீற்றிக் கொள்ளாதீர்கள். கிடைத்தால்தானே!

—நிச்சயம் கிடைக்கும். நாங்கள் நாலு பேரும் பணக்காரர்கள் ஆகிவிடுவோம். நீ ஒரு பெரிய பிஸினெஸ் சாம்ராஜ்யத்துக்கு ராணி ஆகிவிடுவாய்.

மூன்று கிளாஸ்கள் இறங்க, கேடரீனு மெத்தையில் சாய்ந்தாள். மல்லாந்தநிலையில் அவள் உருவம் வரவேற்புக் காட்டியது. ஜாடையாக வொய்ட்டைப் பார்த்தாள்.


வொய்ட் எழுந்தார். ஆஜானுபாகுவான தேகம்.

மெத்தையில் அமிழ, மெத்தை பெரிதாக நைந்தது.

மீதிகளை மார்ட்டினி கவனித்துக் கொண் டது.

காபின் கதவு அப்போது தட்டப்பட, —பாஸ்டார்ட் என்று விலகினுர் வொய்ட்.

(தொடரும்)



உங்களுடைய விமல் விற்பனையாளரிடம் கேட்டு வாங்குங்கள்: ஸரிகா, டுவைன் ஜிவெல், ராயல் ஜெம்,
பாலியெஸ்டர் டிஷ்யூ கிரேப்.
அத்துடன் ஸில்க் ஸிலிலோர், ஸ்வீட் ஸைமடி, கோல்டன் பீக், ஸிவோல்டா மற்றும் ஃப்ரென்ச் சிஃபான்.
® is the Registered trademark of Reliance Textile Industries Ltd.
VIMAL/SS/79 TAM

மௌனம்



தலையை ஆட்டியவாறு லால்குடி வய லினை சதாசிவம் ரசித்துக் கொண்டிருந்தார்.

மீதமிருந்த பாத்திரங்களைக் கழுவிவிட்டுக் கவிழ்க்கப் போனவள், ''அப்பா படுக்கைக் குப் போய்விடப் போகிறாரே'' என்ற அவ சரத்தில் அப்படியே கையை அலம்பிக் கொண்டு, தூக்கி இடுப்பில் செருகிய புட வையைக் கூட அவிழ்க்காமல் ஹாலுக்கு வந்தாள் சுஜா.

வெற்றிலைச் சீவலை வாய் நிறைய மென்ற வாறே கண்களை மூடிக் கச்சேரியில் லயித் திருந்தார் சதாசிவம். ''இத்துடன் நிகழ்ச்சி முடிகிறது'' என்று அறிவித்தது ரேடியோ.

''அப்பா....'' பவ்யமாக அழைத்தாள், சுஜா.

''என்ன.....?'' கண்களை மெல்லத் திறந்து தலையைத் திருப்பினார் சதாசிவம்.

அவருடைய கனிவான பார்வை, அவ ளுக்கு உற்சாகமூட்டியது. நாளைக்கு 'மூட்' எப்படி இருக்குமோ? இன்றே சப்ஜெக்டை எடுத்துவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்து விட்டாள் சுஜா.

''ஆபீசிலே.... என்கூட 'வொர்க்' பண்ற மைதிலி.....'' வார்த்தைகளை இழுத்தாள்.

''அப்புறம்?''

''வந்து....அவளுடைய சித்தப்பா பிள்ளை யோட ஜாதகம் தந்தாள்.... பொருந்தி யிருக்கு.....'' — வார்த்தைகள் அறுந்தறுந்து வந்தன.

கண்கள் மலரத் திரும்பினார் சதாசிவம்.

அவர் முகத்தில் நிழலாடும் அந்த உணர்ச் சிக்குப் பெயர் மகிழ்ச்சியா? ஆச்சர்யமா?

''சுஜா.....பால்.....''

—சைகை காட்டினார் சதாசிவம்.

ஓ! மணி பத்தாகி விட்டதோ....

கடக் கடத் தம்ளரில் பால் கொண்டு வந்து கொடுத்தாள். வெற்றிலையைத் துப்பி விட்டுக் கழுவி வந்த சதாசிவம், பாலை ரசித்துக் குடித்து விட்டு எழுந்தார்.

தயங்கியவாறு நின்றிருந்த சுஜா, ''அப்பா....'' என்று மீண்டும் அழைத்தாள்.

''இன்னும் முடியலையா?'' என்கிறமாதிரி பார்த்தார் சதாசிவம்.

''அவா என்னுடைய எல்லாக் கண்டிஷன் களுக்கும் 'ஓகே'ன்னுட்டா. நாளன்னைக்குப் பொண்ணு பார்க்க இங்கே வரா.... நீங்க....''

''சுஜா.... எனக்குத் தூக்கம் வறது....'' கொட்டாவி விட்ட வாய்க்கு முன்னால், சொடுக்குப் போட்டவாறு படுக்கையைப் பிரித்துக் கொண்டார் சதாசிவம்.

சுஜாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. தான் சொல்வதைக் கேட்பதற்குக் கூட அவ ருக்குப் பிரியமில்லை; 'தூக்கம் வரதாம் தூக் கம்.... அந்த அம்மிக் கல்லை அப்படியே தூக்கி....' அடக்கிக் கொண்டாள் அவள்.

தாசில்தார் என்றால் ஆபீஸுக்கு மட்டு மில்லை, வீட்டுக்கும்தான் என்றிருந்தார் சதாசிவம். சுஜாவுக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய் அவர் வீட்டிலே ஒரு முழு நாள் தங்கியதாய்ச் சரித்திரமே இல்லை.

எப்போதாவது வீட்டுக்கு வந்தாலும் ஒரு படையோடு வருவார். அவரைப் பார்க்க வீட்டிலும் ஒரு படை காத்திருக்கும். எப் போதும் பிஸி.

வீட்டுக்கு வந்தாலே தூர்வாஸ முனிவர் ஆகிடுவார் அவர். மனைவியை அடி அடி என்று அடித்துத் தீர்த்து விடுவார். ரசத்தில் உப்பு அதிகம்; சாம்பாரில் உப்பு கம்மி, டிபன் சரியாயில்லை. வீட்டுக்கு வந்த பெரிய மனி தரைச் சரியாய்க் கவனிக்கவில்லை என்று அவர் மனைவியைத் தண்டிக்க ஏதாவது காரணம் வந்து சேரும். அவருக்கு மாடாய் உழைத் தாள் அவள். அப்பா வீட்டுக்கு வராமல் இருந்தாலே நல்லது என்று நினைத்துக்கொள் வாள் சுஜா.

தான் மட்டும் நன்றாக மக்காக உடுத்து வார். வயிறு நிரம்பச் சாப்பிடுவார். மனை விக்கு ஒரு புடவை கூட வாங்கித் தர மாட் டார். குழந்தைகளைக் கவனிக்க அவருக்கு நேரமே கிடையாது. உடலாலும் உள்ளத் தாலும் அடி வாங்கிய அவள், படுக்கையில் விழுந்தாள். கேட்பாரற்று தாராய் நலிந்து உயிர் விட்டாள்.


சுஜா பிறந்து பதினைந்து வருடங்களுக்குப் பிறகு ரகு. சாந்தியையும் சின்னஞ் சிறுக ளாய் விட்டு விட்டுப் போய்விட்டாள் அவள் அம்மா.

மனைவியின் சாவுக்குப் பிறகு கூட சதா சிவத்தின் அதிகாரம் குறையவே யில்லை. தன் வயிற்றில் பிறந்த குழந்தைகள் என்ற பாசம் துளிக்கூட இருந்ததில்லை.

சுஜாவையும் விரட்ட ஆரம்பித்தார் அவர். எப்படியோ இவற்றுக்கிடையேயும் படித்து

எஸ். எஸ். எல். சி. தேறினாள் சுஜா. அப்பாவின் கொடுமைகளிலிருந்து தப்பிக்கக் கிடைத்த வேலையில் சேர்ந்தாள்.

அதற்குள் சதாசிவமும் 'ரிடையர்' ஆகி விட்டார். 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையவில்லை'. அதே பாணியில் தனக்கு நல்ல உணவும் நல்ல வசதிகளும் கிடைக்க வேண்டும் என எண்ணினாரே தவிர குழந்தைகளைப் பற்றிய கவலை அவரை வாட்டுவதே யில்லை.



இவ்வளவு வயதாகியும், அவளுடைய வயதொத்த பெண்களெல்லாம் கல்யாணமாகிக் குழந்தையும் குட்டியுமாய் இருக்கும்போது சுஜா கல்யாணமாகாமல் இருப்பதை நினைத்து அவர் அலட்டிக் கொண்டதே இல்லை. எப்போதும் போல, சாப்பாடு, கச்சேரி, காலட்சேபம்....

சுஜாவுக்குப் பல சந்தர்ப்பங்களில் ஆத்திரமாய் இருக்கும். வீட்டை விட்டே ஓடிவிடலாமா என்று கூட எண்ணுவாள். ஆனால் அதற்கப்புறம் அப்பா ரகுவையும், சாந்தியையும் அம்போன்னு விட்டு விட்டுக் கிளம்பி விடுவாரே: அவர்கள் கதி அதோ கதி ஆகிவிடுமே என்று நினைத்து அடக்கிக் கொண்டு விடுவாள்.

ரகுவையும் சாந்தியையும் அழைத்துக் கொண்டு அப்பாவை விட்டுஎங்காவது தூரப் போய்விடலாம் என்று கூட நினைப்பாள். ஆனால் ஊரைக் கூட்டி அவளை அவமானப் படுத்தி விடுவார். பிறகு அவருடைய செயல் அவளை மட்டுமல்ல, ரகு, சாந்தியையும் கூடப் பாதிக்கும் என்று எண்ணிப் பேசாமலிருந்து விடுவாள் அவள்.

அவளுக்கு மாலையிடக் காத்திருந்த அத்தை மகன்கூட வெறுப்படைந்து வேறு பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டான்.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள் சுஜா. அவரோ அவளுடைய கல்யாணத்தைப் பற்றி நினைத்துக் கூடப் பார்ப்பதாக இல்லை. கேட்கிறவர்களிடம் கூட ஏதேதோ சால்ஜாப்புச் சொல்லிக் கொண்டிருந்தார் அவர்.

இப்போது அவளுக்கே, தனக்கு ஒரு துணை தேவை என்கிற உணர்ச்சி பெருகலாயிற்று. மெள்ள மெள்ள விஷயத்தை ஆரம்பித்தாள் சுஜா. முகத்தில் எந்தவிதச் சலனமும் காட்டாமல் இருந்து விட்டார் சதாசிவம்.

ஒன்றிரண்டு பேர் ஜாதகம் கொடுத்த போது, தானே ஜோஸியரிடம் போய்த் தன்னுடைய ஜாதகத்தையும் அவர்கள் ஜாதகத்தையும் கொடுத்துப் பொருத்தம் பார்த்தாள். நன்று பொருந்த வரன்களையும், சதாசிவம் உத்சாகமாகப் பதில் அளிக்காததால் தொடர முடியாமல் போயிற்று.



தனக்குக் கல்யாணம் ஆகாதோ என்ற பயம் அவளைப் பிடித்து வாட்டலாயிற்று.

ஒரு நாள் 'லஞ்ச்' நேரத்தில் ஏதேதோ பேசிக் கொண்டிருந்த போது, நடுவில் மைதிலியிடம் தன் குறையைச் சொல்லிக் கதறி அழுது விட்டாள் சுஜா. பரிதாபப்பட்ட மைதிலி தன் சித்தப்பா பிள்ளையின் ஜாதகத்தைத் தந்தாள். ஜாதகம் பொருந்தியிருந்தது.

அவர்கள் ரொம்பவும் நல்லவர்களாகவும் இருந்தார்கள். கல்யாணத்துக்கப்புறமும் ரகு சாந்தியை சுஜா தன்னுடன் வைத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் பெரிய மனத்தோடு ஒப்புக் கொண்டு மைதிலியிடம் சொல்லி அனுப்பி யிருந்தார்கள்.

மைதிலியின் சித்தப்பா, சித்தி இருவரும் பிள்ளையோடு பெண்



"இப்ப பேசறவா பெரிய சமையல்காரர் போலிருக்கு!"
"ஏன் அப்படி சொல்றீங்க?"
"பேச்சைப் பாருங்களேன்! 'மக்கள் நல்ல ரொம்ப நாள் மௌனமா அரைக்க முடியா துங்கறார், சாதனைகளைப் பொன் எழுத்தில் பொறிக்கணும்னு சொல்றார்; கருத்துகளைப் பரிமாறிக்கணும்னு சொல்றார்" —பூண்டி

பார்க்க, சுஜாவின் வீட்டுக்கு வருவதாய் முடிவாகி இருந்தது.

பாவம் சுஜா, அவளே ஏற்பாடுகள்செய்து, சதாசிவத்தைக் கஷ்டப்படுத்தாமலேயே மரியாதைக்காக அவர்கள் முன்னால் அவரை உட்கார வைப்பதற்கே அவளுக்குச் சிரமமிருந்தது.

தான் முன்னின்று நடத்த வேண்டிய தன் மகள் கல்யாணத்தில் ஒரு சிரமமுமில்லாமல், தனக்குக் கிடைக்கப் போகும் மரியாதையே அவருக்கு இஷ்டமில்லை. தன்னுடையசொந்த சுகங்களே அவருக்குப் பெரிதா யிருந்தது.

நாலரை மணி ஆகிவிட்டது. இன்னும் அரை மணி நேரத்தில் அவர்கள் வந்துவிடுவார்கள். சதாசிவம் இன்னும் எழுந்திருக்காமல், சிரத்தையே இல்லாமல், ஈஸி சேரில் சாய்ந்தவாறு 'ஹிந்து' பேப்பர் படித்தவாறிருந்தார்.

சுஜா, முதல் நாளே அவரிடம் எப்படியெல்லாமோ நைஸாகப் பேசி, குழைந்து, 'வேப்பிலை' அடித்து, பெண் பார்க்கும் நிகழ்ச்சிக்குச் சம்மதிக்க வைத்திருந்தாள். அதுவும் பல கண்டிஷன்களோடு — வெங்காய பஜ்ஜியும் கேஸரியும்தான் போட வேண்டும். அவர்கள் வந்ததும் அவர்கள் பேச ஆரம்பித்தவுடன்தான் தான் பேசுவார். போகும்போது வாசல் வரை மட்டுமே கூடப் போவார்.

சுஜா தன்னையே அடக்கிக் கொண்டு தன் எதிர்கால வாழ்வு நல்ல முறையில் அமைய வேண்டும் என்ற ஆதங்கத்தில் எல்லாவற்றுக்கும் தலையாட்டியிருந்தாள்.

சுஜா குட்டி போட்ட பூனையாய், புதுப் புடவை கட்டிக் கொண்டு, வாசலுக்கும் சமையலறைக்கும் நடந்தவாறிருந்தாள். அவர்கள் வருவதற்குச் சரியாகப் பத்து நிமிடங்களுக்கு முன்பாகத்தான் ஈஸி சேரை விட்டு எழுந்து சதாசிவம் போய் முகத்தை அலம்பிக் கொண்டு நல்ல பட்டு வேஷ்டியைக் கட்டிக் கொண்டு ரெடியாய் வந்து அமர்ந்தார். அவர் முகத்தில் மகிழ்ச்சிக்கான குறிகள் இருப்பதாகவே தெரியவில்லை. ஒரு முடுக்கிவிடப்பட்ட பொம்மை மாதிரி செயல்பட்டார்.

ஹாரன் சப்தம் கேட்டது. அவர்கள் வந்து விட்டார்கள். வரவேற்கக்கூட மனமில்லாமல் ஹாலிலேயே அமர்ந்திருந்தார் சதாசிவம். அவர்களாகவே வந்து அமர்ந்தனர். வாயைத் திறக்கவில்லை சதாசிவம்.

"உங்கள் சொந்த வீடா?" என்று பிள்ளையின் அப்பா கேட்ட பிறகே பேசலானார் அவர்.

டிபன், பரிமாறல், நமஸ்காரம், பாட்டு என்ற சம்பிரதாயங்கள் முடிந்தன.

"சார் எங்கே தாசில்தாரா இருந்தேள்?" என்று கேட்ட பிள்ளையின் அப்பாவுக்குச் சாங்கோபாங்கமாகத் தான் தாசில்தாராய் இருந்தபோது நடந்த சம்பவங்களை, அப்போது கலெக்டராக இருந்த பிரிட்டிஷ்காரர்கள், அவர்கள் 'டிஸிப்ளின்கள்', அவர்களுடைய மூதாதையர் வரலாறு என்றெல்லாம் ஏதேதோ பேசினாரே தவிர தன் மகள் சுஜாவைப் பற்றி, அவள் கல்யாணத்தைப் பற்றி... ஹூம்... ஒரு வார்த்தைகூடக் கிடையாது.

உள்ளே உட்கார்ந்தவாறு பொருமிக் கொண்டிருந்தாள் சுஜா.

சிறிது நேரம் கழித்து அவர்களும் புறப்பட்டார்கள். போகும்போதே, பெண்ணைத் தங்களுக்குப் பிடித்து விட்டதென்றும், எப்போது கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம், எப்படி வைத்துக் கொள்ளலாம் என்பது பற்றி சீக்கிரமே முடிவு செய்து எழுதுமாறும் சொல்லிவிட்டுப் போனார்கள்.

சதாசிவம் வெறும் கல்லாய் அவர்கள் முன்னால் நின்று கொண்டிருந்தார்.

ஒரு வாரமாயிற்று.

தினமும் மைதிலி சுஜாவைப் பிடுங்கி எடுத்துக்கொண்டிருந்தாள்.

சதாசிவம் அவர்களுக்குப் பதில் போடுவதாகவே தெரியவில்லை.

சுஜா தினமும் அவரிடம் 'நைஸாக' இதைப் பற்றிப் பேச ஆரம்பிப்பாள். 'வாணி மஹாலில் கச்சேரி, அகாடமியில் காலட்சேபம், உடம்பு சரியில்லை' என்றெல்லாம் சாக்குச் சொல்லியவாறு பேச்சைத் திசை திருப்பி விட்டுப் போய்விடுவார்.

அன்று எப்படியும் இரண்டில் ஒன்று பார்த்து விடுவது என்று காத்திருந்தாள் சுஜா.

இரவு மணி ஏழு.

சட்டையை மாட்டிக் கொண்டிருந்தார் சதாசிவம். எங்கோ கிளம்புகிறார் என்று உணர்ந்தவள், "அப்பா" என்றவாறு அவரருகில் வந்தாள்.

"என்ன?" என்று திரும்பினார்.

"அவாளுக்குப் பதில்?..."

"எதுக்கு?"

"கல்யாணத்துக்கு டேட்..."

"ஸ்டாப் இட்...அந்த இடத்திலே சம்பந்தமா?... அந்த ஆளு... அவருக்கு மரியாதையே தெரியலில்லே;.. என்னைவிடச்சின்னவன், கொஞ்சம் கூட மரியாதை இல்லாம... கால் மேலே கால் போட்டுண்டு..."

"அவருக்கு 'ரொமாடிக்' கம்ப்ளெயின்ட்டாம்... காலை ரொம்ப நேரம் தொங்கப் போட முடியாதாம்...."

''அந்தம்மா... நீ பாட்டுக்கு என்னம்மா சாரங்காவிலே பாடறே... ஊளவளன்னு பேசிண்டு ரசிகத் தன்மையே இல்லாம மாடு மாதிரி...''

''அப்பா... என்னதான் சொல்றேன்?''

—கத்திவிட்டாள் சுஜா.

''நோ... ஐ காண்ட்... இந்த மாதிரி ரசனையும், மரியாதையும் இல்லாதவாகிட்டே சம்பந்தம் வச்சிக்க எனக்குப் பிடிக்கலே...''

''அவாளோட குடித்தனம் பண்ணப் போறது நான்தான்.''

''அதனுலென்ன?''

''நீங்க ஒண்ணும் எழுதவேணும். நீங்க கல்யாணத்தன்னிக்கு வந்து வாழ்த்திஞப் போதும். அதுவும் பிடிச்சிருந்தா... நானே அவாளைப் பார்த்துப் பேசிக்கிறேன்.''

''இட் ஈஸ் டு லேட்... என்னுடைய 'ப்ரெஸ்டீஜைப் பாதிக்கிற அந்தச் சம்பந்தம் வேணும்னு நானே அவாளுக்கு எழுதிப் போட்டுட்டேன். இத்தனை நேரத்துக்கு அது போய் அவாளுக்குச் சேர்ந்திருக்கும்.''

இடி விழுந்தாற் போல ஸ்தம்பித்து நின்று விட்டாள் சுஜா.

எதிரே உணர்ச்சியற்ற ஜடமாய் இருந்தார் சதாசிவம்.

''ஏன்யா, நீங்களெல்லாம் மனுஷங்களாயா? உங்க சொத்து, சுகங்களுக்கும் 'ப்ரஸ்டீஜ்'களுக்கும்தான் முக்கியத்துவம்! உங்களுடைய குழந்தைகளுடைய வாழ்க்கைகளைப் பத்தின எண்ணங்களே உங்களுக்கு இல்லேன்னு ஏன்யா குழந்தைகளைப் பெத்துக்கிட்டீங்க? உங்களாலே அவங்களுக்கு நல்ல வாழ்வுதான் கொடுக்க முடியலே... அட்லீஸ்ட் அவங்களே தேடிக்கிற வாழ்க்கைக்குக் குறுக்கே நிக்காம இருக்கலாமே... உங்க சுயநலத்துக்காக அவங்களைப் பலி ஆடா ஆக்கறீங்களேய்யா...'' என்று வாய் விட்டுக் கதறி அவர் கழுத்தை நெரிக்க வேண்டும் போல வெறியாயிற்று அவளுக்கு.

ஆனல் அவள் வாழ்வின் சூன்யமான எதிர்காலம் அவளைப் பெரும் பாரமாய் அழுத்தி வாயடைக்கச் செய்திருந்தது.

அங்கவஸ்திரத்தைத் தோளில் போட்டுக் கொண்டு கச்சேரிக்குக் கிளம்பலானர் சதாசிவம்.

பெண்ணுக்கு யார் காவல்?

மனைவி மீது சந்தேகப்பட்டு அவளைக் கொன்றுவிடுகிற சம்பவங்களைக் கேள்விப்படுகிறோம். அந்தச் சந்தேகப் பேய்தான் இந்தப் படத்தின் மூலக் கதை, திரைக் கதை எல்லாம்.

விஜயகுமார், ஜெயசித்ரா இருவரும் ஓடிப் பிடித்து, கட்டியணைத்து, சிரித்து விளையாடி, சீறிப் பாய்ந்து கடைசியில் பிரிந்து விடுகிறார்கள்.

கள்ளங் கபடமற்ற கிராமத்துப் பெண்ணாக வரும் ஜெயசித்ரா இப்படத்தில் நடிப்புக்கு முதல் 'மார்க்' வாங்குகிறார். அவர் நடிப்பில் ஆரம்பத்தில் பொங்கி வரும் புதுப் புனலின் வேகமும், இடைவேளைக்குப் பிறகு ஆழங் காண முடியாத மடுவின் அமைதியும் நன்கு வெளிப்படுகின்றன. ஊராரின் ஏச்சுக்களைக் கேட்டுக் கடிந்து கொண்டிருந்த சின்னம்மா தன் கணவனுலேயே ஏசப்பட்டதும் கண்ணீரில் கரைந்து விடுகிறுள். ஜெயசித்ரா அந்தப் பாத்திரத்துக்கு உயிர் கொடுத்து விட்டார்!

விஜயகுமாரின் நடிப்பில் துடிப்பும் நொடிப்பும் நன்கு வெளிப்படுகின்றன. அவர் 'சிக்' கென்று தம் உடம்பைப் பாதுகாக்கும் பாணியை மற்ற நடிகர்களும் பின்பற்றலாமே!

கிராமத்து அப்பாவி மிட்டாய்க்காரனாக வரும் ஸ்ரீகாந்த் அருமையாக நடித்திருக்கிறார். மனைவியைப் பற்றிய சந்தேகப் பேயை நம்பத் தொடங்கிய மறு விநாடியே அவர் நடிப்பு சந்தேகத்துக்கு இடம் இல்லாமல் உயர்ந்து விட்டது.

காமெடிக் காட்சிகளுக்குத் தேங்காய் சீனிவாசன், சுருளிராஜன், வி. கே. ராமசாமி ஆகியவர்கள் உயிர் கொடுக்கின்றனர்.

ஆற்றங் கரையும், ரயில் பாலமும், அதில் அடிக்கடி போகும் ரயில்களும், பரிசல் துறையும், ஆற்றில் மிதக்கும் பரிசல்களும் வண்ண ஒளிப் பதிவில் பார்க்கப் பரவசமூட்டுகின்றன.

துரையின் டைரக்ஷன் படத்தின் தனிச் சிறப்பு.

''பெண்ணுக்கு யார் காவல்?'' என்று மண்டையைச் சொறிந்து கொண்டிராமல், ஒரு நல்ல படம் பார்த்தோம் என்று மகிழ்வோமே!

—காந்தன்



அம்மா உங்கள் கவனிப்பு கரை கடந்தது.

உலகிலோர் ஒப்பிலா
மணி யென அவளுக்கு
உணர்த்திடும் அன்புறவே.



everest/79/PP/196-tm

ஆறுதல் தேவையம்மா
அடிக்கடி அவளுக்கு.

அவளை சீராட்டி வளர்க்க
நீங்கள் எதனையும்
செய்வீர்கள்: குளிப்பாட்டி,
உடை உடுத்தி, உணவூட்டி,
உடல் நலம் பேணிக்
காப்பதில் நீங்கள் எடுத்துக்
கொள்ளும் கவனம்தான்
எவ்வளவு?


கருத்துள்ள அதே கவனம்
பளிச்சிடுமே நீங்கள்
அவளுக்கு தேர்ந்தெடுக்கும்
பிஸ்கட்டிலும். திண்ணம்
அதுவே, தீவிர சுகாதார
முறையில் கைபடாத்
தூய்மையோடு தயாரித்த
பிஸ்கட்.

நீங்கள் அவளுக்கு ஊட்டும்
உணவிலே உள்ளதைப்
போன்ற நிகரான
ஊட்டச்சத்து அதிலே: பால்,
சர்க்கரை, க்ளூகோஸ்,
செரிப்பதற்கு எளிதாக
இழைய அரைத்த கோதுமை.

கண்மணிக்கென்று உங்கள்
கரம் தொடும் அந்த பிஸ்கட்
கரகரப்பானது, சுவை
மிக்கது. கொரித்து, ரசித்து
மகிழ்வாளே உங்கள்
குழந்தை.

எண்ணிப் பாருங்கள்:
7 உலக விருதுகளைவென்ற
இந்தியாவின் அதிநவீன
பிஸ்கட் தயாரிப்பாளர்-
களின் படைப்பை.

பாப்பா படம் போட்ட இந்த
வண்ணமய உறையை
பார்த்து வாங்குங்கள்.



7, உலக விருதுகளை வென்றது.

பார்லே
க்ளூகோ

உங்கள் பாசத்தைப் பேசிடும் குழந்தை பராமரிப்பு பிஸ்கட்.

கல்லூரியில் 'குவிஸ்'

எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண்மணி யார்?

(சென்னை மீனம்பாக்கத்தில் உள்ள ஏ.எம். ஜெயின் கல்லூரி. இங்கு ஒரு 'குவிஸ் கிளப்' மாணவரிடையே இயங்குகிறது. கல்கி குவிஸ் நிகழ்ச்சியில் பங்கேற்க மாணவரிடையே ஒரே போட்டி. சுமார் ஐம்பது மாணவர்கள் இப்போட்டியில் பங்கேற்க விரும்பியதன் காரணமாய், இக்கல்லூரியின் 'குவிஸ் கிளப்' ஒரு பூர்வாங்க போட்டியை நிகழ்த்தி 'கல்கி' குவிஸ் போட்டியில் பங்கேற்க ஆறு மாணவர்களைத் தேர்ந்தெடுத்தது. 'கல்கி'யின் கேள்விகளைக் கொண்டு போட்டியினை நடத்திக் கொடுக்க முன்வந்தார் ஆங்கிலப் பேராசிரியரான திரு வி. கே. ராமமூர்த்தி. மற்றும் சில பேராசிரியர்களும், கல்லூரி மாணவர் சங்கத்தின் உதவி சேர்மன் திரு ஷிஹாபுதீன் அகமதும் இந்நிகழ்ச்சி சிறப்பாக நிகழ ஒத்துழைப்பு அளித்தது குறிப்பிடத் தக்கது.)

போட்டியில் பங்கேற்ற மாணவர்கள்:


1. ஆர். பிரபாகரன்
2. ஆர். ரவிகுலசந்திரன்



✖ எவரெஸ்டு சிகரம்



✖ ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக்



✖ ஐ.நா. சபை கட்டிடம்

3. அசோக் மனிகோட்
4. கே. பாலசந்தர்
5. அதுல் மதுர்
6. டி. எஸ். நாராயணஸ்வாமி

கேள்விகள்

1. 'Motel' என்பது எதனைக் குறிக்கிறது? (இதற்கான விடையில் ஓரளவை திரு பாலசந்தர் கூறினாலும், மிகச் சரியான விடையைக் கூறி மதிப்பெண்ணைப் பெற்றவர் திரு பிரபாகரன்.)
2. டாக்டர் ஹெட்கேவரின் பெயர் (Dr. Hedgewar) எந்த இந்திய இயக்கத்துடன் சம்பந்தப்பட்டது? (பாலசந்தர் சரியான விடையைக் கூறினார்.)
3. INTERPOL என்பதன் விரிவு என்ன? (திரு பிரபாகரன் சரியான விடையைக் கூறினார்.)
4. டியோடர் கோப்பைப் பந்தயம் எந்த விளையாட்டுடன் சம்பந்தப்பட்டது? அப்போட்டியில் ஒரு சிறப்பு அம்சம் என்ன? (சரியான விடையைக் கூறியவர் அதுல் மதுர்)
5. பத்தாவது ஆண்டுவிழா 'Decennial' எனப்படுகிறது. பதினைந்தாவது ஆண்டு விழா எவ்விதம் அழைக்கப்படுகிறது? (பார்வையாளரில் மாதவ் என்ற மாணவர் விடையைக் கூறினார்.)
6. Interpretation of Dreams எனும் நூலின் ஆசிரியர் யார்? (அசோக் மனிகோட் சரியான விடையைக் கூறினார்.)
7. வெடி மருந்தை (Dynamite) கண்டு பிடித்தது யார்?



✖ நிர்வாகிகளும் போட்டியில் பங்கேற்ற மாணவர்களும். இடமிருந்து மூன்றாவதாக உட்கார்ந்திருப்பவர் குவிஸ் மாஸ்டர் பேராசிரியர் வி. கே. ராமமூர்த்தி.

(நாராயணஸ்வாமி சரியான விடையைக் கூறினார்.)

8. செஸ் விளையாட்டில் எந்தக் காயைப் பின்னால் நகர்த்தக் கூடாது? (இக்கேள்விக்குப் பதிலளிக்க ஏக உற்சாகம். பாலசந்தர் சரியான விடையைக் கூறினார்.)
9. UNIDO என்பதன் விரிவு என்ன? (சரியான விடையை எவரும் கூறவில்லை)
10. எவரெஸ்ட் சிகரத்தை அடைந்த முதல் பெண்மணி யார்? (சரியான விடையைக் கூறியவர் பாலசந்தர்.)

11. Fourth Estate என்பது எதனைக் குறிக்கும்? (சரியான விடையை பாலசந்தர் கூறினார்.)

12. குரோனோ மீட்டரின் (Chronometer) உபயோகம் என்ன? (இக்கேள்விக்கான பதிலை அளித்து மதிப்பெண் பெற்றவர் திரு பாலசந்தர்.)

13. ICBM என்றால் என்ன? (பிரபாகரன் சரியான விடையைக் கூறினார்.)

14. சவூதி அரேபியாவின் தலைநகரம் எது? (அசோக் மனிகோட் சரியான விடையளித்தார்.)

15. National Institute or Oceanography எங்குள்ளது? (அதுல் மதுர் சரியான விடையைக் கூறினார்.)

16. அமெரிக்காவின் (USA) உதவி ஜனாதிபதி யார்? (பாலசந்தர் சரியான விடையைக் கூறினார்)

17. 'Scholar Extraordinary' என்ற நூலின் ஆசிரியர் யார்? (இக்கேள்விக்குச் சரியாக எவரும் விடையளிக்கவில்லை.)


18. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே இதுவரை எத்தனை அதிகார பூர்வமான கிரிக்கெட் 'டெஸ்ட்' போட்டிகள் நடைபெற்றுள்ளன? அவைகளின் முடிவுகள் என்ன? (நாராயணஸ்வாமியும் அதுல் மதுரும் இக்கேள்விக்குப் பதிலளித்து மதிப்பெண்களைப் பகிர்ந்து கொண்டனர்.)

19. VOODOO என்றால் என்ன? (சரியான விடையைக் கூறியவர் பாலசந்தர்.)

20. நாடாளுமன்ற லோக் சபையின் தற்போதைய சபாநாயகர் யார்? (ரவிகுலசந்திரன் சரியான விடையைக் கூறினார்.)

21. 'Nom-de-plume என்று கூறுவது எதனைக் குறிக்கும்? (அசோக் மனிகோட் விடையைச் சரியாகக் கூறி மதிப்பெண் பெற்றார்.)

22. விளையாட்டுத் துறையில் பெற்ற சிறப்பினைப் பாராட்டும் விதமாக மத்திய



✖ சமஸ்கிருத பேராசிரியரிடமிருந்து திரு பாலசந்தர் பரிசு பெறுகிறார்.

✖ பார்வையாளரில் ஒரு பகுதி.

அரசு அளிக்கும் விருதின் பெயர் என்ன?
(ரவிகுல சந்திரன் சரியான விடையைக் கூறினார்.)

23. சிண்டிகேட் வங்கியின் தலைமை அலுவலகம் எங்குள்ளது?
(சரியான விடையைப் பிரபாகரன் கூறினார்.)

24. ஜெனரல் டிகாலின் (General De Gaulle) இயற்பெயர் (Christian name) என்ன?
(எவரும் சரியான விடையைக் கூறவில்லை.)

25. திரு. வல்லிக்கண்ணன் தமது எந்த நூலுக்காக சாகித்ய அகாதமி பரிசு பெற்றார்?
(பார்வையாளரிலிருந்து ரமேஷ் என்ற மாணவர் சரியான விடையைக் கூறினார்)

26. 'Detente' என்பது எதனைக் குறிக்கிறது?
(சரியான விடையை திரு. பாலசந்தர் கூறினார்.)

27. அருணாசலப் பிரதேசத்தின் உயர்நீதி மன்றம் எங்குள்ளது?
(எவரும் விடையளிக்கவில்லை.)

28. பிரபல ஹாலிவுட் படத் தயாரிப்பாளர் ஆல்ஃப்ரெட் ஹிட்ச்காக் சமீபத்தில் பெற்ற சிறப்பு என்ன?
(பாலசந்தர் சரியாக விடையளித்தார்.)

29. டயாலிஸிஸ் (Dialysis) என்பது எதனைக் குறிக்கிறது?
(திரு மதுர் சரியாக விடையளித்தார்.)

30. ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் எங்குள்ளது? ஐக்கிய நாடுகள் சபைக்கு அவ்விடம் எவ்வாறு கிடைத்தது?
(இக்கேள்விக்கான விடையை பிரபாகரனும், பாலசந்தரும் இணைந்து கூறி மதிப்பெண்களைப் பகிர்ந்து கொண்டனர்.)

பெரும்பாலான கேள்விகளுக்கு மாணவர்கள் பளிச்சென்று உடனுக்குடன் விடையளித்தது குறிப்பிடத் தக்க அம்சமாகும். இக்கல்லூரியில் இயங்கும் க்விஸ் கிளப் நிகழ்த்தும் போட்டிகளால் மாணவர்களது பொது அறிவு விருத்தி அடைந்துள்ளதாகக் கல்லூரி ஆசிரியர்களில் சிலர் பெருமையுடன் குறிப்பிட்டனர்.


'கல்கி' க்விஸ் போட்டியில் பாலசந்தர் அதிக மதிப்பெண்களைப் பெற்று ரூ. 50 பரிசு பெற்றார். கல்லூரியின் சம்ஸ்கிருதப் பேராசிரியர் ராமதாஸ் அவர்கள் பாலசந்தருக்குப் பரிசை வழங்கினார்.

விடைகள்

(1) நெடுஞ்சாலைகளில் காரில் பயணம் செய்வோர் கார்களை நிறுத்தி வைக்கவும், தாங்கள் தங்கவும், உணவருந்தவும் வசதி அளிக்கும் அமெரிக்க தங்கு விடுதிகள். (2) ராஷ்ட்ரீய ஸ்வயம் சேவக் இயக்கம். (3) International (Criminal) Police Commission (4) Deodhar Trophy கிரிக்கெட் விளையாட்டுடன் சம்பந்தப்பட்டது. ஒவ்வொரு அணிக்கும் 60 ஓவர்கள் என்ற கணக்கில் விளையாடப்படும் இப்பந்தயத்தில் இந்தியாவிலுள்ள பிராந்திய அணிகள் (Zonal teams) போட்டியிடுகின்றன. வெற்றி பெறும் அணிக்கு Deodhar trophy அளிக்கப்படுகிறது. (5) Quindecennial (6) Sigmund Freud (7) ஆல்ஃப்ரெட் நோபல் (8) பான் (Pawn) (9) United Nations Industrial Development Organisation (10) Mrs Junko Tabei (திருமதி ஜுன்கோ டாபி) (11) பத்திரிகைகளை (12) மிகத் துல்லியமாக நேரத்தைக் கணக்கிட கப்பல் தளத்தில் உபயோகிக்கப்படும் கடிகாரம். (13) Inter Continental Ballistic Missiles (14) ரியாத் (Riyadh) (15) கோவாவில், பனாஜியில் உள்ளது. (16) வால்டர்எஃப். மாண்டேல் (17) நிராத் சி. சௌத்ரி. (18) 24 டெஸ்ட்கள். இந்திய அணி நான்கு டெஸ்ட்களிலும், பாகிஸ்தானிய அணி 3 டெஸ்ட்களிலும் வெற்றி பெற்றுள்ளன. மீதி 17 டெஸ்ட்கள் வெற்றி தோல்வியின்றி டிராவில் முடிந்துள்ளன. (19) நீக்ரோக்கள் இடையே அப்பியசிக்கப்படும் ஒரு மந்திர வாதம். (20) பல்ராம் சௌத்ரி. (21) ஒரு நூலாசிரியரின் புனை பெயர் என்று பொருள்படும். (22) அர்ஜுனா விருது. (23) கர்னாடகாவில் மணிபாலில் உள்ளது. (24) Charles Andre Joseph Marie (25) புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (26) இரு பகைமை நாடுகளுக்கிடையே(குறிப்பாக அமெரிக்கா, ரஷ்யா நாடுகளுக்கிடையே) யான சுமுகமான உறவைச் சரியாக்கும் முயற்சி. (27) கௌஹாத்தி உயர்நீதி மன்றம்தான் அருணாசலப் பிரதேசத்தின் உயர்நீதி மன்றம். (28) இங்கிலாந்து ராணியால் அளிக்கப்படும் 'Knighthood' (29) Dialysis என்பது ஒரு மருத்துவ வார்த்தை. செயற்கை சிறுநீரகத்தைக் கொண்டு (Dialysis Unit) உடலின் ரத்தத்தைப் பரிசுத்தமாக்கும் முறை டையலிஸிஸ் எனப்படுகிறது. (30) ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் நியூயார்க்கில் உள்ள மான்ஹட்டன் தீவில் உள்ளது. கட்டிடம் அமைந்துள்ள இடத்தை ஐக்கிய நாடுகள் சபைக்கு ஜான் டி. ராக்ஃபெல்லர் நன்கொடையாக வழங்கினார்.


தொகுப்பு: நாயகன்
புகைப்படங்கள்: மன்னை மூர்த்தி

அவன்: மானேஜர் அறைக்குள் நுழையும் போது பெரிசா ஒரு தும்மல் போட்டுக்கிட்டுத் தான் நுழைவேன்!
இவன்: எதுக்குடா?
அவன்: மானேஜர் திடுக்கிட்டு விழித்துக் கொள்ளத்தான்!
— உ. ராஜாஜி



எனது வியப்பின் காரணம்...
பின்னியின் பால்ஃபர் (Balfour)
பனியன்கள், அண்டர்வேர்கள்
அப்பாவின் உடலுக்கு
மெருகூட்டுவதே.

Binny's Balfour Banians and Briefs



தர நிர்ணயம்:
பின்னி லிமிடெட்
பின்டெக்ஸ் டிவிஷன்
சென்னை 600 001

FDS BL 2972A TAM

அறுவை சிகிச்சை இன்றி மூலத்தை சுருக்குவீர் நமைச்சலையும் வலியையும் அபூர்வ மருந்தால் விரட்டுவீர்

நியூயார்க்—மருத்துவ விஞ்ஞானத் துறை இப்போது பெருமளவில் மூலநோயை அறுவை சிகிச்சை இன்றி சுருக்கும் ஒரு மருந்தைக் கண்டுபிடித்துள்ளது. மூலநோயால் ஏற்படும் வலியும் நமைச்சலும் நீங்கி, அதிவிரைவில் மூலம் சுருங்கி குண மேற்பட்டிருப்பதை டாக்டர்களின் பரிசோதனைகள் நிருபித்துள்ளன. பல ஆண்டுகள் மூலநோயால் துன்புற்றோர் கூட, ''மூலநோய்ப் பிரச்சனை முடிந்து விட்டது'' என்று மகிழ்வதாக கூறப்படுகிறது.

இப் புதிய மருந்தான ப்ரெபரேஷன் எச் களிம்பு, மூலத்தை சுருக்க உதவுவதோடு, நமைச்சலை நீக்கி வலியைத் தணிக்கிறது; மலப் போக்கின் போது வலியைக் குறைத்து எளிதாக்குகிறது.

ப்ரெபரேஷன் எச், இடும் குழாயுடன், 30 மற்றும் 50 கிராம் ட்யூபுகளில் எல்லா கெமிஸ்ட்டுகளிடமும் கிடைக்கிறது.

இலவசம்! மூல நோய் பற்றிய விளக்கப் புத்தகத்தைப் பெற 25 பைசா தபால் தலையுடன் எழுத வேண்டிய முகவரி: டிபார்ட்மெண்ட் PH-85, த.பெட்டி எண் 10133, பம்பாய் 400 001.

186 PH 92 TAM

குறைகள் நிறைகளாகின்றன!

பகவத்சிங் அன்பரசு

பாலு வெளியே கிளம்பத் தயாராக இருந்தான். அப்போது அவனது தந்தை சோமசுந்தரம், ''பொண்ணு வீட்டுக்காரங்க திரும்பவும் சொல்லி அனுப்பியிருக்காங்கப்பா'' என்று அவனிடம் விஷயத்தைத் தெரிவித்தார்.

அவன் அன்றே முடிந்து விட்டதென்று ஒதுக்கிவிட்ட பிரச்னை மீண்டும் தலைதூக்கி நிற்பதைக் கண்டு குழம்பினான்.

• • •

போன வாரம் பாலுவுக்குப் பெண் பார்க்கப் போய் வந்தனர்.

பெண் சுந்தரி அவள் பெயருக்கேற்றபடி மிகவும் அழகாகப் பொன்நிறத்தில் வாளிப்பான சாயலுடன் மிளிர்ந்தாள்.

அவளுக்குப் படிப்பும் அத்துடன் ஆசிரியை வேலையில் சம்பாத்தியமும் இருந்தது.

அவள் ஏழை வீட்டுப் பெண்ணாகப் பிறந்ததைத் தவிர வேறு குறை அவளுக்கு இருக்கவில்லை.

பெண்ணைப் பார்த்ததும் அவனது பெற்றோருக்குப் பிடித்துவிட்டது.

அவனது தங்கைக்கும் பிடித்து விட்டது. அவள் பெண் வீட்டிலேயே தனது சந்தோஷத்தை வெளிப்படுத்தி மகிழ்ச்சி யடைந்தாள்.

அவனது பெற்றோர் அவனிடம் பெண்ணைப் பற்றி விசாரித்தபோது அவன் தன் எண்ணங்களைத் தெரிவித்து மறுத்தான்.


அவர்கள் வியப்படைந்தனர். அவர்கள் பல விஷயங்களை எடுத்துச் சொல்லி அவன் மனத்தை மாற்ற முயன்றனர்.

அவனது தந்தையும் அவனது முடிவை மாற்ற முயன்றார்.

ஆனால் அவன் பிடிவாதமாகத் தன் முடிவில் உறுதியாக நின்றான்.

மலேசியாவில் என்னைக் கவர்ந்த ஒரு வாக்கியம்

''பூக்களை மலர்விப்பதன் மூலம் பூமி சிரிக்கிறது!'' — வ. தேனப்பன்



வேறு வழியின்றி அவனது பெற்றோர் அடுத்த நாளே பெண் வேண்டாம் என்று பெண் வீட்டாருக்குத் தகவல் சொல்லி அனுப்பி வைத்தனர்.

அதன் பின் இன்று காலை பெண் வீட்டாரிடமிருந்து பெண்ணைத் தர விரும்புவதாக மீண்டும் தகவல் வந்தது.

அவன் பெற்றோர் மகிழ்ந்தனர்.

மாலை அவன் அலுவலகத்திலிருந்து வீட்டுக்கு வந்த சிறிது நேரத்தில் அவனிடம் அவனது தந்தை அந்த விஷயத்தைப் பேச ஆரம்பித்தார்.

• • •

சோமசுந்தரம் மகனைப் பார்த்தார்.

அவன் ஒன்றும் பேசாமல் மௌனமாக இருப்பதைக் கண்டு அவர் பேசத் தொடங்கினார்.

''என்னப்பா சொல்றே?''

''பெண் பார்த்துட்டு வந்த அன்னிக்கே என் முடிவைச் சொல்லிட்டேன். இப்பவும் அதுதான் என் முடிவு.''

அவன் தன் முடிவில் தளரவில்லை.

''ஆமாம். நீ சொன்னே. நாங்களும் சொல்லி அனுப்பிட்டோம். ஆனா அவங்க விரும்பித் திரும்பவும் சொல்லி அனுப்பியிருக்காங்க.... நீயும் கொஞ்சம் யோசனை பண்ணிச் சொல்லு. நல்ல பெண்களை உதாசீனம் பண்ணக் கூடாது.''

''அவங்க எனக்கு விரும்பிப் பெண் கொடுக்க நினைச்சிருக்க மாட்டாங்க. என்னைப் பார்த்ததும் கிளியைப் பெத்துப் பூனை கையிலே கொடுக்கிறதான்னு வேதனைப் பட்டிருப்பாங்க. ஆனா ஏழ்மையினாலே பெண்ணுக்கு வசதியான இடமாவது கிடைக்கட்டும்னு நொந்து போய்ச் சொல்லியிருப்பாங்க. பெத்தவங்களுக்கு எவ்வளவு வருத்தமா இருக்கும்னு எனக்குத் தெரியும். அவங்களே அப்படி வருத்தப்படறப்ப பெண்ணுக்கு எப்படி இருக்கும்?''

அவன் தன் மனப் போக்கின்படி பதில் சொன்னான். சோமசுந்தரம் நெற்றியைச் சுருக்கிக் கொண்டார்.

''பொண்ணுக்குத்தாம்பா அழகு வேணும்! ஆணுக்கு எதுக்கு அழகு? நீ நினைக்கிற மாதிரி பொண்ணுக்கு ஈடா ஆண் அழகா இருக்கணும்னு யாரும் நினைக்க மாட்டாங்கப்பா'' என்றான் அவன் தாயார்.

அவனுக்குச் சற்றுக் கோபம் வந்தது.

''அம்மா, ஒரு பெண்ணோட உணர்வுகளைக் கேவலப்படுத்த என்னாலே முடியாது. தயவுசெய்து என்னை வற்புறுத்தாதீங்க.''

அச்சமயம் கிதா ஓடிவந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டு ''அண்ணா! அவங்க அழகா இருக்காங்கண்ணா... அவங்க ரொம்ப நல்லவங்கண்ணா... எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கண்ணா... சரின்னு சொல்லுண்ணா...'' என்று மேலும் மேலும் குழைந்தாள் தங்கை.

சோமசுந்தரம் அவன் தங்கையின் வற்புறுத்தலால் சம்மதம் தெரிவிப்பான் என்று எதிர்பார்த்தார்.

அவன் தன் முடிவில் உறுதியாக இருப்பதாகக் கூறி வீட்டை விட்டு வெளியே கிளம்பினான்.

பானு சினிமாத் தியேட்டருக்கு வந்து டிக்கெட் வாங்கிக் கொண்டு உள்ளே போய் நின்றான்.

தியேட்டரில் படம் கடைசி நாளாக இருந்ததால் கூட்டம் இல்லை. இங்கும் அங்குமாக ஒரிருவர் தென்பட்டனர்.

அவன் ஆடிட்டோரிய ஹாலின் வாசலில் நின்றவாறு யோசனையில் ஆழ்ந்தான்.

சிறிது நேரத்தில் அவனுக்குப் பார்த்திருந்த பெண் சுந்தரி அவளுடைய ஏழு வயதுத் தங்கையுடன் வந்தாள்.

அவன் அவளைப் பார்த்ததும் திடுக்கிட்டு அவள் சமீபமாக வருவதற்குள் நகர்ந்து விடலாம் என்று திரும்பினான்.

அதற்குள் சுந்தரியின் தங்கை அவனைப் பார்த்துவிட்டு ''மாமா வந்திருக்கார்'' என்று மழலையைச் சிந்தியவாறு அவனை நோக்கி ஓடினாள்.

தங்கையின் செயலைப் பார்த்து நிமிர்ந்த அவள் அவனைப் பார்த்து ஒரு விநாடி தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள்.

அவனுக்குத் தர்ம சங்கடமாகி விட்டது.

அவள் அவனருகில் வந்து ''சாரி சார். நீங்க வீட்டுக்கு வந்திட்டுப் போனதும் இவ இட்டே உங்களை மாமான்னு சொல்லி எல்லாரும் என்னைப் பரிகாசம் பண்ணினாங்க... அதனால அவ அப்படிக் கூப்பிடுறா...'' என்று களங்கமின்றிக் கலகலப்புடன் சொல்லிச் சிரித்தாள்.

அவளது இனிமையான சுபாவம் அவள் மீது அவனுக்கு மேலும் மதிப்பையும் நல்லெண்ணத்தையும் ஏற்படுத்தியது. அவன் என்ன பேசுவது என்று புரியாமல் விழித்தான்.

''உங்களைச் சந்திப்பேன்னு நினைக்கலே... ஆனா தெய்வமாச் சந்திக்க வச்சிருக்கு.''


அவன் மௌனமாகவே இருந்தான்.

''உங்களுக்கு நன்றி சொல்லணும்னு இருந்தேன். நீங்க என்னை வேணாம்னு சொல்லி அனுப்பினப்ப ஏன் அப்படிச் சொன்னீங்கன்னு எனக்குப் புரியலே... அப்புறம்தான் விஷயம் தெரிந்தது... நீங்க என்னை உயர்வா நினைச்சு அப்படிச் சொல்லியிருக்கீங்க...''

அவன் அதிர்ச்சியடைந்தான். வீட்டில் தான் பேசியது அவளுக்கு எப்படித் தெரிந்தது என்று யோசித்தவாறு அவளைப் பார்த்தான்.

''உங்க தங்கச்சி கீதாதான் வீட்டுக்கு வந்து எல்லாம் சொன்னா.. உங்க வீட்டிலிருந்து காலையிலே தகவல் வருது... சாயங்காலம் கீதா வர்றா... கீதா இப்ப என் தோழி. நாலு நாளிலே அவ்வளவு பழகிட்டாள்...''

அவன் சந்தேகத்துக்குப் பதில் கிடைத்தது. அவன்



தங்கையின் செயலை நினைத்து உள்ளுக்குள் சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

''அவதான் வற்புறுத்தி மீண்டும் உங்க வீட்டுக்குச் சொல்லி அனுப்பச் சொன்னா. எப்படியும் உங்களைச் சம்மதிக்க வைக்கிறேன்னு சொல்லி யிருக்கா.''

அவனுக்கு விஷயம் தெளிவாகியது.

அவளே வந்ததிலிருந்து பேசிக் கொண்டிருப்பதையும் தான் மௌனமாக இருப்பதையும் அவன் உணர்ந்தான்.

''நீ சந்தோஷமா வாழணும்.''

அவன் வாழ்த்துடன் பேசத் தொடங்கினான்.

''ம்....ம்....''

''முதல்லே உன்னைப் பார்த்தப்ப உன் அழகுக்கு ஈடா நல்ல கணவன் கிடைச்சு சந்தோஷமா நீ நினைச்ச மாதிரி வாழணும்னு எனக்குத் தோணிச்சு. இப்ப களங்கமில்லாம கலகலப்பா மறைக்காம பேசற உன் சுபாவத்தைப் பார்க்கிறப்ப... உனக்குப் படிப்பு, வேலை, பணம், அழகு இன்னும் எல்லா அந்தஸ்தும் இருக்கிற புருஷன் கிடைச்சு நீ ஒரு குறையும் இல்லாம... எப்பவும் சிரிச்ச முகத்தோட சந்தோஷமா வாழணும்னு தோணுது...''

அவனுக்குள்ளிருந்த தாழ்வு மனப்பான்மை பேசியது.

அவள் சிறிது வாய் விட்டுச் சிரித்தாள்.

''நீங்க என்னைப் பத்திப் பேசினதைக் கேட்டு சொன்னப்ப தாழ்வு மனப்பான்மையினாலேதான் நீங்க அப்படிப் பேசறீங்களோன்னு சந்தேகப்பட்டேன்....இப்ப..அது உண்மைன்னு நிரூபிக்கிற மாதிரி பேசறீங்க. ஆனா உங்களுக்கு இவ்வளவு தாழ்வு மனப்பான்மை கூடாது.''

அவள் அவனைப் புரிந்து கொண்டது அவனை உறுத்தியது.

அவளே தொடர்ந்தாள்.

''எனக்கும் ஏழைங்கறதினாலே தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டிருக்கு... அதனாலே நீங்க சொல்கிற மாதிரியான புருஷன் கிடைப்பார்னு எனக்கு நம்பிக்கை இல்லே.''

அவள் தன் நிலைமையைத் தெரிவித்தாள்.

''நல்ல கணவன் உனக்குக் கிடைக்கணும்.... நிச்சயமா கிடைப்பான், எனக்கு நம்பிக்கை இருக்கு''என்றான் அவன்.

அவள் அலட்சியமாக ''அதெல்லாம் வீண் கற்பனை'' என்று சொல்லியவாறு யோசித்தவளாக, ''நான் என்னென்னமோ கற்பனை பண்ணியிருப்பேன்னு பேசினீங்களாமே... கற்பனை எனக்கு மட்டும் சொந்தமா? நீங்க கற்பனை பண்ணலையா? ம்... ரெண்டு பேருக்கும் ஒவ்வொரு வகையிலே தாழ்வு மனப்பான்மை.. அந்தப் பலவீனத்திலே உங்களுக்கு அழகான பெண் கிடைக்கும்னு நம்பிக்கை இருந்திருக்காது...ஆனால் கற்பனை பண்ணி யிருப்பீங்க... எனக்கு அழகான மாப்பிள்ளை கிடைப்பார்னு நம்பிக்கை இல்லே. ஆனா கற்பனை பண்ணலாம்... நடப்பு வேறே... கற்பனை வேறே...'' என்று விளக்கமாகப் பேசினாள்.

அவன் மனம் தடுமாறத் தொடங்கியது.

''உங்க பலவீனம், நான் சந்தோஷமா வாழணும்னு உங்களை நினைக்க வெச்சிருக்கு. உங்க அன்பை எனக்குப் புரியவும் வச்சிருக்கு. என் பலவீனம் எனக்குக் கிடைக்கிறதே போதும்னு திருப்திப்படுகிற மனசைக் கொடுத்திருக்கு. உங்க அன்பைப் புரிஞ்சுக்கிட்டதாலே உங்களோடதான் வாழணும்னு நினைக்க வச்சிருக்கு...''

அவள் மனம் திறந்து பேசினாள்.

''நீங்க நினைச்சுப் பாருங்க... எனக்கு ஒரு வரன் வந்தா என் அழகுக்காக வரலாம். சம்பாத்தியத்துக்காக வரலாம்... ஆனா.... உங்களை மாதிரி உண்மையான அன்பும் பாசமும் காட்டறவங்க வருவாங்களா?''

அவள் குரல் தாழ்ந்தது. அவனுக்கு மனம் நெகிழ்ந்தது.

''நமக்குப் பலவீனங்களே பலமாகி ஒருத்தருக்கொருத்தரைப் புரிய வைச்சிருக்கு. அது உங்களுக்குத் தெரியலையா?''

அவள் பேசிவிட்டு அமைதியானாள்.

அவன் அவளிடமிருந்து விலக முடியவில்லை.

''ம்... நீ சொன்ன மாதிரி நம்ம பலவீனங்கள் பலமாக மட்டும் இல்லாம... நம்மை இணைக்கிற பாலமாகவும் இருக்கு... வாஸ்தவம்தான். வீட்டிலே முடிவைச் சொல்லி விடுகிறேன்.''

அவன் சொன்னதும் அதுவரை சரளமாகப் பேசிக் கொண்டிருந்தவளுக்குத் திடீரென்று வெட்கம் பிறந்தது.

''நீங்க வீட்டிலே ஏற்கனவே முடிவைச் சொல்லி யிருக்கீங்க.. இப்ப அந்த முடிவை மாத்திச் சொல்லணும்'' என்று கூறி ஒரு பார்வை வீசினாள்.

இருவரும் சிரித்தனர்.

நெருப்பணைக்கும் படையினரின் ஏணிகளில் உலகிலேயே மிக நீளமானது இதுதான்! மேற்கு ஜெர்மானியத் தயாரிப்பு.





கடல் ராணி

சாண்டில்யன்

அத்தியாயம் 31

மலை உச்சி விளக்கு

சிந்து துர்க்கத்தின் பிரதான வாயிலில் படகுகள் இணைக்கப்படும் இரும்புத் தளைகளை அடுத்து, கோட்டைக்குள் செல்வதற்காகக் கட்டப்பட்டிருந்த உயர்ந்த படிகள் நான்கில் உச்சிப் படியில் உட்கார்ந்திருந்த ஸில்வர், காஸண்ட்ராவிலிருந்து படகு இறக்கப் பட்டதையும் பார்த்தான், படகு தன்னை நோக்கி விரைந்து வந்ததையும் பார்த்தான். அதனால் பெரு மகிழ்ச்சி அவன் முகத்தில் உலாவிய தருணத்தில் அவன் அசுரக் கிளியான காப்டன் ப்ளிண்டும் படகுக்கு முன்பாகப் பறந்து வந்து அவன் தோளில் உட்கார்ந்து அவன் காதுக்கருகில் இருமுறை லேசாகக் கத்தியது. புரிந்துகொண்டதற்கு அறிகுறியாகத் தலையையும் அசைத்து ப்ளிண்டையும் தடவிக் கொடுத்த ஸில்வர் படகின் வருகையை நோக்கி உட்கார்ந்திருந்தான், உச்சிப் படியிலேயே.

கிருஷ்ணபட்சத்தின் அந்தப் பின்னணி நிலவில் சிந்து துர்க்கமும் அதன் சுற்றுப்புறமும் மிகப் பயங்கரமாகக் காட்சி யளித்தன. ஆங்காங்கு பெரிதாகக் கடலில் எழுந்த பாறைகளும், தூரத்திலிருந்த பாண்டவகட், மால்வான் கோட்டைகளும் பெரும் கடற் பிசாசுகளைப் போல் காட்சி யளித்தன. அன்று மும்முரமாகக் காற்றும் இருந்தபடியால் அலைகள் மிகப் பெரிதாக எழுந்து சிந்து துர்க்கத்தின் படிகளையும் சுவர்களையும் தாக்கிக் கொண்டிருந்ததல்லாமல், கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்த படகையும் தூக்கித் தூக்கி எறிந்து கொண்டிருந்ததால் படகு அதிக விரைவில் உந்தப்பட்டு வந்தது. அந்த அலைகளில், அவற்றின் உயரத்தில், அலை மடிந்த வேகத்தில், உந்திய திரைகளில், எந்தப் படகும் கவிழ்ந்திருக்குமானாலும் காஸண்ட்ராவிலிருந்து வந்த படகு ஒரு முறை கூடக் கவிழாமல், அலைகளில் ஏறி விழுந்தும், மிதந்தும் வந்தது அதைச் செலுத்தியவன் திறமையால். கடலில் எத்தனையோ சூறாவளிகளைப் பார்த்திருந்த டெய்லருக்கு அந்த அலைகளில் படகைச் செலுத்துவது ஒரு பெரிய காரியமாக இல்லாததால் அவன் வெகு அலட்சியமாகத் துடுப்புகளைத் துழாவினான். எங்கும் கிளம்பிய 'ஹோ'என்ற இரைச்சல் மற்றவர்கள் காதுகளுக்குப் பயங்கரமென்றாலும் டெய்லரின் காதுகளுக்கு அது இணையிலா சங்கீதமாயிருந்ததால் அவன் மிகுந்த உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் படகைச் செலுத்தி வந்தான். அப்படி வந்தவன் இணைப்புத் தளைகளிடம் வந்ததும் படகிலிருந்து லேசாகத் தரையில் குதித்துத் தளையொன்றில் படகின் முகப்புச் சங்கிலியைப் பிணைத்து விட்டு உச்சிப் படியிலிருந்த ஸில்வரை நோக்கி வந்தான். ''எதற்கு என்னை இங்கிருந்து காஸண்ட்ராவுக்கு அனுப்பினாய், திரும்ப எதற்காக அழைத்தாய்?'' என்று வினவினான் எரிச்சலுடன்.

டெய்லர் அன்று அளவுக்கு மீறிக் குடித்திருந்தாலும் அவன் சிறிதும் நிதானம் தவறவில்லை. ஆனால் நல்ல தூக்கத்தில் ஸில்வர் தன்னைக் கிளப்பிவிட்டதை அவன் ரசிக்கவில்லை என்பதை அவன் முகம் காட்டியது. ஸில்வர் படியிலிருந்து எழுந்திருக்காமலே தனது தோளிலிருந்த அரக்கக் கிளியைத் தடவினான் ஒரு முறை. ''ப்ளிண்ட் இருப்பது எத்தனை உதவி என்று உனக்குப் புரிகிறதா?'' என்று வினவினான் கிளியைத் தடவிய வண்ணம் டெய்லரை நோக்கி.

டெய்லர் அப்போது ப்ளிண்டையும் அதன் உபயோகத்தையும் ரசிக்கும் நிலையில் இல்லை. ''நான் கேட்ட கேள்வி வேறு'' என்றான் மூர்க்கத்தனமாக.

''புரிகிறது'' என்ற ஸில்வர் தன் பக்கத்தில் உட்காருமாறு சைகை காட்டினான் டெய்லருக்கு.

''இங்கு உட்கார நான் வரவில்லை. எதற்கு அழைத்தாய் சொல்'' என்று வினவினான் டெய்லர், இரண்டாம் முறை மிகக் கடுமையான குரலில்.

ஸில்வர் டெய்லரை ஏறெடுத்து நோக்கினான். அவன் இதழ்களில் இகழ்ச்சியும்

ஆங்கில டைப்ரைட்டர் கீ போர்டில் ABC வரிசைப்படியே வரிசையாக அமைந்திருக்கும் மூன்று எழுத்துக்கள் எவை என்பதை உங்களால் கூற முடியுமா? (விடை அடுத்த பக்கத்தில்)

குரூரமும் கலந்து புன்னகை விரிந்தது: "இன்றைய நிகழ்ச்சிகளைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று வினவினான் வில்வர் சர்வ சாதாரணமாக.

"என்ன நிகழ்ச்சிகள்?" டெய்லர் பொறுமையை இழக்க முற்பட்டான்.

"சிவாஜிக்கு அபிஷேகம்."

"அது மகாராஷ்டிர சடங்கு."

"பிறகு அனந்துக்கு மரியாதை."

"அது தளபதி இஷ்டம்."

"அனந்த் சிவாஜி சிலைக்கு அருகில் உள்ள அறையில் படுத்திருக்கிறான் சக்கரவர்த்தியின் வாளுடன்."

"அர்ச்சகர்காரணத்தைவிளக்கிவிட்டார்"

இதைக் கேட்ட வில்வர் சிறியெழுந்தான் படியிலிருந்து. "யூ ஆர் எ பூல். யூ ஆர் ஆல் பூல்ஸ்" என்று கூவிக் கொண்டே.

வில்வரின் சீற்றத்தைக் கண்ட டெய்லர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. "வாட் ஹாஸ் யுவர் இன்டலிஜன்ட் ப்ரெய்ன் டிஸ்கவர்ட்? (உன் புத்திசாலிமூளை என்ன கண்டு பிடித்திருக்கிறது?)" என்று வினவினான் டெய்லர் பதிலுக்கு.

"இன்று நடந்ததெல்லாம் நாடகம். (த ஹோல் அஃபேர் ஈஸ் எ ட்ராமா)" என்ற வில்வர் மடியிலிருந்த சாவியை எடுத்து டெய்லரிடம் காட்டினான்.

அந்தச் சாவியைக் கண்ட டெய்லர், "இதென்ன?" என்று வினவினான்.

"இந்திரஜித்தும் கடல் ராணியும் படுத்திருக்கும் அறையின் சாவி." என்று வில்வர் கூறியதும், பெரிதாக நகைத்தான் டெய்லர். "யூ ஹாவ் த கீ டு எ நப்ஷல் ரூம் (சாந்தி அறையின் சாவியைக் கொண்டுவந்து விட்டாய்)" என்று கூறியதன்றி "ஹோய் நாட் ஓபன் த ரூம் அண்ட் ஸீ வாட் ஈஸ் கோயிங் ஆன் (அறையைத் திறந்து நடப்பது என்னவென்று பார்ப்பதுதானே?)" என்றும் கொள்ளைக்காரர்களின் இயற்கையான வீரத்தைக் காட்டிப் பெரிதாக மீண்டும் நகைத்தான். டெய்லர் மேலும் நகைத்திருப்பான். அப்போது துப்பாக்கி வெடித்த பயங்கர சப்தம் அவனை அசரச் செய்யாதிருந்திருந்தால்.


அந்த வெடியைக் கேட்டதும் அவசரமாக எழுந்த வில்வர் தன் தடியை ஊன்றிக் கொண்டு துரிதமாக ஓடலானான் கோட்டைக்குள்ளே. டெய்லரும் அவனைத் தொடர்ந்தான். எதையும் அலட்சியமாகப் பாவிக்கும் டெய்லரின் மூளைக்கு ஏதோ தான் நிர்ணயிக்க முடியாத விபரீதம் கோட்டைக்குள் நிகழ்ந்திருக்கிறது என்பது புரிந்தது. அதனால் வேகமாக நடந்த டெய்லரும் தனது ஒற்றைக் காலாலும் தடியினாலும் அதிக வேகத்தைக் காட்டிய வில்வரும் சிவாஜி சிலைக்கு அருகில் வந்ததும் பக்கத்து அறையின் பூட்டு துப்பாக்கியால் உடைபட்டுத் தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டனர்.

துப்பாக்கிச் சத்தம் கேட்டதால் ஓடிவந்த மாலுமிகள் சிலரும், அவர்களைத் தொடர்ந்து வந்த தளபதி சங்கர்பந்த், துலாஜி ஆகியவர்களும் உடைக்கப்பட்ட பூட்டைப் பார்த்துப் பெரு வியப்படைந்தனர். "யார் செய்தது இதை?" என்று சீறினான் கடைசியாக வந்த இங்க்லண்ட்.

"அதைத்தான் நானும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்" என்றார் சங்கர்பந்த் கொதித்த குரலில்.

"ஓபன் த டோர் (கதவைத் திறவுங்கள்)" என்றான் டெய்லர்.

துலாஜி கதவண்டை சென்று உடைக்கப் பட்ட பூட்டை எடுத்துவிட்டுத் தாழ்ப்பாளை நீக்கிக் கதவை உதைத்தான் தனது வலது காலால். 'மட' ரென்று திறந்த கதவு ஒரு விசித்திரக்காட்சியைவிரித்தது



அறையில் காலைப்பிடித்துக் கொண்டு ராணி உட்கார்ந்திருந்ததையும், அவள் காலில் துப்பாக்கிரவை பாய்ந்திருந்ததால் ரத்தம் வந்து கொண்டிருந்ததையும், அதற்கு அவள் தன் சேலையைக் கிழித்து இறுகக் கட்டுப் போட்டிருந்ததையும் பார்த்த அனைவரும் பிரமித்தார்கள்.

சங்கர்பந்த் பிரமிக்கவில்லை. மிகுந்த கோபத்தின் வசப்பட்டு "நீ இங்கு எப்படி வந்தாய்?" என்று வினவினார்.

"அனந்தைத் தேடி வந்தேன்" என்றாள் ராணி தலையைக் குனிந்த வண்ணம்.

"இரவில் எதற்காக அவனைத் தேட வேண்டும்?" — தளபதியின் குரல் அக்னி ஜ்வாலையாயிருந்தது.


இந்தச் சமயத்தில் டெய்லர் தன்னையும் மீறிச் சிரித்தான். "வாட் எ ஸ்டுபிட் கொஸ்சன் (என்ன முட்டாள்தனமான கேள்வி)" என்றும் கூறினான் நகைப்பை அடுத்து.

"ஷட் அப் (மூடு வாயை)" என்று சீறிய சங்கர்பந்த். "ராணி! சொல். நடந்ததென்ன?" என்று வினவினார்.

ராணி சொன்னாள் நடந்த கதையை: "பூஜை முடிந்து நீங்கள் சென்றதும் என் அறைக்கு வெளியே யாரோ நடமாடும் சத்தம் கேட்டது. ஆகவே நான் ஜம்பி

(முன் பக்கம் விடை) J K L
— தகவல்: கே. ஆர். எம்.





துணை ஆசிரியர் : திடீரென்று எதுக்காக நிரைப் படங்களில் ஆபாசத்தைக் கண்டித்துக் கட்டுரை எழுதச் சொல்றீங்க?

ஆசிரியர் : நமக்கு நாலு ஆபாச ஸ்டில்கள் கிடைச்சிருக்கு! அதைப் பிரசுரிக்க ஒரு வழி பண்ணணுந்தான். கே. ஆர். எம்.

வெளியே வந்தேன். என் அறைப் பக்கம் வந்தவன் ஓடினான், அனந்த் இருந்த அறையை நோக்கித் துப்பாக்கியுடன். நான் தொடரு வதைக் கவனித்ததும் அவன் மறைந்து விட்டான், சிவாஜி சிலை இருக்கும் இடத் துக்குப் பின்புறத்தில். பிறகு அனந்தைக் கதவைத் தட்டி எழுப்பினேன். அனந்த் வந்து கதவைத் திறந்ததும் இருவரும் அவனைத் தேடினோம், கிடைக்கவில்லை. ஆகவே இந்த அறைக்குள் வந்து கதவைச் சாத்திக் கொண்டு கதவிடுக்கு வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தோம், எங்கிருந்தாவது வெளி யில் வருவானா என்று. அந்தச் சமயத்தில் யாரோ வந்து சட்டென்று கதவை இழுத்து வெளியே தாளிட்டுப் பூட்டினார்கள். இருவர் பாடும் திண்டாட்டமாகி விட்டது. மணிக் கணக்கில் உட்கார்ந்திருந்தோம் அறைக்குள். திடீரென்று துப்பாக்கி வெடிச் சத்தம் கேட் டது. முகத்தைக் கறுப்புத் துணியால் மூடி யிருந்தஒரு மனிதன் இருகைகளிலும் துப்பாக்கி ஏந்திக் கதவைத் திறந்து அனந்தை உடன் வரும்படி மிரட்டினான். அனந்த் தனது துப் பாக்கியை எடுக்கு முன்பு அவன் கை கடப் பட்டது. நான் சற்று காலை எடுத்து வைத் தேன். என் காலும் கடப்பட்டது. பிறகு அவன் அனந்தின் நெற்றிக்கு நேரே துப் பாக்கியைக் காட்டி அவரை அழைத்துக் கொண்டு வெளியே சென்று கதவை மூடி னான். நேரம் ஓடியது. பிறகு உங்களைத்தான் கண்டேன்.''

அவன் சொன்ன கதையை யாரும் நம்ப வில்லை என்றாலும், நம்பாமலும் இருக்க முடியவில்லை. பூட்டுக்குள் துப்பாக்கி ரவை இருந்தது. மற்றும் இரண்டு ரவைகள் அறைக்கு வெளியே கிடந்தன. துலாஜி தரையைக் கவனித்தான். தரை நெடுகிலும் ரத்தத் துளிகள் வரிசையாகத் தெரிந்தன. பந்தத்தின் உதவி கொண்டு அவற்றைத் தொடர்ந்தான் துலாஜி. வில்வரும் இங்க் லண்டும் அவனைத் தொடர்ந்தனர். பத்தடி தூரத்துக்குப் பிறகு ரத்தத் துளிகள் மாய மாய் மறைந்தன. துலாஜியின் முகத்தில் கவலை தெரிந்தது. ''வந்தவன் யாராயிருந் தாலும் மிகுந்த அறிவுள்ளவன். அனந்த் கை ரத்தத்தை மிகத் துரிதமாகக் கட்டி நிறுத்தியிருக்கிறான், நமக்குச் சுவடு தெரியா திருக்க'' என்றான் துலாஜி வில்வரை நோக்கி.

வில்வர் அதை ஆமோதிப்பதற்கு அறி குறியாகத் தலையை அசைத்தான். அவர் களுக்குப் பின்னால் வந்த சங்கர் பந்த் ''அவன் யாராயிருந்தாலும் கோட்டைக் குள்ளிருப்பவர்களில் ஒருவன்தான்'' என்று

STINGRAY



வேகமாவது வேகம்!



தொடக்கத்திலிருந்து கடைசி வரை கண்ணைத் திருப்பவிடாமல் கார் ஓடுகிறது! படம் படுவேகமாக ஓடுகிறது!

அமெரிக்காவில் 'ஸ்டிங்ரே' சமீபத்திய ஸ்போர்ட்ஸ் மாடல் கார். இந்தக் காரை இரு இளைஞர்கள் ஷோ ரூமிலிருந்து விலைக்கு வாங்கு கிறார்கள். கஞ்சா போன்ற போதைப் பொருள் களைக் கடத்திச் சென்று கள்ள வியாபாரம் செய் யும் கோஷ்டி இந்த இரு அப்பாவி இளைஞர்களை, அவர்களே அறியாமல் பயன் படுத்திக் கொள் கிறது. போதைப் பொருள்களையும், ஏராளமான பணத்தையும் காரில் ஒளித்து வைக்கிறார்கள்! இரு இளைஞர்களும் இதை அறியாமல் காரைப் படுவேகமாக ஓட்டிச் செல்கிறார்கள்! போலீஸ் வேகமாகச் செல்கிறார்கள் என்பதால் இவ்விரு இளைஞர்களைத் தடுத்து நிறுத்துகிறது! ஆனால் பின் தொடரும் கடத்தல் கோஷ்டியினரோ போலீஸ்காரர்களைக் கட்டுத் தள்ளுகின்றனர்! இப்படியே கதை வளர்ந்து கடைசியில்... கடை சியில் என்ன? சுபமான முடிவுதான். கடத்தல் காரர்கள் சப்ஜாடா குளோஸ். இடையில் முகிழ்ந்த காதல் நிறைவு பெறுகிறது. கார் ரேஸை பிரமாத மான திரில்லோடு டைரக்ட் செய்திருக்கிறார் ரிச் சர்ட் டைலர். பி. எஸ். ஶா.

கூறினார். "நாம் அவனைக் கண்டு பிடித்தாக வேண்டும்" என்றும் சொன்னார். அத்துடன் வருத்தம் தோய்ந்த குரலில் மகளைப் பார்த்து, "ராணி! இத்தனைக்கும் என் மடத்தனம்தான் காரணம்" என்றும் கூறினார்.

எல்லோரும் ராணியையும் சங்கர் பந்தையும் நோக்கினார்கள். பந்த் சொன்னார்: "என் மகள் நள்ளிரவில் அனந்த் இருந்த அறையை நோக்கிச் சென்றதைப் பார்த்தேன். நான் அவளைத் தொடர்ந்து வெளிக் கதவைத் தாளிட்டுப் பூட்டினேன். இருவரையும் மணக்கச் சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற காரணத்தால் அப்படிச் செய்து சாவியை வில்வரின் கையில் கொடுத்துப் போனேன்" என்று.

எல்லோர் கண்களும் வில்வரை நோக்கின சந்தேகத்துடன். "ஈஸ் இட் ட்ரூ? (இது உண்மையா?)" என்று வினவினான் இங்க்லண்ட்.

"ஷ்யூர்" என்றான் டெய்லர்.

எல்லோரும் டெய்லரைப் பார்த்தார்கள். "ஹீ ஷோட் மீ த கீ, (அவன் சாவியை என்னிடம் காட்டினான்) பட் த கீ, இட் ஈஸ் யூஸ்லெஸ் நௌ (ஆனால் அந்தச் சாவி இப்பொழுது உபயோகமில்லை)" என்று கூறி இடி இடி என்று நகைத்தான்.

அப்பொழுது இங்க்லண்ட் ஒரு சந்தேகம் கேட்டான் டெய்லரை நோக்கி "ஹௌ டிட் யூ கம் ஹியர் (நீ ஏன் இங்கு வந்தாய்?)" என்று.

"ஹீ ஸென்ட் ஃபார் மீ (இவன் எனக்குச் செய்தி அனுப்பினான்), அப்கோர்ஸ் பை ஹிஸ் ப்ரண்ட் (அவன் நண்பன் மூலம்)" என்று வில்வரையும் காட்டிக் கினியையும் காட்டினான் டெய்லர்.

எல்லோரும் வில்வரைச் சந்தேகத்தோடு பார்த்தார்கள். வில்வரும் அனந்தும் நண்பர்கள் என்பது அனைவரும் அறிந்த விஷயம். வில்வர் உயிரை அனந்த் காப்பாற்றினான் என்பதை வில்வரே சொல்லியிருக்கிறான். ஆகவே கொள்ளைக்காரர்கள் வில்வர் மீது சந்தேகக் கண்களை ஓட்டினார்கள். சங்கர் பந்தும், துலாஜியும் அவனை எரித்துவிடுவது போல் பார்த்தார்கள்.

வில்வர் அத்தனை பேர் பார்வையையோ கோபத்தையோ லட்சியம் செய்யவில்லை. தீவிர சிந்தனையில் இறங்கினான். பிறகு யாருக்கும் எந்தப் பதிலையும் சொல்லாமல் தனது இடுப்பிலிருந்த கைத் துப்பாக்கியைத் தட்டிக் காட்டினான். "இந்த நிகழ்ச்சி எதற்கும் நான் பொறுப்பாளி அல்ல. ஏதோ விசித்திரம் இந்தக் கோட்டையில் நடக்கிறது. ஐ வில் ஸூன் பைண்ட் அவுட் (வெகு சீக்கிரத்தில் கண்டு பிடிக்கிறேன்)" என்று கூறிய வில்வர் நடக்கத் தொடங்கினான் தான் இருந்த அறையை நோக்கி. அவனை நிறுத்த மாஜுமியொருவன் தன் பெல்டிலிருந்து கைத் துப்பாக்கியை எடுக்க முயன்றான்.

"ஹூ எவர் ட்ரைஸ் டு ஸ்டாப் மீ ஈஸ் ஏ டெட் மான் (யார் என்னைத் தடுக்க முயன்றாலும் சரி அவன் அடுத்த கணம் பிணம்)" என்று கூறி ஒரு முறை முறைத்துவிட்டு அவ்விடத்திலிருந்து வெளியேறினான் வில்வர். யாரும் அவனைத் தடுக்க முயலவில்லை.

இந்தச் சம்பவம் நடந்து ஒரு வாரம் கழித்து இந்திரஜித் அனந்த் சிந்து துர்க்கத்துக்கு வடக்கே இருந்த விஜய துர்க்கத்துக்கு அருகிலிருந்த மலை மீது ஏறிக் கொண்டிருந்தான். அப்பொழுதும் நள்ளிரவுதான். மலையில் ஒரு பகுதியை அடைந்ததும் கச்சையிலிருந்த துப்பாக்கியை எடுத்து ஆகாயத்தில் இரு முறை சுட்டான் இந்திரஜித். அதை அடுத்து மலை உச்சியிலிருந்த ஒரு குடிசைக் கதவு திறந்தது. தீபம் ஒன்று இருமுறை அவன் இருந்த திசையை நோக்கி அசைந்தது.

(தொடரும்)

பெண்களைத் துயரப்படுத்தினால்
அந்த இடம் மேன்மையடையாது.

-சுவாமி விவேகானந்தர்

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. *Place of Publication*: Madras
2. *Periodicity of publication*: Weekly
3. *Name of Printer*: V. Murali
   Nationality: Indian
   Address: 29/C, Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
4. *Name of Publisher*: V. Vaidyanathan
   Nationality: Indian
   Address: 25, D'Monte Colony
   Madras-600 018
5. *Name of Editor*: K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Purushothama Mudaliar Rd.
   Lake Area
   Nungambakkam
   Madras-600 034
6. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital*:
   Bharathan Publications Private Limited
   84/1-C, Race Course Road, Guindy,
   Madras-600 032

V. Vaidyanathan
Publisher

1-3-1980

இலக்கியங்களிலே துகில் படைப்புகள் — 4


யமுனா நதி தீரம்—இரவு நேரம்—எங்கும் பூங்கொத்து சொரியும் மலர் வனங்கள். அதில் ஒரு தனிமையான இடத்தில் ராதை கண்ணனின் வரவுக்காகக் காத்திருக்கிறாள். சீராக அணிமணிகள் பூண்டு, அழகிய ஆடைகள் புனைந்து வழிமேல் விழிவைத்து கோகுலபாலன் வரவுக்காக ஏங்கி இருக்கிறாள்—அவனை மகிழ்விக்கவே.

ஏங்கி ஏங்கித் தவம் கிடந்த பின்னர் கிருஷ்ணன் வருகிறான். ஊடல் ஏற்படுகிறது. ஊடல் அதிக காலம் இருக்காது அல்லவா? ஊடலுக்குப்பின் கூடல்—ராதையின் மணாளன் ஆகிறான் கண்ணன். ஜீவாத்மா பரமாத்மாவுடன் கலக்கிறது.

காலம் ஓடுகிறது. இருவரும் இன்ப நிலையிலிருந்து விடுபடுகின்றனர். அணிமணிகள் அலங்கியுள்ளன. பட்டுத் துகில்கள் பலவாறாய்க் கிடக்கின்றன. கிருஷ்ணன் ராதைக்கு அலங்கரிக்கும் தோழியாக மாறுகிறான். துணிகளைச் சீர் செய்கிறான். அணிகளை அலங்கரிக்கிறான். திலகத்தைச் சீர்செய்கிறான். கண்ணன் அவள் சேவகன்.


—கீத கோவிந்தம் 24வது அஷ்டபதி

நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம் காலம் காலமாக வந்த இந்தியப் பண்பாட்டைப் பின்பற்றுகிறது. நேர்மையே இந்த ஸ்தாபனத்தின் அடிப்படை. "செய்யும் தொழிலே தெய்வம்; அதில் நேர்மையே எங்கள் செல்வம்" என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு மக்களுக்குச் சேவை புரிவதையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம்.



லக்ஷ்மி மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்.

கண்ணன் என் தோழி



ADWAVE/LM/1152 TAM C



எம் பேரு ரவி!...

நான் பக்கத்துத் தெருவிலே இருக்கற எலிமெண்டரி ஸ்கூல்லெ அஞ்சாங் கிளாஸ் படிச்சக்கிட்டிருக்கேன்.

இதோ—

''...வீட்டுக் கணக்குப் போட்டுட்டு வராதவங்கல்லாம் எந்திரிங்க....''ன்னு சொல்லி எங்க வாத்தியார் கணக்குப் போட்டுட்டு வராதவங்களை யெல்லாம் கூப்பிட்டு அடிக்கிறாரு....

நானும் வீட்டுக் கணக்குப் போட்டுட்டுவரலெ.... எனக்கொண்ணும் கணக்குப் போடத் தெரியாமெ இல்லெ! ஆனா போடத் தான் முடியலே.... 'ஏன்'னு கேக்கறீங்களா? நேத்து சாயங்காலத்திலேருந்து எங்க வூட்லே அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஒரே சண் டை.. ராத்திரி யெல்லாம் ஒரே கலாட்டா! அவுங்க போட்ட சத்தத்திலேயும் சண்டையிலேயும் நானும் என்னோட தம்பி தங்கச்சியும் பயந்துபோயி மூலையிலே சுருண்டுக் கிட்டோம்! சாப்பிடக்கூட இல்லே. அப்புறம் எப்படி கணக்குப் போடறது? எப்படிப் பாடம் படிக்கிறது?....

எங்க வாத்தியார் கிட்டக் கூட நான் எதையுமே சொல்லிக்கலெ! சொன்னாலும் கேக்கவா போறாங்க?... அதனாலெ பேசாமெ அடியை வாங்கிக்கறேன். வலியைப் பொறுத்துக்கறேன்!....

நேத்து ராத்திரி மட்டும்தான் இப்படி சண்டைன்னு நெனைக்கிறீங்களா? அய்யோ.. அதைச் சொல்ல ஆரம்பிச்சா பெரிய கதைங்க!....

இளம் இதயத்தின் விசும்பல்

ஜக்கணுரை காரிதாசன்

எங்கப்பா பஞ்சாயத்து யூனியன் ஆபீஸிலே அட்டெண்டரா வேலை பாக்கறாரு! எப்படியோ சாராயம் குடிக்கப் பழகிட்டாரு! தெனம் தெனம் குடிச்சுட்டு வருவாரு! ராத்திரியிலே வீட்டுக்கு வர்ரதுக்கு எட்டு மணியோ ஒன்பதோ பத்தோ ஆகும்! அப்போ எல்லாம் யாருமே அவரு பக்கத்துலே நெருங்க முடியாது. ஏதாவது பேசினாலும் வம்பு... பேசாம இருந்தாலும் வம்பு!... அம்மா சாப்பாடு போடுவாங்க. அவரு ஒரு வாய் எடுத்துச் சாப்பிடறப்பவே....

''....ச்சீ... சனியனே! சாப்பாடா இது? மனுஷன் தின்பானா....''ன்னு கோவமா சொல்லிச் சாப்பாட்டுத் தட்டைத் தூக்கி அப்படியே வீசுவாரு! வீடெல்லாம் சாப்பாடு சிந்தி.... அம்மா பாவம்! அழுது கிட்டே அது எல்லாத்தையும் கூட்டி மெழுகிச் சுத்தம் பண்ணுவாங்க! தப்பித் தவறி அம்மா ஏதாச்சும் பேசிட்டா போச்சு! உடனே எச்சிக் கையோடயே எந்திரிச்சு வந்து அம்மாவோட தலை மயிரைப் பிடிச்சி செம்மையா அடிப்பாரு! அப்போ எல்லாம் நானும் தங்கச்சியும் இன்னொரு தம்பியும் மூலையிலே போயி சுருண்டு படுத்துக்கிட்டு, ''சாமீ! அம்மாவைக் காப்பாத்து!...அம்மாவுக்கு ஒண்ணுமே ஆகக் கூடாது''ன்னு கூடவுனே வேண்டிக்குவோம்!

ஒவ்வொரு நாள்லே அப்பா வெளியே திண்ணையிலே போய் உக்காந்துக்கிட்டு சத்தம் போடுவாரு. அம்மா மெதுவாப் போயி ''உள்ளே வாங்க! வெளியே எல்லாரும் பாக்கறாங்க...''ன்னு பயந்து பயந்து கேக்கறப்பவே அதே எடத்திலே மறுபடியும் அடி கெடைக்கும்! பாவம்.... எப்படித் தான் அந்த அடியையும் ஒதையையும் அம்மா தாங்கிக்கிறாங்களோ?... அப்படி அடியும், ஒதையும் வாங்கி வாங்கியே பாவம் ஒடம்பு ரொம்பவும் எளைச்சுப் போயி... வெறும் எலும்புக் கூடு மாதிரி ஆயிருக்கு!...

அம்மாவுக்கு மட்டும்தான் அடி விழுமுன்னு நெனைக்காதிங்க!... எங்களுக்கும் கூடத்தான் விழும்!

சம்பள நாளன்னிக்கு அப்பா கிட்டே அம்மா காசு கேட்பாங்க. வூட்டுச் செலவுக்குக் காசு வேணுமில்லே? அப்பா அஞ்சோ பத்தோ கொடுத்துச் சமாளிக்கப் பாப்பாரு! ஆனா அம்மா நல்லா வெவரமா கணக்குச் சொல்லி அவரு கொடுக்கிறதை வெச்சு ஒண்ணுமே செய்ய முடியாதுன்னு ரொம்பப் பரிதாபமாச் சொல்லுவாங்க!... அப்டவும் அவரு பணம் குடுக்க மாட்டாரு... அடிதான் கொடுப்பாரு!



ஒவ்வொரு நாள்லே அம்மா சோறு ஆக்கியிருக்க மாட்டாங்க.... நாங்கெல்லாம் பச்சைத் தண்ணியைக் குடிச்சுப்போட்டு... பேசாமப் படுத்துக்குவோம்! ஆனா அப்பா மட்டும் ராத்திரிக்கு வந்து சண்டை போடுவாரு! ''ஏண்டி சோறாக்கலே''ன்னு சத்தம் போடுவாரு. ''வூட்லே இருந்தாத்தானே ஆக்கிப் போடறதுக்கு''ன்னு அம்மா சொல்லுவாங்க!

''ஏண்டி வூட்லே எதுவுமே இல்லேன்னு ஒரேயடியாத் தரித்திரப் பாட்டுப் பாடறே'' அப்படின்னு அப்பா சீறுவாரு.

''ஆம்பளே வாங்கிப் போட்டாவல்லே... வூட்லே இருக்கும்?''ன்னு அம்மாவும் திருப்பிக் கேப்பாங்க.

பிறகென்ன? உடனே அப்பாவுக்குக் கோவம் வந்துடும்... ''ஏண்டி, என்னை அப்போ கையாலாகாதவன்னு சொல்றயாடி''ன்னு அடிக்க வருவாரு. அம்மா வாலெ என்ன செய்ய முடியும்? அடியை வாங்கிக்கிட்டு அழுவாங்க!

''துப்புக்கெட்டவனை என் தலையிலே கட்டி வச்சுட்டானுங்க! எல்லாமே என் தலைவிதி!...அவனவன் பொண்ணையும் கொடுத்து என்னென்னத்தை யெல்லாமோ கொடுக்கறான். இந்தத் தரித்திரத்தை எனக்குக் கட்டி வச்சாங்களே பாவிங்க!'' — இப்படி அப்பா என்னென்னமோ சொல்லுவாரு!

''அவுங்க கொடுத்துக் கொடுத்துத்தான் குடி முழுகிப் போனுங்களே... இன்னும் எதைக் கொடுப்பாங்க?''ன்னு அம்மாவும் சொல்ல மறுபடியும்.....

இன்னும் ஒவ்வொரு நாள்னே என்னென்னவோ பேசிச் சண்டை போட்டுக்குவாங்க! அவுங்க என்ன பேசிக்கிறாங்கன்னு கூட எங்களுக்குப் புரியாது.

புதுசா புஸ்தகமோ, நோட்டோ வாங்கித் தரணுமுன்னு அப்பா கிட்டே கேட்டா, அவருக்குப் பொல்லாத கோபம் வந்துடும்! ''நீ கெட்ட கேட்டுக்குப் புதுசா புஸ்தகம் வேணுமிங்குதாக்கும்? பேசாமெ எங்கேயாவது ஒரு டீக் கடையிலே சேந்து பிளேட் கழுவு! அஞ்சோ பத்தோ சம்பளமாவது வரும்!''ன்னு சொல்லி வெரட்டுவாரு! அந்த மாதிரிச் சமயங்களிலே அம்மாதான் எப்படியோ சமாளிச்சு நோட்டோ புஸ்தகமோ வாங்கிக்கொடுப்பாங்க!

இன்னொரு நாள் என்ன நடந்திச்சு தெரியுமா?...

அப்பா குடிச்சுட்டுத் தெருவிலே யார் கூடவோ சண்டை போட்டு... அவுங்க பலமா அடிச்சிட்டிருக்காங்க! மண்டையிலே ரத்தம் ரத்தமா ஒழுகினமேனிக்கு மயங்கி விழுந்த அப்பாவைத் தூக்கிக்கிட்டு வந்து வூட்லே போட்டாங்க! அம்மா அதைப் பார்த்துத் தலையிலே தலையிலே அடிச்சுக்கிட்டுப் பொலம்பினாங்க! நாங்கல்லாம் சேர்ந்து ஒரேயடியா அழ ஆரம்பிச்சுட்டோம். அப்பாவுக்கு ஆபத்துன்னு அழுகை வராதா பின்னே? அப்புறமா அம்மாதான் அப்பாவை ஆஸ்பத்திரியிலே சேர்க்க வச்சாங்க! ரெண்டு மூணு வாரம் அப்பா ஆஸ்பத்திரியிலே இருந்தாரு. அந்த ரெண்டு மூணு வாரமும் அம்மா எவ்வளவு கஷ்டப்பட்டாங்க தெரியுமா? யார் யார் கிட்டேயோ போயி



நடிகை: "என் முதல் படம் ரிலீஸானதைத் தொடர்ந்து தயாரிப்பாளர்கள் கியூ வரிசையில் நிற்கிறாங்க!"

தோழி: "நங்கள் படத்துக்கு ஒப்பந்தம் செய்யவா?"

நடிகை: ஊஹூம்! ஏற்கனவே செய்த ஒப்பந்தத்தை கேன்சல் செய்து கொடுத்த அட்வான்ஸைத் திரும்ப வாங்க!" — உ. ராஜாஜி

கெஞ்சிப் பணம் வாங்கி ஆஸ்பத்திரியிலே இருக்கிற அப்பாவுக்கு என்னென்னமோ எல்லாம் ஆக்கிக் கொண்டு போயிக் கொடுத்தாங்க! ஆனா... இதெல்லாம் அப்பா கொஞ்சம் கூட நெனைச்சுப் பார்க்க மாட்டாரா? அவருக்கு நெஞ்சிலே கொஞ்சம் கூட இரக்கமே இல்லையோன்னு தோணுது.

ஆஸ்பத்திரியிலே இருந்து வந்ததுக்கப்புறம் ஒரு எட்டு நாளு அப்பா குடிக்காமெ இருந்தாரு. அப்பொதெல்லாம் ஏதோ கொஞ்சம் நல்லாத்தான் இருந்தாரு! அதைப் பார்த்து நாங்கல்லாம் எவ்வளவு சந்தோஷப் பட்டோமுன்னு தெரியுமா? ஆனா... அதுக்குப் பின்னாலே மறுபடியும் குடிக்க ஆரம்பிச்சுட்டாரு! பழையபடிக்கு ஊட்லேயும் ரகளை ஆரம்பிச்சிருச்சி!

கடைசியா நேத்திக்கு ராத்திரி சண்டை என்னான்னா நாங்க இப்ப இருக்கிற ஊட்டே எங்கப்பா யாருக்கோ வித்துப் போட்டாராம். அதுக்காகத்தான் அம்மா சண்டை போட்டாங்க! இன்னும் ரெண்டு வாரம்தான் நாங்க இந்த ஊட்லே இருக்க முடியுமாம்! அதுக்கு அப்புறம் எங்கே போவமோ... எந்தத் தெருவுலே படுக்கணுமோ தெரியாது! இதையெல்லாம் நெனைச்சுப் பார்த்துத்தான் என் மனசே சரியில்லே... வீட்டுக் கணக்குப் போட முடியலெ!....

எனக்கு இதெல்லாத்தையும் பார்த்துப் பார்த்து ரொம்ப வெறுத்துப் போச்சு! பள்ளிக்கூடம் போகக் கூட மனசே வரலே. ஆனா அம்மாதான் ஒரே பிடிவாதம் பண்ணி எங்களைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வச்சாங்க!

பொறுக்க முடியாமெ அம்மா கிட்டே கேட்டேன்: "ஏம்மா! மத்தவங்க ஊட்லெ எல்லாம் நல்லா இருக்காங்களே! நம்ம ஊட்லே மட்டும் ஏம்மா இப்படி?"ன்னு? அதுக்கு அம்மா சொன்னாங்க: "கடவுள் நல்லவங்களை சோதனை பண்ணுறாரு டா ரவி!"ன்னு சொன்னாங்க. எனக்கென்னமோ கடவுள் சோதனை பண்ற மாதிரி தெரியல்லே. எங்க அப்பாதான் சோதனை பண்றாரோன்னு தோணுது... ஆமா! எங்கப்பா சாராயம் குடிக்கிறதை நிறுத்திட்டார்னா... எங்க ஊட்லெ எல்லாருமே நல்லா இருக்கலாம் போல எனக்குப் படுது!

இதைப் போயி யாரு அவருகிட்டே சொல்லி அவரு சாராயம் குடிக்கிறதெ தடுத்து நிறுத்துவாங்க?...

கடவுளே! எப்போத்தான் அவரோட மனசு திருந்துமோ?

நாங்கல்லாம் எப்போத்தான் நிம்மதியா இருப்போமோ?...

எல்லாத்தையும் விட.... அழுது கிட்டே இருக்கிற எங்க 'அம்மா'வோட கண்ணீர் எப்போத்தான் நீங்குமோ?....

ரயிலுக்கு ஆபத்து!



THE BULLET TRAIN

உலகிலேயே வேகமாகச் செல்கிற ரயில் ஹிகாரி-109. மணிக்கு 210 கிலோ மீட்டர் வேகத்தில், 1500 பயணிகளுடன் ஓடுகிறது ரயில். அப்போது அதனுள் ஒரு வெடி குண்டு இருப்பதாகச் செய்தி வருகிறது! குண்டு வெடிக்காமலிருக்க வேண்டுமெனில் ஐந்து மில்லியன் டாலரை சதித் திட்டத்தை உருவாக்கியவன் கேட்கிறான். தான் 'ரீல்' விடவில்லை என்று நிரூபிப்பதற்காக ஒரு [illegible] வண்டியில் தான் வைத்த குண்டை வெடிக்கச் செய்து அச்சுறுத்துகிறான். நினைத்துக் கூடப் பார்க்க முடியாத சாமர்த்தியங்களைக் கையாண்டு இறுதியில் ரயிலை எப்படிக் காப்பாற்றுகிறார்கள் என்பதுதான் படத்தின் உச்ச கட்டம். சுறுசுறுப்புடன் போலீஸ் செயல் படும் விதம், இரண்டு ரயில்கள் ஒரே நேரத்தில் எதிரும் புதிருமாக வாயு வேகத்தில் ஒரே டிராக்கில் வந்து கடைசி விநாடியில் டிராக் மாறித் தப்பும் அற்புதக் காட்சி இரண்டுமே படத்தின் விறுவிறுப்பை அதிகரிக்கிறது. — டி. எம். ஆர்.

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து



Dr. S. காளிமுத்து

இன்றைய முன்னணி பிரபல பழனி வைத்திய திலகம், வைத்தியராஜ் டாக்டர் எஸ். காளிமுத்து R. M. P. (IND) V. V. C. A. M. I. H. அவர்களின் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப் பயணத்தில் எல்லா வியாதிகளுக்கும் அன்பர்கள் நேரில் சந்தித்து ஆலோசனைகளும் மருந்துகளும் பெற்று சுகவாழ்வு வாழ அழைக்கின்றோம். வணக்கம்.

தங்களின் உடல் மிகவும் பலமில்லாமல் இளைத்து, உடல் வலுவில்லாமல் குடும்ப வாழ்க்கையில் நிம்மதியில்லாமல் வயோதிகரைப் போல் களைப்பு மேலிட்டு, வேலைகளைச் சரவர செய்ய இயலாமை — இதனால் கஷ்டப்படுகிறீர்களா? வாலிப வயதில் தெரிந்தும், தெரியாமலும் செய்கிற தவறுதல்களே இப்போது உடல் கெட்டு பலஹீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலஹீனம், உடல்வலி, களைப்பு, தூக்கக் குறைவு, ஆயாசம், பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி, தாம் தந்தையாரிடமும் மற்றவர்களிடமும் சொல்ல முடியாமல் மனவேதனையும் கஷ்டமும் அடைந்து, நிம்மதியில்லாமல் வாழ்கிறார்கள். மேற்படி காரணங்களால் உடல் நலம் பாதிக்கப்பட்டவர்களும், கவலைப்பட வேண்டாம். இம்மாதிரியான வியாதிஸ்தர்கள் 81 வருட அனுபவம் பெற்ற நமது சாஸ்திரிய முறையான மிக உயர்தரம் சாப்பிட்டாலே, எடை அதிகப்பட்டு, இரத்த விருத்தியுடன் உடல் பலமடைந்து புதிய சக்தி, புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். எவ்விதமான பத்தியமும் இல்லை. ஆர்டரில் தேவைப்பட்ட மருந்தின் விலைகளைக் குறிப்பிட்டு எழுதவும். வி. பி. பி. தபால் பார்சலில் பெற இன்றே எழுதுங்கள். சென்னையிலும், பழனியிலும், கேம்புகளிலும் நேரில் பெறலாம். மருந்தும் விருந்தும் மூன்று நாள் என்பது பழமொழி. மருந்து உபயோகிக்கும்பொழுதே பலனைக் காணலாம். வி. பி. பி. தபால் செலவு இலவசம். வெறும் கடிதம் கவனிக்க இயலாது. சித்த வைத்திய மருந்துகளும், பழனி மருந்துகளும் நல்ல பலன் தரும் என்பதை அறியவும்.

—————— :ஒரு மாத சிகிச்சை மருந்துகள்: ——————

ஸ்பெஷல் லேகியம், ஸ்பெஷல் பஸ்பம் ரூ. 90,
தங்கபஸ்பம், சிட்டுக்குருவி லேகியம்

90 வேளை ரூ. 180. 60 வேளை ரூ. 120. 30 வேளை ரூ. 60.

எங்கள் மாபெரும் வெற்றிகரமான மாதாந்திர சுற்றுப்பயண தேதி விலாசங்கள் கவனிக்கவும்

1-ந் தேதி திருநெல்வேலி நெல்லை லாட்ஜ், ஜங்ஷன் ரோடு. போன்: 147. காலை 8 மணி முதல் 12 மணி வரை
1-ந் தேதி நாகர்கோவில் பகல் 2 மணி முதல் 4 மணி வரை. ஸ்ரீ உடுப்பி கிருஷ்ண பவன், தபாலாபீஸ் சந்திப்பு
2-ந் தேதி மதுரை மணீஸ் கபே, டவுன் ஹால் ரோடு. போன்: 2019. காலை 8 மணி முதல் மாலை 2 மணிவரை
2-ந் தேதி புதுக்கோட்டை, மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை. சாந்தி லாட்ஜ். (வசந்தா லாட்ஜ்) போன்: 46
3-ந் தேதி காரைக்குடி காலை 9 மணி முதல் 11 மணி வரை. AVM. PL ரெஸ்ட் ஹவுஸ். போன்: 309
3-ந் தேதி பட்டுக்கோட்டை. பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை. வசந்த பவனம். மணிக்கூண்டு சமீபம்
3-ந் தேதி மன்னார்குடி. மாலை 4-30 மணி முதல் 6 மணி வரை. மன்னை லாட்ஜ், ஸ்டேட் பாங்க் அருகில்
4-ந் தேதி திருச்சி ஹோட்டல் அஜந்தா, ஜங்ஷன் ரோடு, காலை 8 மணி முதல் மாலை 2 மணி வரை. போன்: 4501
4-ந் தேதி கரூர். மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை. பெரியார் லாட்ஜ், ஜவஹர் பஜார்
5-ந் தேதி தஞ்சாவூர். காலை 8 மணி முதல் 12 மணி வரை. ராஜா ரெஸ்ட் ஹவுஸ். போன்: 57
5-ந் தேதி திருவாரூர். மாலை 2 மணி முதல் 4 மணி வரை. அபூபக்கர் பில்டிங் (EMR) நாகை ரோடு, விஜயபுரம்
5-ந் தேதி நாகப்பட்டினம். இளைய விலாஸ், ரயில்வே ஸ்டேஷன் எதிரில் மாலை 5 மணி முதல் 6 மணி வரை
6-ந் தேதி காரைக்கால். அசோக் லாட்ஜ், பஸ் ஸ்டாண்ட் எதிரில் காலை 8 மணி முதல் 10 மணி வரை
6-ந் தேதி கும்பகோணம். காலை 12 மணி முதல் பகல் 2 மணி வரை. தாஜ்மஹால் லாட்ஜ், பொற்றாமரைக்குளம்
6-ந் தேதி மாயவரம். மாலை 3 மணி முதல் 4-30 மணி வரை. காளியாகுடி லாட்ஜ். பெரியகடை வீதி, போன்: 460
6-ந் தேதி சிதம்பரம். மாலை 5-30 மணி முதல் 7 மணி வரை. ஜெயராம் லாட்ஜ்.
7-ந் தேதி பாண்டிச்சேரி. காலை 8 மணி முதல் 9-30 மணிவரை. அருணா லாட்ஜ், ஜவஹர்லால் வீதி, போன்: 352
7-ந் தேதி கடலூர். NT காலை 10-30 மணி முதல் 12 மணி வரை. ஹோட்டல் பிருந்தாவனம்
10-ந் தேதி சென்னை, நியூ உட்லண்ட்ஸ். எட்வர்ட் எலியட்ஸ் ரோடு. காலை 9 முதல் 12, மாலை 3 முதல் 6 மணி வரை
12-ந் தேதி பெங்களூர் சிட்டி. ஹோட்டல் பிராட்வே. காலை 8 மணி முதல் பகல் 2 மணி வரை. கெம்பா கவுடா ரோடு
13-ந் தேதி சேலம். பகல் 2 முதல் 5 வரை. லக்ஷ்மி ராஜ்பவன் லாட்ஜில், டவுன் ரயில்வே ஸ்டேஷன் எதிர். போன்: 2301
17-ந் தேதி சென்னை, நியூ உட்லண்ட்ஸ், எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, காலை 9 முதல் 6 மணிவரை. போன்: 83111
18-ந் தேதி சென்னை நியூ உட்லண்ட்ஸ், எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, காலை 9 முதல் 12 மணிவரை. போன்: 83111
19-ந் தேதி பம்பாய். காலை 9 முதல் மாலை 6 வரை. பிரகாஷ் லாட்ஜ், ரயில்வே சமீபம், செம்பூர். போன்: 521049
20-ந் தேதி பம்பாய். காலை 9 முதல் 10 மணிவரை. பிரகாஷ் லாட்ஜ், ரயில்வே சமீபம், செம்பூர். போன்: 521049

இளைகரமாநகர் விற்பனை நிலையம்: 10/23, பாண்டி பஜார், (ராஜகுமாரி தியேட்டர் அருகில்) சென்னை-600017. போன்: 444076, 21448.

GOVT. REGD. T. M. No. 204811. REGD. 15443. MFG. LIC. No. 5

போன்: 316, 316A, **பழனி சித்தர் வைத்தியசாலை, பழனி S. I.** தந்தி: சித்தர்.

பழைய தாராபுரம் ரோடு. (இந்தியாவின் மாபெரும் வைத்திய ஸ்தாபனம்)



சாரதா'ஸை அணிவோம்!
சகல செளபாக்கியத்தையும் அடைவோம்!
சாரதா'ஸின் பட்டுப் புடவையை
அணிந்தாலே செளபாக்யம்
வாழ்க்கையின் முதல்படி ஏறிவிட்ட
மகிழ்ச்சி தான். பிறகு மற்ற
பாக்யங்கள் அடைய
கேட்பானேன்?
சகல சந்தோஷத்தையும்
அடைய சாரதா'ஸின்
காஞ்சிபுரம் திருமண
பட்டுப் புடவைகள்
சிறந்தவை.
திருமணத்திற்கு ஏற்ற
மஞ்சள் புடவைகள்
புதிய டிசைன்களிலும்
வண்ணங்களிலும்
வந்துள்ளன.
சாரதா'ஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
சாரதா'ஸ் சென்னையிலும் திருச்சியிலும் மட்டுமே.
வேறு எங்கும் கிளைகள் கிடையாது.
SARATHA'S
MADRAS & TRICHY

-ராஜாஜி
வாழ்க்கை வரலாறு
ராஜ்மோகன் காந்தி-

"நீங்கள் எங்களுக்குப் பெரும் அநீதி இழைத்து விட்டீர்கள். நம் அனைவருக்குமே பலவீனமான உடல்தான் இருக்கிறது. அதற்காக யாருமே மற்றவர்களை அந்தரத்தில் விட்டு விட்டுப் போக உரிமை பெற்றுவிட முடியாது. நாட்டில் உள்ள இளைஞர்கள் பலரையும் தங்களுடைய அனைத்தையும் தியாகம் பண்ணுமாறு செய்த பின்னர் தனிமையை நாடிப் போக நமக்கேது உரிமை? என்னால் உங்களைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நீங்கள் பிடிவாதக்காரர் என்று எனக்குத் தெரியும்.

''ஜஸ்டிஸ் கட்சிக்கு சரித்திரத்தில் இடம் பெற வேண்டிய தோல்விகளை அளித்த பிறகு ஓய்வு பெறுவது பற்றி உங்களால் எப்படி நினைக்க முடிகிறது'' என்று பட்டேல் கேட்டார். ஜபல்பூரில் ஸி. ஆர். தம் பங்கைச் செய்தார். மத்திய சட்ட சபையில் இருந்த காங்கிரஸ் அங்கத்தினர்களின் முயற்சிகளைப் பாராட்டுகிற ஒரு தீர்மானத்தைப் பிரேரேபித்தார். சோஷலிஸக் கோஷ்டி இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் தீர்மானம் நிறைவேறியது. மத்திய சட்ட சபையில் இருந்த காங்கிரஸ்காரர்கள் அரசியலைப் புரட்சிகரமானதாக்கத் தவறி விட்டார்கள் என்று அறிக்கை விட வேண்டும் என்று சோஷலிஸ்டுகள் விரும்பினார்கள். ''உங்களுக்குத் தேவை புரட்சி என்றால் அது கிடைக்கும் இடம் சட்ட சபை அல்ல. தவறான கடைக்குப் போய்க் கேட்கிறீர்கள்'' என்று ஸி. ஆர். பதிலளித்தார்.

மகாத்மாவுடன் பேச வார்தாவுக்கு வந்த போது ஸி. ஆர். சோர்ந்து மெலிந்து காணப்பட்டதாகப் பத்திரிகைகள் குறிப்பிட்டன. பட்டேலும் பிரசாத்தும் பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டனர். ஒரு கால கட்ட ஓய்வுக்குப் பின்னர் ஸி. ஆரின் உதவி மறுபடி தேவைப்படும்போதெல்லாம் கிடைக்கும் என்று திருப்தி செய்து கொண்ட பிறகு காந்தி தமது நண்பரின் கோரிக்கைக்கு விட்டுக் கொடுத்தார்.

ஸி. ஆருக்கு என்ன ஆயிற்று? காந்தி தம்மையன்றி பிரசாத்தைக் காங்கிரஸ் தலைவராகுமாறு கோரியபோது அவர் ஒருவேளை மனத்தாங்கலுற்றாரா? கே. எம். முன்ஷி, மகாத்மாவுக்கு எழுதிய கடிதத்தில் இந்த ரீதியில் ஹேஷ்யமாகக் குறிப்பிட்டார் போலும். மகாத்மா நேரிடையாக ஸி. ஆரைக் கேட்டுவிட்ட பிறகு முன்ஷிக்கு எழுதினார்:


''நீங்கள் சந்தேகப்படுகிற மாதிரியான காரணம் எதுவுமில்லை என்று ஸி. ஆர். எனக்கு உறுதியளித்திருக்கிறார். அவரை நம்பாதிருக்க எங்களுக்குக் காரணம் ஏதும் புலப்படவில்லை. அவர் மனத்தாங்கலுற்றிருந்தால் அதை என்னிடமிருந்து மறைக்க மாட்டார்.''

ஸி. ஆர். அனுபவித்து வந்த உணர்வுகள் பற்றிய அவருடைய வர்ணனையே நமக்கு அவர் அந்தக் காலகட்டத்தில் எழுதிய சில கடிதங்களிலிருந்து கிடைக்கிறது. ''விடாமல் நீடித்த ஆழ்ந்த ஏமாற்ற மனநிலை'' என்று பட்டேலுக்கு அவர் சொன்னார். ''ஆன்மாவும் உடலும் சோர்வடைந்துள்ளன; ஒரேயடியாக இல்லாவிட்டாலும் நீண்ட காலத்துக்கு விடுவிக்கப்பட வேண்டும் என்ற விருப்பம் ஆட்கொண்டிருக்கிறது'' என்று அவர் பிரசாத்துக்குச் சொன்னார். இங்கிலாந்தில் விருந்த இந்தியாவின் நண்பர் அகதா ஹாரிஸனுக்கு, ''விடுமுறை அனுபவிக்க வேண்டும் என்று தவிர்க்க முடியாதபடி மனத்தில் எழுந்த ஆசையை''க் குறிப்பிட்டு ஸி. ஆர். எழுதினார்.

''ஒரு பள்ளிச் சிறுவன் நீண்ட கால விடுமுறையை எவ்வளவு ஆசையோடு எதிர்பார்ப்பானோ அது போல நானும் அமைதியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன்'' என்று ஸி. ஆர். தாம் விடுவிக்கப்பட்டதும் தேவதாஸுக்கு எழுதினார். ''வல்லபாயின் ஒப்புதலைப் பெற காந்தி இன்னமும் முயன்று கொண்டிருக்கிறார்'' என்றும் குறிப்பிட்டார்.

தமது பதவிகள் எல்லாவற்றையும் ஸி. ஆர். சில காலத்துக்குத் துறந்துவிட அவரது சகாக்கள் அனுமதித்தார்கள். ஆனால் பட்டேல் நாடாளு மன்றக் குழுவில் அவரைச் சேர்த்துக் கொள்ள அவரது ஒப்புதலை வற்புறுத்திப் பெற்றார். ஸி. ஆர். உடல்நலனையும் உற்சாகத்தையும் திரும்பப் பெறுகிற நாள்வரை அவர் அக்குழுவின் ஆலோசனைக் கூட்டங்களுக்கு வரவேண்டியதில்லை என்ற உறுதிமொழியை அளித்த பின்னர்தான் பட்டேல் ஸி. ஆரின் ஒப்புதலைப் பெற முடிந்தது. இந்தக் குழுவுக்கு ஸி. ஆர். தலைமை தாங்கவே வேண்டும் என்பது பட்டேல், மகாத்மா ஆகியோரின் விருப்பமாக இருந்தது. ஆனால் அது சாத்தியமில்லாது போய்

✠ ஜவாஹர்லால், கமலா நேரு, இந்திரா



விடவே, டாக்டர் அன்சாரி உடல்நலக் குறைவினால் ராஜிநாமா செய்துவிட, அந்தத் தலைமைப் பொறுப்புச் சுமை பட்டேலையே சென்றடைந்தது.

இதற்கிடையில் அகதா ஹாரிஸன் இந்திய —பிரிட்டிஷ் நல்லுறவை அபிவிருத்தி செய்ய வி. ஆரை பிரிட்டனுக்கு அனுப்பி வைக்குமாறு காந்தியை வற்புறுத்தி வந்தார். இந்தப் பயணத்தால் நற்பயன் ஏதும் விளையும் என்ற நம்பிக்கை பிறக்காத போதிலும் வி. ஆர். தமது ஆரோக்கியத்தைக் கருதியேனும் சென்று வரலாம் என்று மகாத்மா உற்சாகப் படுத்தினார்.

வி. ஆர். மறுதளித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் விஜயம் செய்தால் புதிய அரசியல் சட்டத்துக்கு இந்தியா தெரிவித்து வரும் எதிர்ப்பின் முனை மழுங்கி விடும் என்று அவர் நம்பினார். மேலும் லண்டனின் போக்கு இந்தியாவில் கசப்புணர்வை உருவாக்கியிருந்தது. 'அரசியல் விழிப்புணர்வு பெற்றுவிட்ட இந்தியர்களுக்கு ஆங்கிலேயர் மீது வெறுப்புக் கிடையாது; அன்பு பெருக்கெடுக்கா விட்டாலும் நல்லெண்ணமே நிலவுகிறது' என்று அவரால் பிரிட்டனில் இன்றைக்கு மனப்பூர்வமாகச் சொல்ல முடியாது.

'காங்கிரஸ் நடத்தும் விடுதலைப் போரின் தளபதி' என்று வி. ஆரை வர்ணித்த தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி, அவர் தலைவர் பதவியை ராஜிநாமா செய்ததை மே 11ந் தேதி ஏற்றது. 'தேசியத் தலைவர்களுள் காந்திஜிக்கு அடுத்தபடியாக மக்களின் மதிப்பில் உயர்ந்துள்ள ஒருவர்' விலகிக் கொள்கிறாரே என்பதால் வருந்தி ஹிந்து தலையங்கம் எழுதியது.

ஒரு வழியாகச் சுதந்திரப் பறவையாகி விட்ட வி. ஆர்., ஹிந்து பத்திரிகையில் பணியாற்றி வந்த தமது மகன் கிருஷ்ணசாமியிடம் போய் ஓய்வாக இருந்து தமது பலத்தைத் திரும்பப் பெற முயன்றார். அல்லது தமது ஆசிரமத்தில் தங்கி தேனீ பராமரிப்பில் ஈடுபட்டார். அவரது விடுமுறையின் ஒரு பகுதி கீதைக்கு உரை எழுதுவதில் செலவழிந்தது. இதனைச் செய்யுமாறு ஏ.ஏ. பால் அவருக்கு யோசனை கூறியிருந்தார். இவர் சர்வ தேச நட்புறவுகள் கழகத்தின் காரியதரிசி.

சுமார் மூன்று மாதங்கள் சென்றதும் வி. ஆர். தில்லிக்குப் பயணப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. லக்ஷ்மி பிரசவித்திருந்தாள். தேவதாஸ் டைபாய்டு தாக்குதலிலிருந்து அப்போதுதான் மீண்டிருந்தார். லக்ஷ்மியும் அவளது இரு குழந்தைகளும் உடன் வர — இரண்டாவது குழந்தைக்கு ஒரு மாதம்தான் ஆகியிருந்தது — திரும்பி வரும் வழியில் வி. ஆர். வார்தாவில் தங்கினார்.

இதற்கிடையில் பட்டேல் ஒரு திட்டத்தை யோசித்திருந்தார். அதன்படி வி. ஆர். பிரசாத்துக்கு அடுத்தபடியாகக் காங்கிரஸ் தலைவராக வேண்டும். மகாத்மா இத்திட்டத்தை வி. ஆர். முன் வைத்தார். வி. ஆர். அதனை சாத்தியமில்லை என்று ஒதுக்கி விட்டார். 'உடலாலும் உள்ளத்தாலும் இன்னமும் ரொம்பக் களைப்புற்றிருந்த வி. ஆர். இப்போது கிரீடத்தை ஏற்பதற்கு உரிய நிலையில் இல்லை' என்பதை காந்தியும் ஒப்புக் கொண்டார்.

வி. ஆரின் ஒப்புதலோடு மகாத்மா தலைமைப் பதவியை ஜவாஹர்லாலுக்கு வழங்கினார். சமீபத்தில்தான் விடுதலையாகியிருந்த ஜவாஹர்லால் ஐரோப்பாவில் இருந்தார். அங்கு அவர் மனைவி கமலா நோய்வாய்ப் பட்டுப் படுத்திருந்தார். செப்டம்பர் 30ம் தேதிக்கு முன்பாகக் காந்திக்குப் பதில் கிடைத்து விட்டது. 'ஜவாஹர்லால் சம்மதிக்கிறார்' என்று அவர் வி. ஆருக்கு எழுதினார்.


சோர்வுற்று உடல்நிலையும் குன்றியிருந்த நிலையில் மகாத்மாவின் உற்சாகமூட்டும் கடிதங்களும், அவற்றின் நம்பிக்கை அளிக்கும் வாசகங்களும் வி. ஆருக்கு உதவியாக இருந்தன என்பதில் சந்தேகமில்லை:

''சைத்தானையே சந்திக்க நேர்ந்தாலும் உங்களைக் கைவிடாத நகைச்சுவை உணர்வு இப்போதைய நெருக்கடியிலிருந்து உங்களை மீட்டு அழைத்து வரும் என்றுஎனக்குத் தெரியும். எனக்கு ஒரு உறுதி மொழியை மட்டும் அளியுங்கள். அதாவது உங்களுக்கு உதவி ஏதும் தேவைப்பட்டால் எனக்குத் தந்தி கொடுப்பதாக.

''நீங்களே உங்கள் கைப்பட எழுதிய தபால் கார்டு கிடைத்து நிம்மதியாய் இருக்கிறது.''

அக்டோபர் இரண்டாம் வாரத்தில் வி. ஆர். அரசியல் பிரச்னைகளில் தம்மை மறுபடி ஈடுபடுத்திக் கொள்ளும் அளவுக்குத் தெம்பு பெற்றிருந்தார். காந்திக்கு அவர் ஒரு முக்கியமான கடிதம் எழுதினார். (தொடரும்)

தமிழாக்கம்: வி. ராஜேந்திரன்



ஆஸ்ப்ரோ இருமடங்கு விரைவாக வலியிலிருந்து நிவாரணமளிக்கிறது. ஆம் இருமடங்கு விரைவாக!



மைக்ரோ:ஃபைன்ட் ஆஸ்ப்ரோ, தலைவலி, உடல்வலி, பல்வலி, ஜலதோஷம் மற்றும் ஃப்ளுவிலிருந்து நிவாரணமளிக்கிறது.

பெரியவர்களுக்கு 2 மாத்திரைகள்



மைக்ரோ:ஃபைன்ட்
ஆஸ்ப்ரோ
Nicholas

காரணம் ஆஸ்ப்ரோ ஒன்றுதான் மைக்ரோ:ஃபைன்ட் செய்யப்பட்டது.

Sista's-NIA-506A/77 Tam

அழகிய குளியலறைக்கு முற்றிலும் தேவை

நெய்சரின் தனித்தன்மை வாய்ந்த டிசைன்கள், வண்ணங்கள் – அதனுடன் சேரட்டும் உங்கள் கற்பனை வளம்



இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நெய்சரின் நம்பகமான கண்கவர் சாதனங்களை அழகிய வீடுகளில் காணலாம்.

குளியலறைகளில் உங்கள் கற்பனைத் திறனின் முத்திரையும் இருக்கட்டும் —

அழகிய அமைப்புகள், புதுமையான விளக்கொளி இவைகள் பின்னணியில், வண்ண வண்ண மலர்களில் நெய்சர்.




Neycer

நெய்சர் —
அழகிற்கு அழகு செய்யும்.
நீடித்து நிற்கும்.

OBM 5036.TM

தகடுகள் டிஸ்க்ராலாக இருந்தால் உங்களால் சேதம் பண்ண முடியாது



பெரும் வாரியான முக்கிய தொழில் சாலைகளுக்கான இரும்பு, நிலக்கரி மற்றும் பிரத்யேக தாதுப் பொருள்களை பெருமளவு கையாளுவதற்கு டிஸ்க்ரால் தகடுகள் மிகவும் உகந்ததாக இருக்கின்றன. டிஸ்க்ரால் தகடுகளின் பயனை எளிக்கனவாய்—கூடைகள், தடுப்புத் தகடுகள், மதகுக்கதவுகள், வேகமாக அசைகின்ற தகடுகள், தானிய இயந்திரங்களில் உபயோகிக்கும் பிரத்யேக தகடுகள், சுத்தியல் மில்கள் போன்ற இடங்களில் நன்கு காணலாம் .... முரட்டுத்தனமான உபயோகிக்கும் இடங்களிலும், தேய்வின் பயங்கரம் அதிகமாக உள்ள இடங்களிலும் டிஸ்க்ரால் மிகவும் பயன் படுகிறது.

பிரத்யேக தேய்வுத்தடுப்பின் திறத்தினாலும், புத்திசாலித்தனமான உலோகக்கலவையால் செய்யப்பட்டதாலும், டிஸ்க்ரால் தகடுகள், கீறல்களாலும், [illegible], அல்லது வெட்டுதலாலும் ஏற்படுகின்ற சேதத்தைத் தடுக்கின்றன. இதன் பயன், அடிக்கடி இயந்திரங்களின் பாகங்களை மாற்றும் நிலைமையையும், அனாவசியமான நேரச்செலவுகளையும், பணச்செலவுகளையும் தடுக்கிறது. எல்லாவற்றைக் காட்டிலும் டிஸ்க்ரால் கருவிகளை உருவாக்குவதில் எளிமையையும் உறுதியையும் இணைக்கிறது. தகடுகளின் இணைப்பு, இயந்திர வேலைப்பாடு, வெட்டுதல், துளையிடுதல் மற்றும் வளைத்தல், எல்லாம் எளிது- உங்களுக்கு வேண்டுமா?

மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்டவர்களுக்கு எழுதவும்:

- டைரக்டர் ஆப் மார்க்கெட்டிங்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  43, செளரங்கி ரோடு, கல்கத்தா-700 071
- ஜாயிண்ட் சீப் ஆப் புரொடக்ஷன் கண்ட்ரோல்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  ஜம்ஷெட்பூர் 831 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் பில்டிங்
  87, மஹாத்மா காந்தி ரோடு
  பம்பாய் 400 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  பேங்க் ஆப் பரோடா பில்டிங்
  16, பார்லிமெண்ட் ஸ்ட்ரீட்
  புது டெல்லி 110 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  20ஜெ, மஹாத்மா காந்தி ரோடு
  பெங்களூர் 560 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி
  லிமிடெட்
  பார்க் சென்டர், 24 பார்க் ஸ்ட்ரீட்
  கல்கத்தா 700 016

TATA STEEL டாடா ஸ்டீல்

TIS 3163R2

✠ குழந்தைவேலு, உளுந்தூர் பேட்டை
கே: முன்னேற்றத்திற்கான வழிகள் யாவும் எனக்குத் தடைபட்டுக் கொண்டே இருக்கின்றனவே?
ப: வாய்ப்பு என்னும் ஒரு கதவு மூடும்போது வேறு ஒரு வாய்ப்புக்கான கதவு தானுகவே திறக்கிறது. மூடிய கதவைப் பார்த்து வருத்தப்பட்டுக்கொண்டிருப்பதை விட்டு, மனத்தை உகப்பிச் சுற்று முற்றும் பார்த்தால் திறந்த கதவைக் கண்டு பிடிக்க முடியும். சோர்வு நம் எதிரி.

✠ இரா. ராமன், ஆத்தூர்
கே: 'புது செருப்பு கடிக்கும்' என்று ஒரு படத்திற்குப் பெயர். நீங்கள் ஒரு படம் எடுத்தால் என்ன பெயர் வைப்பீர்கள்?
ப: 'பர்ஸ் கையைக் கடிக்கிறது' என்று வைப்பேன்!



✠ லட்சுமி செங்குட்டுவன், வேலூர்
கே: ஆண்டி ஏன் பிச்சை எடுக்கிறான்?
ப: சும்மா ஒரு பொழுது போக்குக்காக இருக்கக் கூடும்.

✠ எஸ். லட்சுமி, குரோம்பேட்டை
கே: பசிவந்திட பத்தும் பறந்திடும் என்கிறார்களே, அந்த பத்து என்ன?
ப: எனக்குத் தெரிந்தவரையில் 'பசி வந்திடப் பற்றும் பறந்திடும்' என்பதுதான் சரியான வாசகம். பசி ஏற்பட்டுவிட்டால் பற்றுவது பாசமாவது என்ற பொருளில் தான் இந்தப் பழமொழி உருவாக்கப் பட்டிருக்க வேண்டும்.

✠ வி. தியாகராஜன், கோவை-12.
கே: 'கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி...' இதற்கும் உங்களுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?
ப: அன்று கடுகைத் துளைத்தார்கள். இன்று கடுகு உங்களைத் துளைக்கிறது. (பழிக்குப் பழி, ஹஹ்ஹஹா!)

✠ இரா. பார்த்திபன், வயலூர்
கே: உங்களுடைய அதிர்ஷ்டம் என்று எதைக் கருதுகிறீர்கள்?
ப: எப்போதும் என்னைவிட வயதிலும் அறிவிலும் திறமையிலும் உயர்ந்தவர்களிடமே பழகும் வாய்ப்பு பல வருடங்களாக எனக்குக் கிடைத்து வந்திருப்பதுதான். இதனுல் நான் கற்றுணர்ந்த பாடங்கள் ஆயிரம் ஆயிரம். இப்படிப்பட்ட அதிர்ஷ்டக்காரனுக ஆக்கியதற்கு ஆண்டவனுக்கு நன்றி தெரிவிக்கிறேன். (எனக்குப் புரியாத விஷயம்: என்னை விட அறிவு தேர்ச்சி பெற்றவர்கள், என்னுடன் பழகியது ஏன்?)


✠ ஆ. ஆண்டி, திருப்பத்தூர்
கே: புனைகதைகளை வாழ்க்கையிலிருந்து எழுத வேண்டுமா அல்லது வாழ்க்கையைச் சீர்படுத்த புனைகதைகள் எழுதவேண்டுமா?
ப: வாழ்க்கை கதையாகலாம்; கதை வாழ்க்கையாகலாம். ஆகவேதான் கதைகளில் ஒரு சமுதாய நோக்கு இருக்க வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

✠ எஸ். லாரன்ஸ், ராயபுரம்
கே: நிறைய படித்தவன் தான் கெட்டிக்காரனுக இருக்க முடியுமா?
ப: ஆயிரம் ஆயிரம் விஷயங்களைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பது கெட்டிக்காரத்தனமல்ல. அந்த அறிவைத் தனக்கோ சமூகத்துக்கோ எந்த வகையிலாவது பயனுள்ளபடி உபயோகிப்பதுதான் கெட்டிக்காரத்தனம். நடமாடும் கலைக் களஞ்சியமாக இருந்தால் லாபமல்ல; நமக்குத் தெரிந்தவற்றை மற்றவரும் பகிர்ந்து பயன்பெறச் செய்வது தான் முக்கியம்.

✠ கே. வி. கண்ணன், திருவொற்றியூர்
கே: ஒரு அறிவுரை கூறுங்களேன், சார்.
ப: உங்கள் கஷ்டங்களை மற்றவர்களிடம் சொல்லாதீர்கள். பாதிப் பேர் அதைச் சற்றுக்கூட லட்சியம் பண்ணாமல் கேட்பார்கள். மீதிப் பாதிப்பேர் உள்ளூர மகிழ்ச்சி அடைவார்கள். ஆக யாரும் உங்களுக்கு உண்மையாகக் காது கொடுக்க மாட்டார்கள். இது என் அறிவுரை அல்ல; எப்போதோ படித்து மனத்தில் தங்கிய கருத்து.

ரூ. 5 பரிசு பெறுபவர்:
இரா. பார்த்திபன்
வயலூர், (வ. ஆ.) - 604502





Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran





மேனியழகு மிளிர
இயற்கையின்
கைவண்ணம்

வேப்
சோப்பு

மறைந்திருக்கும்
அழுக்கை ஈர்த்து வெளி
யேற்றி உங்கள்
சருமத்தின் மினு
மினுப்பும் மெருகும்
கலையா வண்ணம்
போற்றிப் பாதுகாக்கிறது
வேப் சோப்பு.

கேரளா சோப்ஸ் &
ஆயில்ஸ் லிமிடெட்
(ஒரு அரசு நிறுவனம்)
கோழிக்கோடு.

FDS KS 2871 TAM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேசியக் காசு

நிகரில்லா வலிமைக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—லேசுடா லேசு.
நீடித்த உழைப்புக்கு—ஏலே லோ
நிர்லான் வலையிருக்கு—வீசுடா வீசு.



நிர்லான்

நைலான் மீன்பிடி வலை மணிக் கயிறு

நிர்லான் ஸிந்தெடிக் ஃபைபர்ஸ் & கெமிக்கல்ஸ் லிட்.,

பதிவு அலுவலகம்:
"நிர்லான் ஹவுஸ்"
254–B, டாக்டர் அன்னி பெஸண்ட் ரோடு.
பம்பாய்-400 025

சென்னை கிளை:
300, மோப்ரேஸ் ரோடு
சென்னை—600 018

லின்டாஸ்-NIR-12-203 TM